கலைக்கதிர்

மலர்—8 ★ நவம்பர் – 1956 ★ இதழ்—11

ஆசிரியர் :

ஜி. ஆர். தாமோதரன்,

B. Sc. Elec., B. Sc. Mech. (Durham), M. I. E. E. (London), A. M. I. E. (India) M. P.

❋

இந்த இதழில் :

இன்பக்கனி	...	திரு. தா. ஏ. ஞானமூர்த்தி	2
பரம்பரை	... ,,	வி. எஸ். இராமசாமி	8
மொழியே நாகரிகத்தின் உயிர்	... ,,	ம. ரா. செயா பூபதி	16
ரப்பர் ஸ்டாம்பு மை	... ,,	X. V. கொரேரா	20
பாட்டில் புரட்சி	... ,,	தெ. பொ. மீ.	22
எது வீண்?	... ,,	ஆர். இருசு	30
இயற்கைக் கூத்து	... ,,	நா. தேசிகன்	32
விஞ்ஞானப் பொய்	... ,,	''பொய்யா மொழி''	37
தமிழருக்குப் புரியாத தமிழ்	... ,,	அருள் செல்வநாயகம்	40
குற்றவாளி	... ,,	அ. இராமகிருஷ்ணன்	45
போரிடும் மீன்கள்	... ,,	போ. ரா. கிருஷ்ணமூர்த்தி	50
'காற்று வீடுகள்'	... ,,	''அச்சாணி''	55
வினுக்களும் விடைகளும்	... ,,	... ...	57
நூலரங்கு	... ,,	... ...	59
இது செய்தி	... ,,	... ...	60
பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை		டாக்டர் மு. வரதராசன்	61

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு அவற்றை எழுதிய நேயர்களே பொறுப்புடையவர்கள்.

விலை 8 அணா

இன்பக் கனி

ஏமாங்கத நாட்டு மன்னனுகிய சச்சந்தன் பல சீரிய பண்புகள் வாய்ந்தவன். அவன் பகைவரை எதிர்க்குங்கால் நஞ்சு நிறைந்த நாகம்போல் சீறுவான். அவன் சீற்றத்திற்குள்ளாகும் பகைவர்கள் அழிந்தொழிவது திண்ணம். நாகத்தால் கடியுண்டவனை நஞ்சு எங்ஙனம் அவன் உயிர் போமளவும் வாட்டி வதைக்குமோ அது போன்று அவனை எதிர்த்தவர்கள் அவன் ஆற்றலுக்குச் சீரழிந்து சிதைந்து படுவர்.

''நச்சு நாகத்தின்
ஆரழ் சீற்றத்தன்''

என்று சச்சந்தன் தன் பகைவர்களைத் தெறும் திறனை ஆசிரியர் சிறப்பிக்கின்ருர்.

தன்னை எதிர்க்கும் பகைவர்பால் இத்துணைக் கடுமை யுடையவனுக இருப்பினும், தனக்கு அஞ்சி அடங்கித் தன்னை அடைகின்றவர்களுக்கு அமிழ்தம்போன்று இனியனுக விளங்குவான். அமிழ்தம் இனிமை நிறைந்தது; அதுமட்டு மன்று, அதனை உண்டவர் சாகார்; எஞ்ஞான்றும் இன்பமுற நிலைத்து வாழ்வர். இத்தகைய அமிழ்தின் தன்மைபோலச் சச்சந்தன் தன்னை அன்போடு அடைந்தவர்களை இன்புறுத்தி, இந்நில வுலகில் நிலையாக வாழச் செய்வான். அவன் கொடை வளம் சிறந்தவன். தன்னுடைய அளப்பரும் ஈகையால் தன் ஆட்சிக் குட்பட்ட நாடுகளில் வறுமையை அறவே ஒழித்து அவற்றை வளம்படுத்தினுன். *'வன்கை யாற்கலி மாற்றி'*னுன் என்று ஆசிரியர் அகமகிழ்ந்து பாடுகிருர். அவனுடைய தண்ணளி அவன் நாட்டின்கண் எங்கும் பரவி நிறைந்திருந்தது. அவன் ஆட்சியில் எவ்விடத்தும் நீதி ஒரு தன்மைத்தாக நின்று நிலவியது. எல்லா உயிரினங்களும் அவன் அருளைப் பெற்று அகமகிழ்ந்து வாழ்ந்தன. அவற்றிற் கெல்லாம் அவன் ஒப்பற்ற தந்தையாக விளங்கினுன். இவ்வுலக முழுமையும் அவன்பால் கொண்ட பேரன்பினுல் அவன் தாள் நிழலிலேயே தங்கி வாழ விரும்பியது.

சச்சந்தன் கலையிலும் சிறப்புற்ருேங்கினுன். அவன் பல நுண்கலைகளை ஆராய்ந்து அறிவிற் சிறந்தோனுய் ஒளிர்ந்தான்: அவன் *''நுண்கலைக்கு இடன்''* என்று ஆசிரியர் அவன் கல்விச் சிறப்பினைப் பாராட்டுகின்ருர்.

இங்ஙனம் வீரத்திலும், அளியிலும், கொடையிலும், கலையிலும் சிறப்புற்ருேங்கிய சச்சந்தன் திருவிலும் ஒப்புயர்வற்று விளங்கினுன். அவனுடைய கட்டழகு காரிகையர்களின் உள்ளங்களைக் கவர்ந்தது. திருமகளே அவனுடைய மலர்ந்த மார்பின்மீது கண்ணுக இருந்தா ளெனின் அவன் அழகைக் கண்ட ஏனைய பெண்டிர் மனம் எத்துணைப் பாடு பட்டிருக்கும்!

தருமன் தண்ணளி
யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர்
மாற்றலின் வாமனே
அருமை யாலழ
கிற்கணை யைந்துடைத்
திரும கன்றிரு
மாநில மன்னனே

இப் பாடல் சச்சந்தன் பண்புகள் அனைத்தையும் மிக நயம்படத் தொகுத் துரைக்கின்றது.

உலகை அருளொடு ஆட்சி புரியும் தன்மையால் சச்சந்தனைத் தருமன் எனச் சிறப்பிக்கலாம். இல்லாதார்க்கு வரையாது வழங்கும் வள்ளன்மையால் வருணன் என வாழ்த்தலாம்; தன்னைப் பகைத்தவர் உயிரைச் செகுக்கும் தன்மையால் கூற்றுவன் எனப் போற்றலாம். கலைக் கிடனுகும் அருமையால் அருகக் கடவுள் என வழுத்தலாம். மகளிர் மனங் கவரும் அழகால் மன்மதன் எனப் பாராட்டலாம். இங்ஙனம் மாநிலம் ஆளும் மன்னனுக்குரிய பண்புகள் அனைத்தும் சச்சந்தன் ஒருங்கே வாய்க்கப் பெற்று ஒப்பற்று விளங்கினன்.

பல மகளிர் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட இப் பெருநில மன்னன் மனதை ஒரு மங்கை கவர்ந்தாள். அவள் விதய தேயத்து அரசன் மகள். விதயதேயத்து வேந்தன் சச்சந்தனின் மாமனுவன். தன் மாமன் மகள் மீது சச்சந்தன் தணியாக் காதல் கொண்டான். விசையை என்பது அவ் வேந்திழையின் பெயர். அவள் எழுதரும் எழில் நலம் வாய்ந்தவள். அவள் பெண்மை நலத்தால் பல பெண்டிரையும் வென்று விளங்கியதால் அவளுக்கு விசையை என்று பெயர் அமைவதாயிற்று என்பர் ஆசிரியர். அவளுடைய கூந்தல் மிக நீண்டு, கடைகுழன்று, கண்டார் கண் இருளும்படி கருமை நிறம் வாய்ந்து விளங்கியது. பிறைமதியும் முழுமதியும் கூடின போல் அவள்தன் அழகுமிக்க நுதலும், முகமும் ஒளிர்ந்தன. இவையும், இன்னும் அவள்தன் கொவ்வைக் கனி போன்ற வாயும் இனிமையான புன்முறுவலும், பொலிவுடைய நீண்ட மூக்கும் அழகுமிக்க விண்ணுலக மங்கையாகிய உருப்பசியையும் உருக்கின. அதாவது 'விசையையின் அழகை நுகர்தற்கு யான் ஆண்பாலாக இல்லையே!'' என்று உருப்பசி வருந்தினுள் என்பதாம். உருப்பசியும் ஆண்மை அவாவும் வண்ணம் உருவப் பொலிவெய்திய விசையையின் எழிலைச் சொல்லால் வடிக்க இயலுமோ? அதனுல் அன்றே அவள்தன் ''*உருவுஞ் சாயலும் ஒப்ப வுரைப்பதற்கு அரிய*'' என்று திருத்தக்க தேவர் தம் இயலாமையை ஒப்புக்கொள்கின்றனர். அவள்தன் புருவம் ஓவியக் கலையில் மிகத் தேர்ந்த ஒருவர் திறம்பட எழுதியதுபோல் எழிலுற வளைந்து நுதலைச் சேர்ந்து விளங்கியது. மன்மதனின் வில் வனப்பினும் அப் புருவ வனப்பு பன்மடங்கு மிக்கு ஒளிர்ந்தது. அவளுடைய சேலனைய விழிகளில் அழகுறச் செவ்வரிகள் படர்ந்திருந்தன. அவ் விழிகள் திருப்பாற் கடலில் திருமால் பள்ளி கொண்டிருக்கும் காட்சியை நல்கின. விழியின் வெண் பகுதி திருப்பாற் கடல் போலவும், கருவிழி அங்குப் பள்ளிகொண் டிருக்கும் திருமால் போலவும் விளங்கின. முற்றத் துறந்த முனிவர்களும் அவ் விழிகளின் அழகிலே ஈடுபட்டுக் கருத் திழந்தனர். மேலும் அவை நஞ்சின் நீர்மையையும், அமிழ்தத்தின் தன்மையையும் ஒருங்கே பெற்று ஒளிர்ந்தன.

''இருநோக்(கு) இவள்உண் கண்
உள்ள(து) ஒருநோக்கு
நோய்நோக்(கு) ஒன்(று)அந்நோய்
மருந்து''

என்று திருவள்ளுவர் கூறுகிறபடி விசையை விழிகளில் நோய் நோக்கும், அந் நோய்க்கு மருந்தாம் நோக்கும் ஆகிய இவ்விரண்டும் அமைந்திருந்தன. அவ் விழிகள் செவியளவு நீண்டும், அதற்கேற்ப அகன்றும் விளங்கின. அவளுடைய காதுகள் மயிரெறி கத்தரிகை

திரு. தா.ஏ. ஞானமூர்த்தி. எம்.ஏ.

போன்ற வடிவினவாய் வள்ளைக் கொடியினும் அழகு மிக்கவையாய் மிளிர்ந்தன. அவற்றின்கண் குண்டலமும், தோடும் வயிர ஒளி வீசிய வண்ணம் எழிலுற அசைந்தாடின. மணிபோலும் திரட்சி பொருந்திய அவளுடைய கழுத்தின்கண் அழகு குடிகொண் டிருந்தது! அக் கழுத்தின் மீது கரிய கூந்தலும் முகமும் பொலிந்த காட்சி, அக் கழுத்து இருளையும், தாமரைப் பூவையும் சுமந்து கொண்டிருப்பது போல் இருந்தது. அவளுடைய தோள்கள் பஞ்சணையைப் போன்ற மென்மையும், மூங்கிலைப்போன்ற திரட்சியும், பளபளப்பும் உடையனவாய் விளங்கின. அவளுடைய குவிந்த விரல்கள் காந்தளின் அரும்பையொத்தன. அகங்கை தாமரை போல் திகழ்ந்தது. அக் கைகள் குங்குலிகம் இடப்பெற்று வனப்புற விளங்கின.

அவளுடைய மார்பகம் கண்டார் மனத்தைப் பருகும் வனப்பினதாய்த் தேமல் பரந்திருந்தது. கங்கையாற்றின் நீர்ச்சுழியினும் கொப்பூழ் வலஞ்சுழித்து அவள்தன் வயிற்றை அணி செய்தது. கண்டார் உண்டோ இல்லையோ என்று ஐயுறும் வண்ணம் அவள் இடைமிக நுண்ணிதாக அமைந் திருந்தது. அவள்தன் துடைகள் யானைத் துதிக்கையினும் ஒழுங்கினவாய், இளம் வாழைத் தண்டு போல் திரண்டு *குறங்கு செறி* என்னும் ஆபரணம் அணியப்பெற்றிருந்தன. அவளுடைய முழந்தாள் பக்கங்களிலே கவிழ்ந்தனவாய் நிகரற்ற அழகோடு விளங்கிற்று; கணைக்கால் அம்பறுத் தூணிபோலத் திரண்டு மூங்கில் போல் இனிய வனப்பினதாய் இருந்தது. அவளுடைய புறவடிகளில் கிண்கிணி, பாடகம், சிலம்பு முதலிய அணிகலன்கள் அணியப்பட் டிருந்தன. அப்புறவடிகள் இரண்டும் அழகு நிறைந்த இளம் யாமையின் புறமுதுகு போல் விளங்கின. அவ்வடிகளின் அழகிலே ஈடுபட்டு அவற்றைப் புகழ்கின்றவர்கள் தம் உணர்வு மாறியப் பெறுவர். அவற்றின் அழகு அத்துணைச் சிறந்தது. அவளுடைய கால் விரல்கள் திருமகளது விரலினழகைக் கொண்டு விளங்கின. சிவந்த செங்கழுநீர் மலரின் உள்ளிதழ்கள் போல் அவ்விரல்கள் கவினுறத் தோன்றின. அவற்றின் நகங்களில் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பட் டிருந்தன. ஒளிவீசும் பொன் மோதிரங்கள் அவற்றின்கண் அணியப்பட் டிருந்தன. அவ்விரல்களை வண்டுகள் பூ என மயங்கி அவற்றை நெருங்கி ஒலிக்கும். அவள் தன் சிறு அடிகள் இலவம் பூ இதழினும் மென்மைத்தன்மை வாய்ந்தவை. அவ்வடிகள் ஒன்பது சாண் தூரம் நடப்பினும் ஒரு காத தூரம் நடந்தவை போன்று மெலிவெய்தும்.

இத்துணைப் பேரெழில் வாய்ந்த விசையையை வேந்தன் இடையறுது நினைந்து நினைந்து ஏங்கினுன். நாளுக்கு நாள் அவள்பால் அவனுக்குக் காதல் கனிந்து வளர்ந்தது. அவள் மீது அவன் கொண்ட காதலின் அளப்பருந் திறத்தை ஆசிரியர் தேவர் மிக அழகுபெற விளக்குகின்ருர்.

"இவ்வுருவு நெஞ்சென்னுங்
கிழியின்மேல் இருந்திலக்கித்(து)
அவ்வுருவு நினைப்பென்னுந்
துகிலிகையால் வருத்தித்துக்
கவ்வியதன் நோக்கினுற்
கண்விடுத்துக் காதனீர்
செவ்விதிற் றெளித்தானுக்
காமப்பூச் சிதறினுன்"

(சிந். 180)

பேரெழில் வாய்ந்த விசையையின் வடிவத்தைத் தன் நெஞ்சாகிய கிழி (துணி) யிலே குறித்து வைத்து, அதனைத் தன் நினைவாகிய எழுதுகோலாலே உறுப்புக்கள் அனைத்தும் விளங்க எழுதி, தான் மேற் கொண்ட தியானத்தாலே அவள் கண்ணைத் திறந்து, காதலாகிய நீரைச் சொரிந்து, அவளைத் தழுவ வேண்டும் என்ற வேட்கையாகிய பூவைச் சிதறினுன். சச்சந்தன் காதலால் அவளையே நினைந்த

வண்ணம் இருந்தான் என்ற கருத்து எத்துணைச் சுவைபட இப்பாடலில் அமைந்துள்ளது காண்மின்!

விசையையைத் தன் இன்னுயிர்த் துணைவியாக அடைய வேண்டும் என்று



அவாவிய சச்சந்தன் தன் விருப்பத்தைத் தன் மாமனும் விசையையின் தந்தையுமாகிய விதய நாட்டரசனிடம் தெரிவித்தான். விசையையின் பெற்றோர்கள் தம் மகள் பருவம் எய்தியதையும், அவளுக்குச் சச்சந்தன் மீது உள்ள அன்பையும் உணர்ந்து அமைச்சரோடு சிந்தித்து முடிவில் அவளைச் சச்சந்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர்.

பொற்கொடி போன்ற விசையையும், பொற்குன்று போல் விளங்கிய சச்சந்தனும் மன்மதன் மலரம்புகளுக்கு இலக்கமாயினர். இருவரும் சிவனும், உமாதேவியாரும் போல் ஒருடம்பாயினர்; காதல் வெள்ளத்தில் ஆழ்ந்து தாழ்ந்தனர். அவர்கள் இருவரும் காதலால் ஒன்றுபட்டுத் திளைத்த திறத்தினைத் திருத்தக்க தேவர் பல பாடல்களிலே சுவைபடத் தீட்டியுள்ளார்.

"பளிக்கறைப் பவழப் பாவை
பரிசெனத் திகழுஞ் சாயல்
களிக்கயல் பொருவ போன்று
கடைசிவந் தகன்ற கண்ணாள்

ஒளிக்கவின் கொண்ட காமத்
தாழுறு கனியை யொத்தான்
அளித்தயில் கின்ற வேந்தன்
அஞ்சிறைப் பறவை
யொத்தான்''

விசையை பவழத்தால் இயன்ற பாவையைப் போன்று ஒளிர்ந்தாள். சச்சந்தன் பளிங்கு (கண்ணுடி)ப் பாறையைப் போல் விளங்கினுன். அடுத்தது காட்டும் தன்மை யுடைய தன்ருே பளிங்கு? பளிங்கருகே பவழம் இருப்பின் பளிங்கு பவழத்தின் தன்மையாகி விளங்கும். அதுபோலச் சச்சந்தன் அருகிலிருந்த விசையை அவனைத் தன்வயமாக்கிக் கொண்டாள் என்ற கருத்தமையப் 'பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழுஞ் சாயல்' என்று ஆசிரியர் கூறும் நயம் நினைந்து நினைந்து இன்புறற்பாலது. காளைகளைக் கவர்வதில் காரிகையர் கண்களே பேராற்றல் வாய்ந்தவை. விசையையின் தடங் கண்கள் கயல்மீன் போலும் பிறழ்ந்து சச்சந்தனுக்குக் காமத்தை மிகுவித்தன. அவனுக்கு விசையை நன்கு கனிந்த ஓர் இன்பக்கனியாகத் தோன்றினுள். சச்சந்தன் அக் கனிந்த கனியை நுகரும் வௌவாலாக விளங்கினுன்.

இவ்வாறு சச்சந்தன் காமவெள்ளத்திலேயே மூழ்க்கிக் கிடந்தான். இதனுல் தன் நாட்டைக் காப்பதாகிய கடமையினின்றும் தவறினுன். அவன் காம வலையிலே சிக்குண்டு சிறிதும் தன் காதலியைப் பிரிய மனமற்றவனுனுன். எனவே அவன் நாட்டை ஆளும் பொறுப்பைத் தன் அமைச்சர்களுள் ஒருவனுன கட்டியங்காரன் என்பவனிடம் ஒப்படைத்தான். சச்சந்தனின் அமைச்சர்களுள் நிமித்திகன் என்பான் பேரறிவாளன்; அருங்குணச் செம்மல்; அடிக்கடி அரசனது கடமைகளை அறிவுறுத்தும் இயல்பினன். ஆனுல் கட்டியங்காரனே அரசன் கருத்திற் கேற்ப ஒழுகும் வஞ்சகன். தனக்கு அடிக்கடி அறிவுறுத்தும் நிமித்திகன்பால் அரசனுக்கு நம்பிக்கைப் பிறக்கவில்லை. தன் கருத்திற்கேற்ப ஒழுகும் கட்டியங்காரன் மீதே அவனுக்கு அன்பு வளர்ந்தது. நண்பர் நன்மை கருதி இடித்துரைக்கும் நல்லோர்பால் நம்பிக்கை இழப்பதும் தன்னலமே கருதி நடிக்கும் உலுத்தர்பால் உறுதியான நம்பிக்கை கொள்வதும் இவ்வுலகில் இன்றும் நாம் காணுத காட்சி அன்று. கட்டியங்காரன் மீது சச்சந்தன் அளவிறந்த அன்பு கொண்டவனுய் அவனே வேந்தனுகி ஆட்சி புரியுமாறு கூறினுன். அதனைக் கேட்ட கட்டியங்காரன் தனக்குள் மகிழ்ச்சி கூர்ந்தான். ஆனுல் அம்மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல், தான் அரசை விரும்பாதவன்போல் நடித்தான்.

''வண்ணப்பூந் தவிசு தன்னை
ஞமலிமேல் இட்ட தொக்கும்
கண்ணகன் ஞாலங் காத்தல்
எனக்கு.........''

என்ருன் கட்டியங்காரன். ''தாங்கள் எனக்கு அரசாட்சியினைத் தருவது, நாயின் மீது அழகுமிக்க பூந்தவிசு இடுவதுபோலாகும்'' என்று சொல்லித் தான் மிகவும் அடக்கமுடையவன் போல் நடித்தான். அதற்கு அரசன் 'எனக்காக நீ அரசியலை ஏற்றுக்கொள்ளவே வேண்டும்' என்று வற்புறுத்தினுன். பிறகு கட்டியங்காரன் அரசன் அடிபணிந்து, ''பகைவரை எல்லாம் கொன்ற வேலோய்! நீ காதலியிடம் கழிபேரின்பம் பெறுக; நான் பழிபிறவாதபடி இவ் வையகத்தைக் காப்பேன்'' என்று கூறி அரசாட்சியை ஏற்றனன்.

வேந்தன் அரசியலைக் கட்டியங்காரனிடம் விடுத்தனன் என்ற செய்தியை நிமித்திகன் கேட்டான். அவன் உடனே அரசனிடம் சென்று ''வேந்தனே! அரசியலை ஒருவன் பொறுப்பில் மட்டும் விடுப்பது நலமன்று; நிலமும் திருவும் நின்னைவிட்டு நீங்கும். நன்கு சிந்திக்க'' என்று நீதியை எடுத்துரைத்தான். அதற்குச் சச்சந்தன், ''கட்டியங்காரன் எனக்கு உயிரனையன்; அவனுக்கு என்னை யொழிய அன்பர்கள் வேறுயார் இருக்கிருர்கள்? அவன் பட்டங்

களைப் பெறுவதற்கு முன்னரேயே எனக்காகப் பொருகளங்களில் மாற்றுரைச் சிதைத்துப் பல போர்களை வென்றுள்ளான். அவனுக்கு யான் சிறப்புச் செய்யக் கடமைப்பட்டவன்; செய்தேன். அவன் எனக்குச் செய்வன செய்க. மனத்திற்குத் துன்பம் தருவனவற்றை நீ கூறவேண்டாம்'' என்று பதிலிறுத்தான். ஆனால் நிமித்திகன் தன் அறிவுரையை நிறுத்தவில்லை. மேலும் மேலும் மன்னனுக்கு இடித்துரைத்தான். இதுவன்றோ நல்லோர் செயல்? அரசன் தன் அழிவைத் தானே தேடிக் கொள்ளும் தன்மையை நினைந்து நினைந்து நிமித்திகன் நெஞ்சம் வருந்தியது. அவன் மன்னனை நோக்கிக் ''காவல! அமைச்சர் சொல்லைக் கேட்டால் அரசனுக்குத் தீங்கு ஒன்றும் வாராது. என் சொல்லைக் கேட்பதற்கு நினக்கு விருப்பமின்றேனும் அருள் கூர்ந்து கேட்பாயாக! பெண்ணின்பமே பெரிதாகக் கொண்டு தம் கடமையை மறந்தவர்கள் எல்லாம் பழியும் பாவமுமே எய்தினர். அவர்கள் மிகப் பலர். பிரமன் திலோத்தமையின் மீது காமங் கொண்டதனால் நான்கு தலைகள் பெற்று, பல்லோர் பழிக்கும் ஆளாகித் தன் பதவியையும் இழந்தான். தான் கங்கையை மணந்த செய்தியை உமாதேவி தெரிந்து ஊடியபோது அவளை மகிழ்வித்தற் பொருட்டுச் சிவன் அவளுக்குத் தன் திருமேனியிற் பாதியைக் கொடுத்துத் தீராப்பழியைத் தேடிக்கொண்டான். யமுனை யாற்றில் நீர் விளையாடிக் கொண்டிருந்த கோவியருடைய ஆடைகளை யெல்லாம் கவர்ந்து கொண்டு கரையிலுள்ள குருந்த மரத்தில் ஏறி நின்ற கண்ணபிரான், தன் தமையன் பலராமன் அங்கு வருவதை அறிந்து, தன் செய்கையை அவன் கண்டால் தனக்கு மிக்க பழி உண்டாகும் என்றெண்ணி அங்கிருந்த மரத்தை முறித்து யமுனையாற்றில் வீழச் செய்தான். மரம் நீரில் விழுந்ததும் ஆடைகளைப் பறிகொடுத்து அங்கு நின்ற கோவியர்கள் மரத்தின் மீது இருந்த தம் ஆடைகளை எளிதில் எடுத்துக் கொண்டனர். காமத் தீயால் மிகவும் வாடி நின்ற ஓர் ஆண் கழுதையைக் கண்டு புத்தபெருமான் அருள் கூர்ந்து தான் பெண் கழுதையாய்ச் சென்று ஆண்கழுதையின் காமத்தைத் தணிவித்தார். எத்துணை இழிதகையது இக்காமம்! பாண்டவர் ஐவரும் ஒருத்தியைத் தம் பத்தினியாகக் கொண்டு நீங்காப் பழி எய்தினர். இவர் தம் பழியை யாரால் போக்க முடியும்? எனவே மன்னவா! இத்தகைய பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகாமல் நடுவு நிலைமையில் நின்று உலகம் ஓம்புதலே நல்லது'' என்றான்.

ஆனால் நிமித்திகனின் இவ் அறிவுரைகளைச் சச்சந்தன் சிறிதும் ஏற்கவில்லை. அருகிருந்த உருத்திரதத்தன் என்பவன் அதைக்கண்டு மன்னனை நோக்கி, ''இந்திரனும் அமைச்சர் சொற் பொருளை மேற்கொண்டு நடப்பான். அவனைப் போல நீயும் அறிவு நிறைந்தவன். ஆனால் இப்போது நிமித்திகன் கூறும் நல்லுரைகளை ஏற்க மறுக்கிறாய். இதனால் உனக்கு அழிவு நேரும். நின் காதலியும் அவலம் அடைவாள்'' என்றான்.

''கருவாய்ப் பதிகின்ற பொழுதே அவரவர்களுக்குப் போகமும் வாழுநாளும் அளக்கப் பெறுகின்றன. நீ இதைக் குறித்து எனக்குச் சொல்ல வேண்டியதில்லை'' என்று மன்னன் பதிலுரைத்தான். எவ்வளவு இடித்துரைத்தும் மன்னன் மனம் சிறிதும் மாறுமையைக் கண்டு நிமித்தகன் முடிவில் ''வேந்தே! நீ வெறுப்பினும் இடித்துக் கூறல் அமைச்சர்க்கு இயல்பாகும் என்ற அறநூல் வழக்கையொட்டி யான் உனக்கு இத்துணை நேரம் விரித்துக் கூறினேன். இனி நீ உன் காதலியைச் சேர்ந்து இன்புறுக! நான் போகிறேன்'' என்று நிமித்திகன் மனமுடைந்து அகன்றான்.

முற்பிறப்பின் தீவினைப் பயனாய் மன்னன் மனம் நன்னெறிப் படரவில்லை. அவன் தன் காதலியோடு இடையறாது இணைந்ததனால் போகக் கடலில் ஆழ்ந்து தாழ்ந்தான். சச்சந்தனும் விசையையும் நாகரைப் போல் இன்பம் திளைத்தனர். விசையை கருவுற்றாள்.

—★—

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

பரம்பரை

திரு. V. S. இராமசாமி, M. A.

✱

முதலில் நிறக்குருடான பெண்ணுக்கும் நிறக்குருடற்ற ஆணுக்கும் நடக்கும் மணத்தை எடுத்துக்கொள்வோம். அந்தப் பெண் உற்பத்தி செய்யும் முட்டை ஒவ்வொன்றிலும் காணப்படும் இரண்டு X களும் நிறக்குருடுப் பண்பியக்கியைக் கொண்டவை. இந்த முட்டை கருமுட்டையாகவும், கழிவு முட்டையாகவும் பிரியும் பொழுது ஒவ்வொன்றும் நிறக்குருடு பண்பியக்கியைக் கொண்ட ஒரு X ஐப் பெறுகிறது. ஆண் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு விந்தணுவும் சாதாரண X ஐயும் Y யையும் கொண்டிருக்கிறது. குன்றல் பகுப்பு முறையில் விந்தணு இரண்டாகப் பிரியும் பொழுது பிரிந்து செல்லும் ஒரு விந்தணுவில் சாதாரண X ம் மற்றொன்றில் Y யும் செல்கின்றன. ஆகையால் விந்தணுவில் இரண்டு வகையைக் காண்கின்றோம். ஒன்றில் சாதாரண X ம், மற்றொன்றில் Y ம் இருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு கருமுட்டையிலும் ஒரு நிறக்குருடு X இருக்கிறது. நிறக்குருடு X ஐக் கொண்ட கருமுட்டை சாதாரண X ஐக் கொண்ட விந்தணுவோடு சேர்ந்தால் அதனால் உண்டாகும் கருவில் ஒரு நிறக்குருடு X ம் ஒரு சாதாரண X ம் இருக்கும். ஆகையால் இக்கரு நிறக்குருடை உள்ளடக்கிய ஆனால் சாதாரணப் பார்வை யுள்ள பெண்ணாகப் பரிணமிக்கும். நிறக்குருடு X ஐக் கொண்ட கருமுட்டை Y ஐக் கொண்ட விந்தணுவோடு சேர்ந்து உண்டாக்கும் கருவில் ஒரு நிறக்குருடு Xம் ஒரு Y யும் இருக்கும். ஆகையால் இக்கரு நிறக்குருடு ஆணாகத்தான் பரிணமிக்கும். எனவே இத்தம்பதிகளுக்குப் பிறக்கும் பெண்கள் எல்லாம் நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வை யுடைய பெண்களாகவும், ஆண்களெல்லாம் நிறக்குருடர்களாகவும் இருப்பார்கள். [படம் 1]

இரண்டாவதாக நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வையுள்ள பெண்ணுக்கும் நிறக்குருடான ஆணுக்கும் நடக்கும் திருமணத்தை எடுத்துக் கொள்வோம். இப்பெண் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு முட்டையிலும் ஒரு நிறக்குருடு X ம் ஒரு சாதாரண X ம் இருக்கின்றன. இம்முட்டை குன்றல் பகுப்பு முறையில் இரண்டு வகையாகப் பிரியலாம். ஒரு வகையான பிரிவில் கருமுட்டைக்கு நிறக்குருடு X ம் கழிவு முட்டைக்குச் சாதாரண X ம் செல்கின்றன. இன்னொரு வகையான பிரிவில் கருமுட்டைக்குச் சாதாரண Xம் கழிவு முட்டைக்கு நிறக்குருடு X ம் செல்கின்றன. ஆகையால் இப்பெண்ணிடத்தில் காணப்படும் கருமுட்டைகள் இரண்டு வகையாக இருக்கின்றன. ஒரு வகைக் கருமுட்டையில் நிறக்குருடு X ம் மற்றொரு வகைக் கருமுட்டையில் சாதாரண X மாக இருக்கின்றன. ஆண் உற்பத்தி செய்யும் விந்தணு ஒவ்வொன்றிலும் ஒரு நிறக்குருடு X ம் Y ம் இருக்கின்றன. குன்றல் பகுப்பு முறையில் விந்தணு இரண்டாகப் பிரியும் பொழுது ஒரு விந்தணுவிற்கு நிறக்குருடு X ம் மற்றொன்றுக்கு Y ம் செல்கின்றன. ஆகையால் இங்கே விந்தணுவிலும் இரண்டு வகையைக் காண்கின்றோம். ஒன்றில்

[படம் 1]



நிறக்குருடு X ம் மற்றொன்றில் Y ம் இருக்கின்றன. இவ்விரு வகைப்பட்ட விந்தணுக்களும் கருமுட்டைகளும் நான்கு வகையில் கரு உண்டாக்கலாம். (1)நிறக்குருடு X ஐக் கொண்ட கரு முட்டையும் நிறக்குருடு X ஐக் கொண்ட விந்தணுவும் சேர்ந்தால் அம்மாதிரி உண்டாகும் கருவில் இரண்டு நிறக்குருடு X கள் காணப்படும். இக்கரு வளர்ச்சி யடைந்தால் அது நிறக்குருட்டுப் பெண்ணாகும். (2) நிறக்குருடு X ஐக் கொண்ட கருமுட்டை Y ஐக் கொண்ட விந்தணுவுடன் சேர்ந்து கருஉண்டாக்கினுல் அக் கருவில் ஒரு நிறக் குருடு Xம் Yம் இருக்கின்றன. இக் கரு வளர்ச்சியில் நிறக்குருடு ஆணுகும். (3) சாதாரண X ஐக் கொண்ட கருமுட்டை நிறக்குருடு X-க் கொண்ட விந்தணுவுடன் சேர்ந்து கரு உண்டாக்கினுல் அக்கருவில் ஒரு நிறக் குருடு X ம் ஒரு சாதாரண X ம் இருக்கும். இக்கரு வளர்ந்தால் நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வையுடைய பெண்ணுகும். (4) சாதாரண X ஐக் கொண்ட கரு முட்டையும் Y ஐக் கொண்ட விந்தணுவும் சேர்ந்து உண்டாக்கும் கருவில் ஒரு சாதாரண X ம் Y ம் இருக்கும். இக்கரு சாதாரணப் பார்வையுள்ள ஆணுகப் பரிணமிக்கும். எனவே இத்தம்பதிகளுக்குப் பிறக்கும் பெண்கள் நிறக்குருடுள்ளவர்களாயும் நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வை யுள்ளவர்களாயு மிருப்பார்கள். ஆண்களில் நிறக் குருடர்களும் சாதாரணப் பார்வை யுள்ளவர்களு மிருப்பார்கள். [படம் 2]

குறிப்பு:—

நிறக்குருடு பண்பியக்கியைக் கொண்ட உயிர்த்திரி

நிறக்குருடற்ற உயிர்த்திரி

[படம் 2]



ஆகையால் கீழே கண்டமாதிரி இப்பெண் இரண்டு வகையான கருமுட்டைகளையும் இந்த ஆண் இரண்டு வகையான விந்தணுக்களையும் உற்பத்தி செய்கிறார்கள்.

→ நிறக்குருடு X-ஐக் கொண்ட கருமுட்டை

→ சாதாரண X-ஐக் கொண்ட கருமுட்டை

→ நிறக்குருடு X-ஐக் கொண்ட விந்தணு

→ Y-ஐக் கொண்ட விந்தணு

இவ்வகை விந்தணுக்களும் கருமுட்டைகளும் இணைவதினால் கீழே கண்ட பண்புகளைக் கொண்ட குழந்தைகள் பிறக்கும்.



சாதாரணப் பார்வை யுள்ள பெண் நிறக் குருடனை மணம் செய்துகொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் ஆண்களெல் லாம் சாதாரணப் பார்வையுள்ளவர்களாக இருப்பார்கள். பெண்களெல்லாம் நிறக் குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வை யுடையவர்களாக இருப்பார்கள். இத் தன்மை யுடைய குழந்தைகள் எவ்வாறு பிறக்கின்றன என்பதைச் சுருக்கமாகக் கூறுவதானால் இந்த ஆண் உற்பத்தி செய் யும் விந்தணுவில் ஒரு நிறக்குருடு X ம் ஒரு Y யும் இருக்கின்றன. இவ்விந்தணு குன்றல் பகுப்பு முறையில் இரண்டாகப் பிரியும்பொழுது ஒரு விந்தணு நிறக்குருடு X ம் மற்றொன்று Yயும் பெற்றிருக்கும். இப் பெண் உற்பத்தி செய்யும் முட்டையில் இரண்டு X களும் சாதாரணமானவை. கரு முட்டையாகவும் கழிவு முட்டையாகவும் இது பிரியும் பொழுது ஒவ்வொன்றிலும் ஒரு சாதாரண X இருக்கும். ஆகையால் இந்தப் பெண் ஒரே வகையான கருமுட்டை களையே உற்பத்தி செய்கிறாள். ஆண் இரண்டு வகையான விந்தணுக்களை உற் பத்தி செய்கிறான் [ஒன்றில் நிறக்குருடுXம் மற்றொன்றில் Y ம் இருக்கும்.] சாதாரண Xஐக் கொண்ட கருமுட்டை நிறக்குருடு Xஐக் கொண்ட விந்தணுவோடு சேர்ந்து கரு உண்டாக்கினால் அக்கருவில் ஒரு நிறக்குருடு X ம் [ஆணிடத்திலிருந்து வந் தது] ஒரு சாதாரண X ம் [பெண்ணிடத்தி லிருந்து வந்தது] இருக்கின்றன. இக்கரு நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வையுள்ள பெண்ணாக வளரும். இதே கருமுட்டை Y ஐக் கொண்ட விந்தணு வோடு சேர்ந்து கரு உண்டாக்கினால் அக் கருவில் ஒரு சாதாரண X ம் ஒரு Y யும் இருக்கும். இக்கரு சாதாரணப் பார்வை யுள்ள ஆணாகும். [படம் 3]

[படம் 3]



மேலே கூறிய மூன்ருவது திருமணத்திலிருந்து முக்கியமான சிலவற்றை அறியலாம். [1] ஆண் தன்னிடமுள்ள ஒரேஒரு Xஐத் தன்னுடைய மகளுக்குத்தான் கொடுக்கிருன். ஆனுல் மகனுக்குக் கொடுப்பதில்லே. இதனுல்தான் இத்தம்பதிகளுக்குப் பிறக்கும் மகன் தந்தையைப் போல் நிறக்குருடனுக இருப்பதில்லே. தந்தை தன்னுடைய நிறக்குருடு X ஐ மகனுக்குக் கொடுத்திருந்தால் அவன் நிறக்குருடனுக வல்லவா இருப்பான்? மகன் நிறக்குருடனுக இல்லாததால் தந்தையிடத்திலிருந்த நிறக்குருடு X மகளுக்குத்தான் சென்றிருக்க வேண்டும். இதிலிருந்து ஆண் தன்னிடமுள்ள ஒரே ஒரு X ஐ மகளுக்குத்தான் கொடுக்கிருன் என்பது விளங்கும். [2] பெண் தன்னிட முள்ள இரண்டு X களில் ஒன்றைத் தனது மகனுக்கும் மற்ருென்றைத் தன்னுடைய மகளுக்குமாகக் கொடுக்கிருள். ஆதலால் மகனிடமுள்ள ஒரே ஒரு X தாயிடத்திலிருந்துதான் வருகிறது. தந்தையிடத்திலிருந்து அவன் பெறுவது Y மட்டுந்தான். இந்த X தாயினிடத்தில் எத்தகைய பண்புகளே அளித்தனவோ அதே பண்புகளே மகனுக்கும் கொடுக்கும். இதனுல்தான் இத்தம்பதிகளுக்குப் பிறக்கும் ஆண் சாதாரணப் பார்வை யுடையவனுக இருக்கிருன். ஆகையால் இனப் பிணைப்புப் பண்புகளேப் பொறுத்தவரையில் மகன் தாயைப் போலவே இருப்பான். [3] மகள் தன்னிடமுள்ள இரண்டு X களில் ஒன்றைத் தந்தையிடத்திலிருந்தும் மற்ருென்றைத் தாயிடத்திலிருந்தும் பெறுகிருள். இதே முறையில் இத்தம்பதிகளுக்குப் பிறக்கும் பெண் நிறக்குருடு X ஒன்றைத் தந்தையிடத்தி லிருந்தும் சாதாரண X ஒன்றைத் தாயிடத்திலிருந்தும் பெறுவதால்தான் நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வையுள்ளவளாக இருக்கிருள். [4] தந்தையிடத்தி லிருந்து பெற்ற இந்த நிறக்குருடு X மகளிடத்திலிருந்து பேரனுக்குச் செல்லலாம் அல்லது பேத்திக்குச் செல்லலாம். பேரனுக்குச் சென்ருல் அவன் நிறக்குருடனுக இருப்பான். இதனுல் இவன் தாத்தாவை ஒத்திருப்பான். பேத்திக்குச் சென்ருல் அவள்

தனது தந்தையிடத்திலிருந்து பெறும் இன்னொரு X ன் தன்மையைப் பொறுத்து அவளின் தன்மை மாறுபடும். அவளின் தந்தை நிறக்குருடனுக இருந்தால் இவளும் நிறக்குருடாக இருப்பாள். அல்லது அத் தந்தை சாதாரணப் பார்வையுடையவனுக இருந்தால் இவள் நிறக்குருடை உள்ளடக்கிய ஆனுல் சாதாரணப் பார்வையுடையவளாக இருப்பாள். ஆகையால் தந்தை யிடத்தில் காணப்படுகின்ற நிறக்குருடு மகள் மூலம் பேரனுக்கோ அல்லது பேத்திக்கோ செல்கிறது. ஆனுல் மகன் மூலமாகத் தந்தை தன்னுடைய நிறக்குருடைப் பேரனுக்குக் கொடுப்பதில்லை.

நான்காவது திருமணத்தை எடுத்துக் கொள்வோம். இதில் நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வை யுள்ள பெண் சாதாரணப் பார்வையுள்ள ஆணை மணம் செய்து கொள்கிருள். இபபெண், இரண்டாவது திருமணத்தில் காணப்படும் பெண்ணைப் போல் இரண்டு வகையான கரு முட்டைகளை உற்பத்தி செய்வாள். அவை ஒன்றில் நிறக்குருடு X இருக்கும். மற்றொன்றில் சாதாரண X இருக்கும். ஆணும் இரண்டு வகையான முதிர்ந்த நிலை விந்தணுக்களை உற்பத்தி செய்வான். ஒன்றில் சாதாரண X ம் மற்ரென்றில் Y ம் இருக்கும். இவ்விரு வகையான கரு முட்டைகளும் விந்தணுக்களும் கீழே கண்டவாறு நான்கு வகையான கரு உண்டாக்கும்.

1. நிறக்குருடு X ஐக் கொண்ட கரு முட்டை + சாதாரண X ஐக் கொண்ட விந்தணு = ஒரு நிறக்குருடு X ஐயும் ஒரு சாதாரண X ஐயும் கொண்ட கரு. இக்கரு நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வை யுள்ள பெண்ணுகும்.

2. ஒரு நிறக் குருடு X ஐக் கொண்ட கருமுட்டை + ஒரு Y ஐக் கொண்ட விந்தணு = ஒரு நிறக்குருடு X யும் ஒரு Y யும் கொண்ட கரு. இக்கரு நிறக்குருடுள்ள ஆணுகும்.

3. ஒரு சாதாரண X ஐக் கொண்ட கரு முட்டை + ஒரு சாதாரண X ஐக்கொண்ட விந்தணு = இரண்டு சாதாரண X களைக் கொண்ட கரு. இக்கரு சாதாரணப் பார்வை யுள்ள பெண்ணுக வளரும்.

4. ஒரு சாதாரண X ஐக் கொண்ட கரு முட்டை + ஒரு Y ஐக் கொண்ட விந்தணு = ஒரு சாதாரண X ஐயும் ஒரு Y யும் கொண்ட கரு. இக்கரு சாதாரணப் பார்வையுள்ள ஆணுக வளரும்.

[படம் 4]



ஆகையால் கீழே கண்டமாதிரி இப்பெண் இரண்டு வகையான கருமுட்டைகளையும் இந்த ஆண் இரண்டு வகையான விந்தணுக்களையும் உற்பத்தி செய்கிறார்கள்.

→ சாதாரண X-ஐக் கொண்ட கருமுட்டை

→ நிறக்குருடு X-ஐக் கொண்ட கருமுட்டை

→ சாதாரண X-ஐக் கொண்ட விந்தணு

→ Y-ஐக் கொண்ட விந்தணு

இவ்வகை விந்தணுக்களும் கரு முட்டைகளும் இணைவதினால் கீழ்க்கண்ட பண்புகளைக்கொண்ட குழந்தைகள் பிறக்கும்.



எனவே இத்தம்பதிகளுக்கு நான்கு வகையான பிள்ளைகள் பிறப்பார்கள். பிறக்கும் பெண்களில் நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வை யுடையவர்களுமிருப்பார்கள். சாதாரணப் பார்வையுடையவர்களாயு மிருப்பார்கள். பிறக்கும் ஆண்களில் நிறக்குருடர்களு மிருப்பார்கள். சாதாரணப் பார்வை யுடையவர்களு மிருப்பார்கள்.

ஐந்தாவதாகச் சாதாரணப் பார்வை யுடைய பெண்ணுக்கும் சாதாரணப் பார்வையுள்ள ஆணுக்கும் மணம் நடந்தால் அவர்களுக்குப் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் சாதாரணப் பார்வை யுடையவர்க ளாகவே இருப்பார்கள்.

ஆருவதாக, நிறக் குருடான பெண்ணுக்கும், நிறக்குருடான ஆணுக்கும் நடக்கும் திருமணத்தினுல் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் நிறக்குருடாகவே இருக்கும்.

ஆண் நிறக்குருடாக வேண்டுமானுல் அவனுடைய தாய் நிறக்குருடாகவோ, அல்லது நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வையுடையவளாகவோ இருந்தால் போதும். ஆனுல் பெண் நிறக்குருடாக வேண்டுமானுல் அவளுடைய தந்தை நிறக்குருடனுகவும் தாய் நிறக்குருடை உள்ளடக்கியவ ளாகவோ அல்லது நிறக்குருடாகவோ இருக்கவேண்டும். ஆனுல் நிறக்குருடான ஆணுக்கும் நிறக்குருடான பெண்ணுக்கும் நடக்கும் திருமணமோ' அல்லது நிறக்குருடான ஆணுக்கும் நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வையுள்ள பெண்ணுக்கும் நடக்கும் திருமணமோ அபூர்வம். ஆதலால் நிறக்குருடைக் கொண்ட பெண்கள் பிறப்பதும் அபூர்வம். நடக்கும் திருமணங்களெல்லாம் நிறக்குருடான ஆணுக்கும் சாதாரணப் பார்வையுள்ள பெண்ணுக்கும் நடக்கும் திருமணமாக இருக்கும், அல்லது நிறக்குருடான பெண்ணுக்கும் சாதாரணப் பார்வையுள்ள ஆணுக்கும் நடக்கும் திருமணமாக இருக்கும், அல்லது நிறக்குருடை உள்ளடக்கிய சாதாரணப் பார்வையுள்ள பெண்ணுக்கும் சாதாரணப் பார்வையுள்ள ஆணுக்கும் நடக்கும் திருமணமாக இருக்கும். இத்தகைய திருமணங்களினுல் நிறக்குருடான ஆண்கள் பிறப்பதற்குத்தான் வாய்ப்பு அதிகமிருக்கிறது.

முற்றும்.

தமிழகத்தின் அறிவுப்பணி முன்னணியில் முன்னிற்பது

கலைக்கதிர்

ஆண்டுச் சந்தா ரூ. 5-0-0

(அரையாண்டுச் சந்தா ஏற்பதில்லை)

விவரங்கட்கு:

கலைக்கதிர் — பீளமேடு — கோவை.

மொழியே நாகரிகத்தின் உயிர்

திரு. ம. ரா. செயா பூபதி, எம். ஏ.

மொழியின் கதையை நாகரிகத்தின் கதை என்று சொல்லலாம். மொழியின் தோற்றமே நாகரிகத்தின் தோற்றம். மொழியின் வளர்ச்சி நாகரிகத்தின் வளர்ச்சி. மொழியின் வீழ்ச்சி நாகரிகத்தின் வீழ்ச்சி. சுருங்கச் சொல்லின மொழியே நாகரிகத்தின் உயிர். மொழி இன்றேல் நாகரிகம் இல்லை.

மொழியை அமைத்துக் கொள்ளும் ஆற்றல் மனிதனுக்கு இல்லை என்று கொள்ளலாம். அப்போது தமிழ் நாடும், உலகமும் எப்படி இருக்கும்? ஒரே காடுதான்; மனித விலங்குகள் உடை இல்லாமல் திரிந்துகொண் டிருக்கும். தாட்சுமஃஆல் போன்ற அழகான மாளிகைகளையோ, மாமல்லபுர ஒற்றைக் கல் தேர்களையோ காண முடியாது; திருக்குறள், சிலப்பதிகாரம், விவிலியம், குரான் போன்ற நூல்களைப் பெற்றிருக்க முடியாது. வான விமானங்களின் நிழல்கூடத் தரையில் விழுந்திராது. தொலைபேசி, தொலைக் காட்சி, வானொலி எதுவுமே தோன்றியிருக்க இயலாது. உலக மக்கள் அனைவரும் தற்காலக் குரங்குகள் போன்றே இன்றும் வாழ்ந்துகொண்டு இருப்பர். இந்த நிலையில் இருந்து, இன்றுள்ள நிலைக்கு மனிதனைப் படிப்படியாக உயர்த்திக் கொண்டு வந்தது எது? மொழி; மொழியைத் தவிரவேறு ஒன்றும் இல்லை.

மனிதனைப் போலவே மொழியும் என்றும் மாறிக் கொண்டும், வேறுபட்டும் வருகின்றது. இலக்கணம் என்பது மொழி எப்படி எப்படி உருவானது என்பதை விளக்குவது. இவ் விலக்கணம் மொழியைப் பேசுகின்ற மக்கள் பற்றியும், அவர்கள் நாகரிகம் பற்றியும் நமக்கு அறிவிக்கும்போது, அதன் மதிப்பு உயர்கின்றது. இலக்கணம் என்றால் விளக் கெண்ணெய் என்று பலர் எண்ணுகின்றனர்; வெறுக்கின்றனர்; இலக்கணம் சாரம் இல்லாத சக்கை என ஒதுக்குகின்றனர். ஆனால், அவ் விலக்கலணமே மக்கள் பற்றியும், அவர்கள் நாகரிகம் பற்றியும் அறிவிக்கும்போது, எல்லோர் உள்ளத்தையும் கவரும் அழகிய பூங்காவாக மாறிவிடுகின்றது.

மொழிக்கும் இலக்கியத்துக்கும் வேறுபாடு உண்டு. மொழி பொதுச் சொத்து; இலக்கியம் உரிமைச் சொத்து. மொழியைக் குடியாட்சிக்கு ஒப்பிடலாம். இலக்கியமோ மேன்மக்கள் ஆட்சியைப் போன்றது. ''எல்லோர்க்கும் ஒத்த உரிமை நல்கும் குடியாட்சி முறை (Democracy) அரசியலில் இன்னும் ஒரு கொள்கையாக நிலவுகின்றதே அல்லாமல், நிலை பெற்றுவிட்ட அமைப்பாக, உருப் பெறவில்லை. உருப் பெற முடியுமோ என்று ஐயுறுவோரும், முடியாது என்று மறுப்போரும் உள்ளனர். அதன் நிலைமை இவ்வளவிலேயே உள்ளது. ஆனால், மொழித் துறையில்—மொழியின் வாழ்வில்—மொழியின் ஆட்சியில் இந்த முறை தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றது.'' என்று மொழி

வல்லுநர் மு. வ. அவர்கள், தம் 'மொழி நூலி'ன் முன்னுரையில் கூறியுள்ளது நோக்கத் தக்கது. நுண் உணர்வும், நுண் அறிவும் மிக்க ஒரு சிலரே இலக்கியத் துறையில் ஆட்சி செய்ய முடியும். ஆனால் மொழியிலோ பிச்சை எடுக்கும் ஆண்டி முதல், பெரு நிலத்தைக் கட்டியாளும் அரசன் வரை எல்லோரும் ஆட்சி செய்கின்றனர்.

மொழியைப் பேசுகின்ற ஒவ்வொருவரும், தாம் பேசுகின்ற மொழி வளர — வாழ — மாறச் சிறிது துணை செய்கின்றனர். ஒருவர் பேசும் முறை, வேறொருவர் பேசும் முறையி லிருந்து சிறிது அளவாவது வேறுபட்டே இருக்கும். இத்தகைய மொழிச் சிறப்பு இயல்புகளைப் பெற்றோர் தம் குழந்தைகட்குப் புகட்டுகின்றனர்; ஆசிரியர் தம் மாணவர்க்குப் புகட்டுகின்றனர்; தலைவர்கள் தம்மைப் பின்பற்றுவோர்க்குப் புகட்டுகின்றனர். பொது மக்கள் ஒருவர்க் கொருவர் புகட்டிக் கொள்கின்றனர். "மொழி ஒரு நகரம். அதைக் கட்ட ஒவ்வொரு மனிதனும் ஒரு கல் கொண்டு வந்துள்ளான்," என்பது அறிஞர் எமர்சனின் கூற்று.

மக்கள் இனம் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்துக் கூட்டுப் பயிர் செய்வதற் கேற்ற சிறந்த பண்ணை மொழி. நிலத்தில் பிறந்த மனிதனுக்குத் தான் பிறந்த அளவு இடம் கூடச் சொந்தம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அத்தகையவனுக்கும் மொழியில் சொத்துரிமை உண்டு. மொழியில் அவனுக்குள்ள சொத்துரிமையை மறுக்க யாராலும், எந்தச் சட்டத்தாலும் இயலாது; மொழியை அவன் பயன்படுத்திக் கொள்வதை எதனாலும் தடுக்க முடியாது! எனவே, சிறிது கூர்த்த மதிகொண்டு ஆராய்ந்து பார்த்தால், மொழி ஒரு சமூக விஞ்ஞானம் (Social Science) என்பது விளங்கும். மொழி மனித சமூகத்தால் கூட்டுறவு முறையில் உண்டாக்கப்பட்டது; மனிதச் சமூகம் முழுவதற்கும் பயன்படும் சிறந்த கருவி.

மொழியின் சிறப்பு இத்துடன் முடிந்து விட வில்லை. பேச்சு மொழி, எழுத்து மொழி என்ற ஈர் உருக்களிலும், மனித அறிவை வளப்படுத்த, மொழி உறுதுணையாகின்றது. மக்கள் ஒத்துழைப்பு இல்லாவிடில் நாகரிகம் இல்லை. மொழி இல்லாவிடில் மக்கள் ஒத்துழைப்பு இல்லை. நாகரிகம் வளர மக்கள் ஒத்துழைப்புத் தேவை; மக்கள் கூட்டுழைப்புக்கு மொழி தேவை.

சென்ற தலைமுறையில் வாழ்ந்த நமது பாட்டன்மார் அனுபவங்கள் நமக்கு எப்படிக் கிடைத்தன? திருவள்ளுவர் எழுதிய குறள், இளங்கோ ஆக்கிய சிலம்பு நமக்கு எப்படி வந்தன? எல்லாம் மொழியால். மொழியைத் துணையாகக் கொண்டு ஓர் இனம் மற்றோர் இனத்துக்கும், ஒரு காலம் மற்றொரு காலத்துக்கும், ஒரு தலைமுறை மற்றொரு தலை முறைக்கும் தம் அனுபவங்களை அறிவிக்கின்றன. இலக்கியத்தின் வாயிலாகவோ, கல் வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள் வாயிலாகவோ பழங் காலச் செய்திகள், அனுபவங்கள் அறிவிக்கப்படலாம். மொழி இல்லா விட்டால், இது முடியுமா? முடியாது. மொழியோடு நேர்த் தொடர்பு இல்லாத நடனம், இசை, சிற்பம் முதலியவற்றையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டுமானால், மொழியின் துணையையே நாட வேண்டி இருக்கிறது. அகன்ற பொருளில், மேற்கூறப்பட்ட கலைகளும் மொழியின் ஒரு பகுதியாகவே அடங்கும். மேலும் மொழி இல்லாவிட்டால் இக்கலைகள் எல்லாம் தோன்றி யிருக்கவே முடியாது. இருவர் அல்லது இருவர்க்கு மேற்பட்டவர் கூட்டுழைப்பால்தான் மேற்கூறிய கலைகள் தோன்றி வளர முடியும். இக் கூட்டுழைப்பு, மொழி இல்லாத இடத்தில் நடைபெற இயலாது.

ஒருவர் எண்ணத்தை மற்றவர் அறிவதற்குக் கருவியாக உதவும் மொழி இல்லா திருந்தால், எகிப்து நாட்டுப் பிரமிடுகள் (Pyramids of Egypt) தோன்றியிருக்க முடியாது; காதிக்கு கிருத்துவக் கோயில்கள் (Gothic Cathedrals) எழுந்திருக்க இயலாது; காவிரிப்பூம் பட்டினம் போன்ற பழம்பெரும் நகரங்கள் உருப் பெற்றிருக்க முடியாது. சென்னை போன்ற தற்கால நகரங்களையும் நாம் காண இயலாது. உண்மையில், மொழி என்ற ஒப்பற்ற கருவி மனிதனுக்குக் கிடைத்திரா விட்டால், அவன் காட்டு மனிதனுகவே இன்றும் காட்சி தருவான்; சக்கி முக்கிக் கல்லையும், வில் அம்புகளையும் தவிர வேறு எதையும் அவனுல் செய்திருக்க முடியாது.

ஒரு முறை விண்ணுடு செல்ல மக்கள் அனைவரும் ஓர் உயர்ந்த கோபுரம் அமைத்தார்கள். இறைவன் இதை விரும்பவில்லை; எனவே, ஒருவர் மொழி மற்றவர்க்குப் புரியாதபடி செய்துவிட்டார். உடனே மக்கள் இடையே குழப்பம் வளர்ந்தது. கோபுரம் அரைகுறையாக நின்றுவிட்டது. இது விவிலிய நூலில் வரும் பேபல் கோபுரக் (Tower of Babel) கதை. தற்காலத்திலும் ஒருவர் மொழி மற்றவர்க்குப் புரியாது போனுல், தற்கால நாகரிகச் சின்னங்கள் அனைத்தும் பேபல் கோபுரத்தின் கதியையே அடையும்.

இக் காலத்தில் மக்கள் இனத்தில் நடைபெறும் செயல்கள் அனைத்தும், கடந்த பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக நிகழ்ந்தது போன்றே, மொழியின் கருணையாலேயே, மொழியின் உதவியாலேயே நடைபெறுகின்றன. மொழி இல்லாத நாகரிகம் இதுவரை உலகத்தின் எந்தப் பகுதியிலும் தோன்றியதே இல்லை. மனித இனத்தில் எல்லாச் செயல்களும் மொழி என்ற முளையைச் சுற்றித்தான் நிகழ்கின்றன.

மொழியைக் கொண்டுபோய் எந்த விஞ்ஞானத்துள்ளும் புதைத்துவிட முடியாது. அது பௌதீகத்தோடு தொடர்பு கொண்டது; உளநூலோடு தொடர்பு கொண்டது; தொல்லுயிர் நூலோடும் (anthropology) அதற்குத் தொடர்பு உண்டு; உடல் நூலோடும் உறவு உண்டு. என்றுலும் இவ் விஞ்ஞானங்களுள் எதிலும் மொழியை அடக்க முடியாது. இவையெல்லாம் சேர்ந்ததே மொழி. மொழி இவற்றையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. அதோடு மனித இனத்தின் செயல்கள் அனைத்தையும் கண் காணிக்கிறது. மனிதன் செயல் ஒவ்வொன்றிலும் மொழி ஆட்சிச் செலுத்துகின்றது; அதுபோன்றே மனிதன் செயல் ஒவ்வொன்றும் மொழியை ஆள்கின்றது.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும், நாம் எண்ணும் ஒவ்வோர் எண்ணமும் மொழியை உண்டாக்குகின்றன, மாற்றுகின்றன, அழிக்கின்றன அல்லது வேறு மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. அது போன்றே, மொழியும் நம் செயல் ஒவ்வொன்றையும், நம் எண்ணம் ஒவ்வொன்றையும் ஆட்டி வைக்கின்றது. ஒருவன் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாறும்போது, அவன் உள்ளம், முகம், சைகை முதலியவற்றிலும் சிலவகை மாற்றங்கள் ஏற்படுகின்றன. இரு மொழி பேசுகின்றவர்கள், ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குத் தாவும்போது, மேற் கூறிய மாற்றங்களை நாம் தெளிவாக உணரலாம். மனிதச் செயல் ஒவ்வொன்றும், எண்ணத்திலும், கருத்திலும், பொருளிலும் மாற்றத்தை உண்டாக்கி, அதன் மூலம் மொழியைப் பயன்படுத்திக் கொள்கின்றது; வெவ்வேறு தொகுதியான சொற்களை எழுப்புவதன் மூலம் மொழியை உருவாக்குகின்றது; ஏற்கனவேயுள்ள மொழி அமைப்புக்களின் வழியே திருப்பிவிடப்

படுவதன் மூலம், மொழிக்கு அடிபணிந்தும் நடக்கின்றது.

உணவு, இருப்பிடம், உடை. இவை எல்லாம் வருணனை மொழியால் (description language) பிரித் தறியப்படுகின்றன. தந்தை, தாய், மகன், மகள், பேரன், பேர்த்தி, அத்தை, மாமன், மருகன், கணவன், மனைவி—இம் முறைகளை எல்லாம் மனிதன் உறவைக் குறிக்க வகுத்துக் கொண்டுள்ளான்; விலங்கைவிட மனிதன் சிறிது மேம்பட்டவன் என்பதற்கு இவ் உறவுமுறைகளை அவன் கொண்டிருத்தலும் ஒரு காரணம். இவை எல்லாம் மொழி இல்லாவிட்டால் இல்லை.

சட்டத் துறையும், வணிகத் துறையும் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளன. ஆனால், மொழி இல்லா விட்டால் இத்துறைகளும் உண்டாயிருக்க இயலாது. இசை, நடனம், சிற்பம், ஓவியம், கட்டிடக் கலை ஆகிய கலைகளும், மொழியின் துணை இல்லையானால், தம் அழகை, மதிப்பை இழந்து விடும். தாய் நாட்டுப் பாடல் (National Anthem) நாட்டு மக்கள் உள்ளத்தில் நாட்டுப் பற்றை ஊட்டுகின்றது. இதற்கு அப் பாடலின் இசையை விட, அப் பாடலில் உள்ள சொற்களே பெருங் காரணமாக அமைகின்றன.

பழங்கால நாகரிகங்களில் சமயம் (religion) முதன்மை வகித்தது. தற்கால நாகரிகங்களில் கல்வியும், விஞ்ஞானமும் தலைமை வகிக்கின்றன. இம் மூன்றிலும் மொழியின் தேவை மிகமிக இன்றியமையாததாக இருக்கின்றது.

தற்காலத்தின் மொழிகளுக்குள் விஞ்ஞானச் சொற்கள் பெருகி வளர்ந்து வருகின்றன. இவை எல்லாம் எல்லா நாடுகளுக்கும் பெரும்பாலும் பொதுவானவை. ஒரே உலக மொழி என்ருவது உண்டாகுமானல், அது விஞ்ஞானிகளாலேயே, அவர்களின் முயற்சியாலேயே உண்டாக வேண்டும். மொழி வேருபாடுகளால் காலத்தை வீணுக்கிக்கொண்டு துன்புறுகின்றவர்கள் அவர்களே.

கல்வியும் மொழியின் துணையால் நன்கு வளர்கின்றது; மொழியையும் அது சிறந்த முறையில் வளரச் செய்கின்றது. சொற்களின் வளர்ச்சிக்குக் கல்வியும் தன்னுலான உதவியைச் செய்துள்ளது. கல்வித் துறை முழுதும் மொழியை — எழுத்து மொழி, பேச்சு மொழி ஆகியவற்றை — அடிப்படையாகக்கொண்டே இயங்குகின்றது. மொழி இல்லாமல் எத்தகைய அறிவுத் துறையும் மற்றவர்க்குக் கற்பிக்கப்பட முடியாது.

ஒரு சிலர் மொழிக் கல்வியை இகழ்வதை ஒரு பெருமையாகக் கொண்டு திரிகின்றனர். மொழி அறிவு எல்லோர்க்கும் இயல்பாக அமைந்துவிட்டது என்று கருதி மற்ற துறைகளைக் கற்பதையே விழுமியது என நினைக்கின்றனர். சிறிது கூர்ந்து நோக்கினல், இத்தகையோர் மனப்போக்கில் உள்ள முட்டாள் தனம் நன்கு விளங்கும். கருத்தை உணரும் கருவியாகவும், கருத்தை உணர்த்தும் கருவியாகவும் எந்தத் துறையில் மொழி சென்று பயன் படவில்லை? மொழிக் கல்வியை இழித்துக் கூறுபவர்கள் மொழியாலன்றி, வேறு எதனல் அங்ஙனம் இழித் துரைக்க இயலும்?

ரப்பர் ஸ்டாம்பு மை

திரு. X. V. கொரேரா

○

தற்காலத்தில் ரப்பர் ஸ்டாம்பைப் பயன் படுத்தாத அலுவலகங்களே இல்லை என லாம் போர்முனையி லுள்ள ராணுவக் காரி யாலயம், நவநாகரிக வாசனையே இல் லாத குக்கிராமத்தி லுள்ள அரசாங்கக் காரியாலயம், நாகரிக நகரங்களி லுள்ள வர்த்தகக் காரியாலயங்கள் எல்லாம் ரப்பர் ஸ்டாம்புகளை உபயோகப்படுத்து கின்றன. எங்கெல்லாம் ரப்பர் ஸ்டாம்பு கள் உபயோகப்படுத்தப் படுகின்றனவோ அங்கு ரப்பர் ஸ்டாம்பு மையிக்கும் தேவை யிருக்கிறது.

நாள்தோறும் கோடிக் கணக்கான ரப்பர் ஸ்டாம்பு மை சீசாக்கள் விற்கப்பட்டும் உபயோகப்படுத்தப்பட்டும் வருகின்றன. இத்தகைய பொருளின் உற்பத்தியை ஒரு சிறு கைத்தொழிலாக மேற்கொண்டு "சிறுதுளி பெருவெள்ளம்" என்பது போல் ஒவ்வொரு சீசா விற்பனையிலும் கிடைக்கக்கூடிய சிறு லாபத்தால் பெரிய அளவில் சம்பாதிக்கலாம். இத்தகைய கைத்தொழிலுக்குச் சொற்ப முதலீடே தேவைப்படுகிறது. மேலும் இயந்திரங் களோ, தொழிற்சாலையோ தேவையில்லை.

இந்த மை தயாரிக்கத் தேவைப்படும் பொருள்கள்:—

1) சுத்தமான தண்ணீர்

2) கிளிசரின் (Glycerine)

3) ஸ்பிரிட் (Spirit)

4) அனிலின் வயலட் சாயம் (Aniline Violet dye) (அல்லது இதுபோன்ற வேறு வயலட் சாய ரகம்)

பொது விளக்கம்:—

ரப்பர் ஸ்டாம்பு மையை ஸ்டாம்பு பாடில் (Stamp pad) ஒருமுறை தடவினால் பல நாட்களுக்கு உபயோகத்திலிருந்து வரு கிறது. ஆதலால் இந்த மை ஸ்டாம்பு பாடில் சீக்கிரம் உலர்ந்து போகாமலிருக்க வேண்டும். தண்ணீர், காற்றாலும் வெப்பத்தாலும் விரைவில் உலர்ந்து போகக்கூடியது. எண்ணெய் அப் படி உலர்ந்து போகாது. ஆனால் அது வெறுக்கத்தக்க எண்ணெய்ப் பசையை, ரப்பர் ஸ்டாம்பிலும், பாடிலும்(Pad), ரப்பர் ஸ்டாம்பு எழுத்துக்கள் பதியப்படும் காகி தத்திலும் ஏற்படுத்தும். ஆதலால் தண்ணீ ரைப்போல் விரைவில் உலர்ந்துபோகக் கூடாத தன்மை வாய்ந்ததும், எண்ணெய்ப் பசை உண்டாகக்கூடாததும், தண்ணீரில் கரையக் கூடியதுமான கிளிசரின் (Glycerine) என்ற பொருளை உபயோகிக்க வேண்டும்.

கிளிசரினால் மாத்திரம் இந்த மை தயா ரிக்கப்பட்டால், ரப்பர் ஸ்டாம்பு பாடில் இந்த மை அநேக வாரங்களுக்குக்கூட உலர்ந்துபோகாம லிருக்கும். ஆனால் இத் தகைய மையில் ரப்பர் ஸ்டாம்பை ஒத்தித் தாளில் பதிக்கப்படும் எழுத்துக்கள் தாளில் விரைவில் உலர்ந்துபோகும் குணத்தை உடையதா யிருக்காது. ஆதலால் ஒற்றுத் தாளில் எழுத்துக்களை ஒற்றி எடுக்கும் துன்பம் ஏற்படும். இதைத் தவிர்க்கத் தாளில் பதியும் எழுத்துக்கள் விரைவில் உலர்ந்து போகும்படி செய்யவேண்டும்.

இதற்காகவே கிளிசரினேடு ஸ்பிரிட் சேர்க்கப்படுகிறது.

இந்த மூன்று பொருள்களேயும், அதாவது கிளிசரின், ஸ்பிரிட், தண்ணீர் இவைகளே ஒன்று சேர்த்துத் தயாரிக்கப்படும் ரப்பர் ஸ்டாம்பு மை, ஸ்டாம்பு பாடில் விரைவில் உலர்ந்து போகாதபடி கிளிசரின் உதவுகிறது. தாளில் ரப்பர் ஸ்டாம்பால் பதிக்கப்படும் எழுத்துக்கள் விரைவில் உலர்ந்து போவதற்கு ஸ்பிரிட் உதவுகிறது. கிளிசரினும் ஸ்பிரிட்டும், ரப்பர் ஸ்டாம்ப்பில் உள்ள ரப்பரை அரித்துவிடுமாகையால் இவைகளின் நாசப்படுத்தும் குணத்தை அகற்றுவதற்காகத் தண்ணீர் உதவுகிறது.

செய்முறை விளக்கம்:—

தண்ணீர்	3	அவுன்ஸ்
கிளிசரின்	6	,,
ஸ்பிரிட்	$\frac{3}{4}$	அவுன்ஸ்
வயலட் சாயம்		தேவையான அளவு.

(1) நன்ருகக் கொதிக்கும் தண்ணீரில் கிளிசரினைச் சேர்த்துக் கலக்க வேண்டும்.

(2) இவ்வாறு தயாரிக்கப்பட்ட கிளிசரின்—தண்ணீர்க் கலப்பின் சூடு குறைவதற்குள் ஸ்பிரிட்டைச் சேர்த்து நன்ருகக் கலக்கவேண்டும்.

(3) கடைசியாக வயலட் சாயப் பொடியைச் சேர்க்கவேண்டும்.

இந்த மையிக்கு நிறம் கொடுப்பதற்காகச் சாயம் சேர்க்கப்படுகிறது. வயலட் நிற மை தயாரிப்பதற்கு வயலட் சாயமும், பச்சை நிறத்திற்குப் பச்சைச் சாயமும் சிகப்பு நிறத்திற்குச் சிகப்புச் சாயமும் சேர்க்கப் படுகின்றன.

—*—

அடுத்த இதழில்

பயிற்சி மொழி (Medium of instruction) பற்றித் தங்கள் கருத்துரைகளே வழங்குமாறு பல கட்சிகளேயும் கொள்கைகளேயும் சார்ந்த அறிஞர்களேக் கேட்டுள்ளோம். **இராசகோபாலாச்சாரியார், காமராசர், சி. சுப்பிரமணியம். ஈ. வே. ரா., ம. பொ. சி., அண்ணுத்துரை, இலட்சுமணசாமி முதலியார், டி. எம். நாராயணசாமிப் பிள்ளே, டாக்டர் மு. வ.,** தெ. பொ. மீ. போன்றவர்களின் கருத்துரைகளேக் கலேக்கதிர் அன்பர்கள் எதிர்பார்க்கலாம்.

பயிற்சி மொழி மலர்

என்றும் பாதுகாத்துப் போற்றவேண்டிய கருத்துக் களஞ்சியமாக இருக்கும்.

கலேக்கதிர்

பாட்டில் புரட்சி

I

புரட்சி:

எங்கும் புரட்சி! எல்லாம் புரட்சி! புரட்சி என்பதே இந்நாளைய மந்திரம்! பாட்டிலும் புரட்சி! அனைத்திற்கும் அடிப்படையாக விளங்கிய அங்கும் புரட்சி! பாட்டில் எழுந்த புதுமையை அறிய மேனாட்டில்—அதிலும் அமெரிக்காவில்—தோன்றிய சில பாடற் போக்குகளை அறிவது – உணர்வது நம் கண்ணைத் திறக்கலாம்.

இரு வகைப் பாவாணர்:

பாவாணர்களை இரு கூட்டமாகப் பிரிக்கலாம். அறிவிருப்பது இவ்வாறு அறிந்து ஆராயத்தானே? அறிவாராய்ச்சிப் பாவலர்கள் என ஓரினப் பாவாணரைக் கூறலாம். இவர்களே பகுத்தறிவுப் பாவாணர்கள். இவர்கள் ஒரு புறம். புறப் பொருளுக்கு எல்லாம் தத்துவார்த்தம் கூறி, வரும் அனைத்தினையுமே உள்ளதோர் அடிப்படையின் அறிகுறியாகக் கொள்ளும் அடையாள நிலைப் பாவாணர்களே இரண்டாம் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மற்றொரு புறம். வெளிப்படையான 'பொருள் சுட்டு நிலை' என்னும் அகன்ற நிலையிலிருந்து முன்னவர் பாட்டுலகில் நுழைகின்றனர். வெளியோரத்தி லிருந்து புறப்படுகின்றார்கள் இவர்கள். ஆம். வெளிப் படைப் பொருளி லிருந்து தொடங்குகிறார்கள். பின்னவர்களாகிய அடையாளப் பாவாணர்களோ உள் ஆழ்ந்து கிடக்கும் குறிப்புப் பொருள் நிலையிலிருந்து பாட்டுலகில் எழுகின்றார்கள். அங்குப் பொங்கும் உண்மையி லிருந்து பாட்டுலகில் உலவ வருகின்றார்கள். இரண்டு இனப் பாவாணர்களும் கற்பனையின் எல்லையைக் காணவே முயல்கின்றார்கள். அகன்ற நிலையி லிருந்து ஆழத்தை எட்டிப் பார்க்கப் போகின்றவர்கள் ஓரினத்தார்: அறிவினத்தார். ஆழத்திலிருந்து அகல நிலையின் முடிவினைச் சென்று பார்க்க முயல்கின்றார்கள், மற்றோர் இனத்தார்; அடையாளப் பாவாணர். வெளியிலிருந்து உள் வருவாரும், உள் இருந்து வெளி வருவாருமாகப் பாட்டுலகில் இவ்வாறு புழக்கம் மிகுகிறது.

நடுநிலை:

இரண்டு முறையில் எதனைச் சிறந்தது என்பது? எதனைக் கையாள வேண்டும் என யார் யாருக்குக் கூறுவது? இருவரும் சிறந்து விளங்கும் உயர்நிலைப் பாட்டில் இருவர் பாட்டும் சிறந்தே தோன்றுகிறது. இருவர் கொள்கையின் குறைவும் தோன்றுதபடி அவர்கள் பாட்டுமட்டும் அங்கே உயர்ந்த நிலையில் நிறைவாகவே விளங்குகிறது. இவர்களின் சிறந்த பாடல்கள்

பல்கலைச்செல்வர்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

இவர்கள் கொள்கைகளேயும் தாண்டிக் குதித்துக் கொள்கைகளை நகைத்து நின்று நடனமிடுகின்றது. இந்த இரண்டு வகைக்கும் இடையே நடுநிலைப் பாட்டாக அமைவனவும் உண்டு. இரண்டும் இல்லா இடைநிலையின் சிறப்பு அங்கே தோன்றும். இந்த இரண்டு கொள்கைகளின் நெருக்கடியின் இடையே அகப்பட்ட பாட்டாகும் அது. இரண்டு யானைகள் இருபுறம் இழுக்க, இடையே இரண்டையும் பிணைத்த கயிறு போன்ற முறுக்கு நிலை எழ, அந்த நிலையின் நெருக்கடிப் பாட்டாகவே அது தோன்றும். டேட் (Tate) என்ற அமெரிக்கப் பாவாணரது பாட்டினை இப்படிப் பட்ட இடைவழிப் பாட்டாகப் புகழ்வது உண்டு.

போராட்டம்:

நெருக்கடி ஒரு போராட்டம்தானே! பாட்டிலே இத்தகைய போராட்டம் எத்தனையோ வடிவம் எடுத்துத் தோன்றக் காண்போம். உயர்தனிச் செம்மை (Classical) வாய்ந்த கலைஞனுக்கும், அதற்கு இடமாக அமையும் அதன் சூழலுக்கும் (Environment) உள்ளதொரு போராட்டமாக இஃது இன்று வாழும் கலைஞன் உள்ளத்தே எழலாம். புராணக் கதையாக இன்றைய மக்களுக்குத் தோன்றுகிற இந்தக் காலத்திற்கும், பொருள் ஒன்றும் தோன்றாதபடி பொருளிழந்து சூனியமாய் நிற்கும் நம் நிகழ்காலத்திற்கும் இடையே எழும் போராட்டமாகவும் இது விளங்கும். அமெரிக்காவில் உள்ள பழைய தெற்கும் புதிய வடக்கும் போராடுவது அதன் மற்றொரு வடிவமாம். இது பழைய ஐரோப்பாவும் புதிய அமெரிக்காவுமாக மாறும் போராட்டமாக விளைவதும் உண்டு. நிகழ் காலத்தில் பழைய திட்ப நுட்பம் சிறந்த உணர்ச்சிச் சுரணையை மக்கள் காணாமையால் மற்றொரு கலக்கம் விளைகிறது. ஆற்றல் படைத்த இந்த அனுபவச் சிக்கலில் இப்படி எதிர்த்தட்டுகளாக நிற்பவை தமக்கிடையே ஒரு பெரிய நெருக்கடியைப் படைத்துவிடுகின்றன. அந்த நெருக்கடியில் மாறுபட்ட இரண்டினையும் காணலாம்.

மேல்வாரியான ஒருமைப்பாடு:

ஆனால் அவற்றின் ஒத்துழைப்பால் ஒற்றுமை விளக்கம் எழுமா? நெருக்கடியைப் படைத்தற்குமட்டும் ஒன்று சேர்ந்தால் அவற்றின் மாறுபாடு நீங்குமா? அமைதி பிறக்குமா? போர் வீரர் முட்டிக் கொண்டு கைகலத்தலால் போர் அன்றி அமைதி பிறக்குமா? மாறுபாடு தீரவேண்டுமானால் அந்த முட்டுப்பாட்டில் தோன்றும் முடிபோ முட்டுப்பாடு அனைத்தும் தீர்ந்து போகும் முடிவாக– தருக்க முறையாக ஒப்புக்கொள்ளக் கூடிய முடிபாக அமைய வேண்டும். வெறும் கைக்குலுக்கலும் போதாது. சுடுபோர் போலக் குளிர்போர் ஒன்று உண்டு என உலகம் இன்று பேசவில்லையா? போர் முடிந்தும் உலகில் இன்று அமைதி ஏன் பிறக்கவில்லை? வாளைக் கீழே போட்டுப் பயன் இல்லை. உள்ளத்தைத் திறந்து காட்டி இரண்டு உள்ளமும் எல்லோரும் ஐயமின்றி ஒப்புக்கொள்ளும் வகையில் ஒன்றாக வேண்டும். முரண்பட்ட இரண்டும் முட்டிக்கொள்வதனைக் காட்டிவிடுவது மட்டும் பாட்டாகாது. அத்தகைய பாட்டோ முட்டுப்பாடாகிய இரண்டாட்டத்தின் வடிவமாக அமைந்த ஒரு பாட்டே ஆகும். அத்தகைய பாட்டுக்கள் இப்போது வெளிவருதல் இயல்பு. ஆனால், பாட்டு என்றால் ஒருமைப்பாட்டு வடிவமாக அஃது எழ வேண்டும் அன்றோ! இதனாலேயே இத்தகைய இரண்டாட்டுப் பாடல்கள் ஏதோ ஒரு வகையான ஒருமைப்பாட்டினை எப்படியோ காட்ட முயல்கின்றன. என்ன நிகழ்கின்றது? இன்றைய பாட்டில் தோன்றும் கீழறைப் பொருளே (Irony) இத்தகைய ஒருமைப்பாட்டினைத் தோற்றுவிக்கின்றது. அது பாட்டின் உண்மை வடிவ

மாகாது. ஒரு சில இடத்தில் அது பாட்டாக இனிக்கலாம். ஆனால் அஃது எங்கும் வந்து பயனில்லை. எங்கும் அது வரவேண்டும் என்று கூறுவதும் சரியன்று. எங்கே யாவது பொருத்தமான இடத்தில் வருவதே கீழறைப் பொருளின் சிறப்பு நிலை யாகும்.

* * *

II

இரு முறைகள்:

உண்மையான ஒருமைப் பாட்டு வடிவம் விளங்கி ஒளிர இன்றைய பாவாணர் முயல் கின்றனரோ? முயலாமல் இருப்பாரோ? அமெரிக்கப் பாவாணராம் ரான்சம் (Ransom) என்பாரின் முயற்சியைப் பல ஆராய்ச்சியாளர் எடுத்துக் காட்டுவர். இவர் காதற் பாடல்களையே பாடுகின்றார். அவற்றிடையே இரண்டாட்டம் என்பதின்றி ஒருமைப்பாட்டு வடிவம் விளங்குவது எப்படி? இதற்கென இப் பாவாணர் இருவேறு முறைகளைக் கையாளக் காண்கிறோம். தன் பாட்டிற் கேற்ற சிறந்த சொற்கள் — அந்தப் பழஞ் சொற்கள் தரும் சொல் நயம் (Diction) — இஃது ஒன்று. சொல் நயத்திற் கேற்ற கற்பனைக் காட்சி — இஃது இரண்டு. இவை இரண்டும் இவர் பாடும் காதல் நிகழ்ச்சிகளை ஒளிரச் செய்கின்றன. இருட்டில் நின்ற ஓவியம், ஒளியானது வந்ததும் விளங்குவதுபோலக் காதல் நிகழ்ச்சிகள் இந்த இரண்டு ஒளியாலும் மின்னிப் பொலிகின்றன. இது நிகழ்காலச் செய்தி யன்றோ? இதில் என்ன பொருளாழம் காணமுடியும்? இங்குத்தான் அவர் செய்யும் இந்திர ஜாலம் தோன்றுகிறது. இன்று நாம் எள்ளி நகையாடுவன இவை அல்ல என்பதொரு மனமயக்கமே இவர் பாட்டில் எழுகின்றது. மலைமே லிருந்து தொலைவி லுள்ள பொருள்களைக் காணும்போது அச் சேய்மைக் காட்சியில் ஓர் அழகு விளங்குகிற தன்றோ? தான் என்ற முனைப்பு ஈடுபடாத பற்றற்ற நிலை அங்கே எழுகிறது. அவரது பழைய முறையான சொற்கோப்பும் (Diction) கற்பனைக் காட்சியும் (image) இவர் பாடும் காதல் நிகழ்ச்சிகளுக்கு இத்தகைய சேய்மைக் காட்சியின் அழகினைத் தந்து ஒளிர்கின்றன. சிறு நிகழ்ச்சிகளையும் வீரக் காப்பியம் போலப் பாடிச் சிரிக்கவைக்கின்ற பழக்கமும் பாட்டு உலகில் உண்டு அன்றோ? இத்தகைய பாடல்களை வீரக் காப்பியப் போலிகள் (Mock Heroic) என்பர். இந்நாளைய துன்ப நிலையை ரான்சம் என்ற இப் புலவர் துன்ப இயல் நாடகமாக (Tragedy) எழுத முயலாமல் இத்தகைய சிறு காப்பியப் போலிகளாக எழுதி யமைப்பதாலும் ஓர் ஒருமைப் பாட்டு வடிவம் அவர் பாட்டில் தோன்றிவிடும்படி பாடுகின்றார்.

நாடக நிலை:

மற்றொரு நுட்பத்தையும் இவரிடம் காண வேண்டும். ஒவ்வொரு பாட்டினையும் நாடக நிலையாக வைத்து ஆராயவேண்டு மென்பதே இவருடைய கொள்கை. ஒவ்வொரு பாட்டுக்கும், ஒவ்வொரு நாடக நிலை உண்டு; குரல் உண்டு; நடை யுண்டு; நடத்தைப் போக்கு உண்டு;குறிப்புப்(intention) பேசுவோன் உண்டு. கேட்போன் உண்டு; பேசுவோனிடம் கேட்போனை நோக்கிய உணர்ச்சி (Tone) எழும். பேசும் பொருளைப்பற்றிய உணர்ச்சிகளும் (feelings) எழும் இவற்றிற்கெல்லாம் ஏற்பப் பேச்சு மாறும் அன்றோ? இதனாலேயே பாட்டை எல்லாம் நாடகப் பாத்திரங்களின் கூற்றாக இந்தப் பல நிலைகளிலும் வைத்து நோக்கி ஆராய வேண்டும் என்று இந்நாளில் பலர் கருதுகின்றனர். (பழைய சங்கப் பாக்களும் நாடகப் பாத்திரங்களின் பேச்சாக அமைதலின் அவற்றை அறியப் பேசுவோன், கேட்போன், காலம், மெய்ப்பாடு, திணை, துறை முதலியன எல்லாம் அறிதல் வேண்டும் என்று தொல்காப்பியம் கூறவில்லையா?) பெரும்பான்மையும் இந்

நாளைய பாக்களில் பாவலனே பேசுபவனுக அமைகின்ருன். பாவலனே கதையைக் கூறிவந்தாலும், உள்ளுக்குள் ஒன்று அங்கே தோன்றுகிறது. அவன் கூற விரும்பும் கீழ்வெட்டான கீழறைப்பொருள் (Irony) அங்கே உள்ளுறையாக வருகிறது. இதனை அறியத் தலையை உடைத்துக் கொள்ளவேண்டுவ தில்லை. கீழறைப் பொருள் தெரிநிலையாகவே இந் நாளைய மக்களுக்குத் தோன்றும்படி பாடல் செல்கின்றது. பாட்டின் குரலிலேயே இது தோன்றக் காணலாம். பாட்டினைப் படைத்துத் தரும் சூழ்நிலையிலேயே இக் குறிப்பு இயங்குகிறது எனலாம். இதனைப் பாட்டின் வானிலை (climate) என்று பேசுவதும் உண்டு. பாட்டில் காற்றடிக்கும் போக்கே அது; சீதோஷ்ணப் போக்கே அது.

பாட்டமைப்பு:

பாட்டில் மற்ருெரு பாகுபாடும் நமக்கு விளங்க வேண்டும். மனிதனின் எலும்புக் கூட்டமைப்பு ஒன்று. தசையும் இரத்தமும்கொண்டு தோன்றும் புறத்தழகாம் அமைப்பு வேறு ஒன்று. இப்படியே பாட்டின் கட்டமைப்பு அடிப்படையாகத் தோன்றும். மேற்புறத் தோற்றமாம் கோப்பமைப்பு — நெசவமைப்பு — பின்னல் அமைப்பு வேருகும். ஒன்று கரு அமைப்பு; மற்ருென்று அழகமைப்பாம் வனப்பு. வேறு சொற்களால் விளக்கக்கூடிய பாட்டின் கருவே அடிப்படையான கட்டமைப்பு — உர அமைப்பு — கரு அமைப்பாம். பாட்டிலே அந்த அந்த இடத்திற் கேற்ப ஆங்காங்கே எழும் தூண்டல்களாம் உணர்ச்சிகளும், கிளர்ச்சிகளும் 'மேற்புறக் காட்சி இன்பமாகத் தோன்றும் நெசவமைப்பாம் (Texture); வனப்பாம். இவ்வாறு பிரித்தறிவதால் சில உண்மைகள் தோன்றும். இந்நாளைய பாடல்களின் புரட்சி இந்த வனப்பில் உண்டு. கருவில் அன்று, உருவில்தான்.

* * *

III

அறிவும் உணர்வும்:

அறிவுக் கொத்த முடிபு ஒரு பாட்டு வடிவமாளுல் (Gestalt) மட்டுமே, பாட்டு உண்மையில் பாட்டாகும் என்ருேம். இந்த வடிவமே இப்படிக் கருவாகவும் உருவாகவும் தோன்றும். ஆனுல் அறிவு என்ருல் என்ன? சுவைஞனிடமும், கலைஞனிடமும் வெளிப்பட்டெழும் அறிவோ — பாராட்டறிவு; உண்மையில் உணர்ச்சி வடிவான உணர்வு. பொதுவாக நாம் கூறும் அறிவினும் இது வேறு. பொது அறிவு என்பது சிறந்து விஞ்ஞானியிடம் பழுத்துப் பகுத்தறிவாக உலகினை ஆள்கிறது. இது வேறு. பசு என்றதும் நம் வீட்டில் நம் குழவிபோல வளர்ந்து தாய்போலப் பாலினைத் தந்து நம்மை வளர்த்துத் தூய வெள்ளை நிறம்கொண்டு காட்சி யளித்து அன்பே வடிவாய்க் கன்றினிடம் குழைந்து நிற்கும் சிறப்பு நிலையில் உள்ளதொரு பசுவே. அதனுெடு பேசிய பாவலன் ஒருவன் கண்ணெதிரே கொம்பும், குளம்பும், வாலும், அலை தாடியும், முசுப்பும், அன்பு மடியும், நிலை அடியும்கொண்டு அறத்தின் வடிவாய்த் தோன்றும். அம்மே என்று அவனுள்ளம் குழைகின்றது. பசு என்ருல் விஞ்ஞானியின் எதிரோ, அனைத்துப் பசுவிற்கும் பொதுவான தன்மை கருத்துப் பொருளாய்த் தோன்றும். அவற்றைப் பண்பியும் பண்பும் என்றும், பண்பியும் செயலும் என்றும் பிரிக்க முடியாதானுலும் பகுத்தறிவு அவற்றை வேறு பிரித்துக் காண்கிறது. இதனை அறிந்து பழகி அவ்வாறே பகுத்துப் பகுத்து அதன் உறுப்பினை எல்லாம், அவற்றின் இயல்பினை எல்லாம், செயலினை எல்லாம் தனித் தனியே பெயரிட்டுப் பெருக்கி வருகிருன் விஞ்ஞானி; உணர்ச்சியும், உலகமும் தோன்ருத ஆரவாரச் சொல்லுலகாம் வெற்றறிவொளியால் அனைத்தையும் பிய்த்தெறியும் குரங்கு போல் மனத்தால் கண்டு வருகிருன். பசு

என்றால் இவனுக்குப் பொதுப் பெயர். அங்கே இந்தப் பசு எனத் தனியே ஒன்றில்லை. கலைஞனுக்கோ பசு என்பது அவன் அறிந்த ஒரே ஒரு பசுவாகும். அவன் அறிந்த அதன் சிறப்புப் பெயரே பசு என்பதாம்.

மந்திரம்:

அப் பெயரே நாம் முன்கூறிய உணர்ச்சியை எல்லாம், உலக ஒளியை எல்லாம் ஒளிரச் செய்வதாய், அதன் புராணமாகப் பொலிகிறது. அதனை மொழிபெயர்க்க முடியாது. தனியே அதற்கென்று உரிய தாய், அதன் மறைபொருளாகிற மந்திரம் எனலாம் அதனை. பொதுநிலை என்ற வெற்றெண்ணம் அன்று அது. பிரிக்க முடியாதவற்றைப் பகுத்தாராய்ந்து உயிரற்றவையாகப் பண்புகள், தன்மைகள், இயல்புகள் எனப் பகுத்தறிவு காணும் உயிரற்ற வற்றலன்று அது. நிறம் வேறு, பழம் வேறு, சுவை வேறு என்று விஞ்ஞானி காணும் அரை வெட்டு வரைப் படம் (sectional drawing) அன்று. உயிரோடும், சுவையோடும், ஒளியோடும் மிளிரும் பேரின்பப் பழமாகும். பகுத்தறிவு காணும் செத்த பிணமன்று சுவைஞன் காணும் உயிரோவியம். எனவே கலைஞனின் பாராட்டறிவோ சொற்களைப் பொதுத் தன்மை என்ற செத்த பிணமாக்காது. அதனை உயிரோடு வைத்து, மந்திரம் ஓதி வழிபட்டுக் கொஞ்சி நெஞ்சுருகிக் குழைந்து நிற்கிறது. பேராற்றல் பொங்கி வழியும் பிரிவிலா முழு நிலையாகவே அப்பொருள் அவனுக்கு விளங்குகிறது.

புராணம்:

இந்த நிலையில் ஒரு நிகழ்ச்சி எழுகிறது என்றால், அஃது ஒரு புராணச் செய்தியே ஆகும். இயற்கையே உருவங்கொண்டு நடனமிடுகிறது இங்கு. வரலாற்றறிஞன் கூறும் வரலாறும் இங்கு உண்டு. இயற்கைக்கு அப்பாற்பட்ட பின்னணிக் காட்சியும் பின்னணிச் சங்கீதமும் உண்டு. காணத்தான் கண் வேண்டும்; கேட்கத்தான் காது வேண்டும். விஞ்ஞானி கொண்ட மனக் கண்ணினும், மனக் காதினும் இவை வேறு. கற்பனை என்பது வெறும் பொய்யன்று. இவை காணும் நுட்பமே கற்பனை யாம். கதை எனக் கூறுவது இத்தனையும் இயைந்ததோர் ஒருமைப் பாடே யாம். இதனை உலகிற்கு அப்பாற்பட்டது—உலகத்தினும் வேறானது என்று கூறுவதேன்? மேல்வாரியாகப் பார்க்கும் போது தோன்றுது, கலைஞன் காட்சிக்கே இந்த அடிப்படை – இந்த இயற்கை – இந்த உயிர் – இந்த உண்மை வெளியாகிறது. ஆதலின் இயற்கையின் நிலைமையை இவ்வாறு இருந்தபடி இருந்து காட்டுவதாலேயே இதனை உலகிற்கு அப்பாற்பட்டது என்று பேசலாயினர்.

பாட்டும் புராணமும்:

இந்த நிலையில் நின்று நோக்கும்போது சமயங்கள் கூறும் புராணமும், புராணத்தின் பூரணமாம் கடவுளும் முழு நிலை விளக்கமான பாட்டே எனலாம். இந்நாளைய விஞ்ஞானத்தின் சீர்திருத்தம் பெற்ற சமயக் கருத்துக்களைவிட இந்தப் பழைய புராணக் கதை மிக மிகச் சிறந்தது எனலாம். அந்தப் புராணக் கதைகளைப் போலப் பாட்டும் உட்பொருளின் உண்மை நிலையை நம் அறிவுக்கு விருந்தாகக் கொண்டு தந்து உதவுகிறது. ஆனால் ஒரு வகையில் அப் பழைய புராணத்தைவிடப் பாட்டு ஒருபடி தாழ்ந்ததே எனலாம். புராணத்தில் பழைய காலத்தி லிருந்த ஈடுபாடு இந்தக் காலத்தில் பாட்டில் எழமுடியுமா? ஏன் முடியவில்லை? பழைய புராணம் எத்தனையோ வகையாக மாறிமாறிக் கூறி வந்தாலும் அவை அத்தனையும் முடிவில் கடவுளாகிய ஒரு முடிவிலேயே முடிந்து, முழு நிலைபெற்று இன்ப வெள்ளமாக இனித்தன. ஆறுகள் எல்லாம் கடலில்தானே பாய வேண்டும்? புராணங்கள் போன்றது இக்

காட்சி. கால்வாய்கள் கடலில் பாய்வதிலும் நம் வயலிலும் வயிற்றிலும் பாய்வதே மிகுதியாம். அவ்வளவே. ஆதலின் அவற்றின் முடிபு ஒரு முடிபன்று. பாட்டும் இப்படிப் பட்டதே. பாட்டோ பலவேறு சிறு சிறு புராணக் கதைகளைத்தான் பாடுகிறது. ஆனால் இவை ஒவ்வொன்றும் தனித் தனியே ஒருமைப்பாட்டு வடிவுடன் தோன்றினாலும், இவை அனைத்தும் பழைய புராணம்போல் ஒரு முடிவில் முழுநிலை அடைந்து ஒளிருவ தில்லை. முழு நிலைக் காட்சியில் பாடலும் கதையும் என்ற இந் நாளைய புராணங்கள் ஒருமைப்பா டின்றிப் பன்மை விளக்கங்களாகவே பகட்டி நிற்ப தாய் ஒழிதலின், படிப்போர் மனத்தில் பழைய புராணங்கள் எழுப்பிய ஒருமை உணர்வின் அமைதி இன்பத்தை விளைவிப் பதில்லை.

சடங்கும் மரபும்:

இஃது எவ்வாறுயினும் பாராட்டறிவினைப் புராணக் கதையின் வடிவம் என்று கூறத் தட்டில்லை. புராணக் கதை என்று நாம் கூறுவது தனித் தனியே பொருள்களிடையே அவ்வவற்றிற் கென்றே விளங்கும் வீறுபாடாகும் சிறப்பியல்புகளாம். இயல்பு என்றதும் பொதுத் தன்மை என மருளலாகாது. பிறவற்றிற்கு இங்கு விளங்காத சிறப்பு நிலையே அது. அது பொது இயல்பாவது எங்ஙனம்? சிறப்பு நிலையில் பிறவற்றினும் வேருகப் பொலியும் விளக்கமே அது. ஒரு நாற்காலியை இவ்வாறு நோக்கும் போது, அதுவும் அத்தகைய புராணக் கதையாகவே தோன்றும். காதலியோடு காதலன் முதன் முதல் பேசியபோது உயிரெலாம் துளிர்க்க உடலெல்லாம் துளிர்க்கக் காதெலாம் இனிக்கக் கண் எல்லாம் இனிக்க உட்கார்ந்த நாற்காலி– அந்த நாற்காலி அதன் அமைப்போடும் வடிவோடும் நிறத்தோடும் சூழலோடும் காதலர் வாழ்வோடும் காதலோடும் காதல் அனுபவத்தோடும் ஒன்றுகப் பிணைந்து ஒரு புராணக்கதையாக இனிக்கும் அன்றே! அந்த நாற்காலி என்றால் அந்தக் காதலர்க்கு அத்தகைய புராணத்தை விளக்கும் மந்திரமாகும். கந்தருவ உலக விமானமாயும் கடவுளின் பேரருளின் அடையாளமாயும் தோன்றும் அது. நாற்காலி என்றால் இந்த நிலையில் விளங்குவது வெற்றறிவன்று. ஆழ்ந்து அகன்று ஓங்கி இனித்து ஒளிரும் சிறப் புணர்வே யாம். இங்கே காதலர் பாராட்டு முறை, பழைய காதலர் பேச்சு, உலகம் தோன்றியது முதல் வரும் காதற் குறிப்பு, என்ற இவையும் தோன்றும். பிறர் இதனை வெறும் மரபு –சடங்கு என்பர். இங்குத் தான் பாராட்டுக் குறிப்புகள், சடங்குகளாய் அச்சிறப்புப் பொருளினை விளக்குவனவாக அமைகின்றன. இத்தகைய சடங்குகளுக்காக –மரபுக்காகப் புராண மொழியின் நடையாக எல்லோரும் கண்டு தெரிந்துகொள்ளும் விளக்கமாக ஏற்பட்ட நிலையமே சமயம் எனலாம்.

வனப்பும் நூற்பும்:

பாட்டின் மேற்புறத் தோற்றப் பொலிவினை– அவன் வெளிப்பாட்டு வடிவினை– கோலத்தை– நெசவமைப்பு– வனப்பு என்று பேசினேம். பாட்டு என்பது கருவில் எழுந்து முகிழ்த்து மலரும் இந்த நெசவமைப்பின் நேர்த்தியே– இந்த மலர்ச்சியின் வனப்புக் கோலமே சுவைஞருக்குத் தோன்ற விளங்குவதாகிய அதன் சிறப்பு நிலை எனலாம். நூல் என்ற தமிழ்ப் பெயர் நூற்ற நூற்பின் பொலிவினையும் அதனை அறியும் மனத்தில் தோன்றும் கோட்டமிலா உள்ளத்து உணர்ச்சியையும் குறிப்பதாகிய இச்சிறப்பு நிலையை விளக்க வில்லையா? இப்படி விளக்குவதால், உலகில் பொதுவாக எங்கும் காண்பதற்கு மாருகச் சிலபோது செல்லும் பாட்டின் இயல்பும் நன்கு விளங்கலாம். ஆனால், அப்பாலுக் கப்பாலான பாட்டே பாட்டு என்று முடிவு கட்ட வேண்டுவ தில்லை. பாட்டு என்பது

சிறப்பு நிலையில் விளங்கும் போது உலகினைத் தாண்டிக் குதிக்க வேண்டும் என்ற கவலை கொண்டு கலைஞன் அலைவதில்லை; அலைய வேண்டுவதும் இல்லை. உலகத்தோடு ஒத்து இயைந்த நிலையிலேயே பாடும்போதும் இந்த இயல் பெல்லாம் தானே அமைந்துவரப் பாட்டு சிறந்து ஒளிரும்.

* * *

IV

விஞ்ஞானமும் பாட்டும்:

விஞ்ஞானம் இவ்வாறு கலை ஞானத்திற்கு வேருனல், அடிப்படையான விஞ்ஞானம் இன்றியா முன்னோர் எல்லாம் வாழ்ந்தனர்? பழங்கால விஞ்ஞானமும் கலை ஞானமாகவே பெரும்பான்மையும் விளங்கியதால், இந்நாளைய இரண்டாட்டத்திற்கு இடம் இன்றி விஞ்ஞானமும் புராணமாகவே பாடம் பெற்றது; சுவைஞன் துய்க்கும் பொருளாயது. இன்றைய விஞ்ஞானம், அந்தி வேளைச் செவ்வானப் பாட்டொளியில் வாழ்ந்து மயங்காதபடி அப்பட்ட விஞ்ஞானமாகிப் பகுத்தறிவின் தூய ஆவியாக மாறிவிட்டுள்ளது. அதனுல் நிறமும் சுவையும் பழைய பாராட்டு நிலைமையும் இழந்து புராணத்தைப் பழிக்கத் தொடங்கியது. இதனுல் பழைய நம்பிக்கைகளும் இன்றைய புதிய விஞ்ஞானச் சுழலில் வேருன்ருது ஒழிகின்றன. விஞ்ஞானத்திற்கும் பாட்டுக்கும் இன்று இங்குக் கூறிவருவது போன்ற முரண்பாடு பெரிதும் தோன்றுகிறது. நம்பிக்கையுலகம் போய் ஆராய்ச்சி யுலகம் பிறந்து உள்ளது.

பாட்டும் நம்பிக்கையும்:

நம்பிக்கை என்ப தொன்றும் இன்று தனியே பாட்டில் ஆராய வேண்டுவதாகிறது. பாட்டுக்கும் நம்பிக்கைக்கும் உள்ள தொடர்பு பெரியதொரு சிக்கலாக நம் மனத்தை யெல்லாம் குழப்புகிறது. "என்ன என்ன நம்பிக்கைகள் இருந்தால் நல்லது?" இது ஒரு கேள்வி. "எவை எவை நம்பக் கூடியவை?" என்பது வேறு கேள்வி. உணர்வின் முடிவான நம் விருப்பத்தின் மேல் வரிச் சட்டமே (Normative) முன்னையது. அறிவின் மேல் வரிச் சட்டமே பின்னையது. விரும்பத்தக்கது வேறு, இருப்பது வேறு. இந்த இரண்டுக்கும் பாட்டிலே போராட்டம் எழக் காண்கிருேம். நாம் கூறிவரும் போராட்டங்களில் இதுவும் ஒன்று. இந்தப் போராட்டம் இந்நாளைய பாவலனது உள்ளத்திலேயே அடிகோலிக் கொண்டு வருகிறது என இவ்வளவும் கூறினமையால் தெளிவாகி இருக்கும். இங்குக் கூறும் போராட்டம் பாட்டுக்கும் முற்பட்ட நிலையாய் அப்பாட்டு முகிழ்ப்பதற்கு முன்னும் கலைஞன் மனத்தே எழும் மோதலாகும். பாட்டைப் படிக்கும் போது சுவைஞன் உள்ளத்தே எழுகிற போராட்டம் இதனினும் வேறு. பாட்டு எழுவதற்கு முன் அன்றிப் பாட்டெழுந்தபின் மோதும் மோதல் இது. படிப்பவன் நம்ப முடியாதது ஒரு புறம். படிப்பவன் நம்பித்தான் ஆகவேண்டும் என்று பாவலன் விரும்புவது மற்ருெருபுறம். இவற்றின் போராட்டம் இவ்வாறு வேருக உள்ளதாகும்.

தன்மயமாதல்:

இங்கே எப்படி ஒருமைப்பாடு காண்பது? ஒரு சில பாவாணர், தம் பாவினைப் படிப்போர், பாட்டில் ஒன்றுபட்டுப் படித்துச் சுவைக்கும்போது பாவலன் விரும்புவதனைப் படிக்கின்ற கால அளவு வரையிலேனும் தம்மை மறந்து நம்பிச் சென்று பாட்டில் ஒன்றுபடும்படி செய்து வருகின்றனர். ரான்சம் என்ற அமெரிக்கப் பாவாணர் தம்முடைய பாட்டில் தாம் விரும்புவதனையே கூறிச் செல்கின்ருர். பாட்டின் நெருக்கடியில், துய்த்துணர்வு நிலையில் ஒருமைப்பாட்டில், சுவைஞன் தன் மனத்

தையும் அறிவாராய்ச்சியையும் நம்பிக்கையையும் வெளியே ஒதுக்கி வைத்துவிட்டுப் பாட்டின் நெசவமைப்பு நேர்த்தியின் வழியே— நூற்பின் நுட்பத்தின் வழியே வனப்பின் வழியே இவ்வாறு ஓர் ஒருமைப் பாட்டினை அடைந்து படித்து இன்புறுமாறு ரான்சம் அமைத்து வெற்றி காண்கிறார்.

பலவகைக் கீழறைகள்:

இவருடைய பாட்டைத் 'தோல்விப் பாட்டு' என்று கூறுவதுண்டு. இவர் பாட்டில் தோன்றும் கீழறைப் பொருளை நாம் வேறாக வைத்து ஆராய்ந்து அறிந்துணர்தல் வேண்டும். தோல்வியை உட்கொண்டு உலகில் இன்று எழும் தோல்வி மனப்பான்மையினை எல்லாம் சிறப்பு நிலையில் வைத்து வகை செய்து இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டும் முறையிலும் நிலையான தொரு திட்டமொன்று உள்ளூர விளங்கி வரும்படி அதனை உருவாக்கி விடுவதே கீழறைப் பொருள் (Irony) எனலாம். ஆனால் ரான்சம் என்பாரின் பாட்டில் வரும் கீழறைப் பொருளோ இப்படிப் பாவலனுக்கு வேறாய் எழும் அடிக் குரலாகாது. அவரோடு ஒன்றாகி அவருடைய ஆளுமையையே (personality) இயல்பினையே—தன் வடிவாக வார்த்தெடுத்துக் கொண்டு, வெளிவரும் சிறப்பு நிலையாக விளங்குகிறது. டான் (Donne) முதலான அப்பாலைப் பாவாணர்கள் (Metaphysical Poets) பாட்டில் தோன்றும் கீழறைப் பொருளோ உணர்ச்சியே வடிவமானது. ரான்சம் என்பாரின் கீழறைப் பொருளிலோ அத்தகைய உணர்ச்சி ஒன்றும் காணக் கிடையாது. பாவலன் தன்னுடைய ஆளுமையே—வடிவே—இயல்பே தோன்றாதபடி அதனை ஒதுக்கிவைத்து விட்டுப் பாடவேண்டும் என்பர், ரான்சம் என்பார். ஆனால், அவரையும் அறியாமல் அவருடைய ஆளுமையே அவர் பாட்டின் கீழறைப் பொருள் என வடிவெடுத்து வருகிறது என்று கண்டோம். இவ்வாறு ஆளுமையை உட்புகுத்தாமல் அவரால் தடுக்க முடியாமற் போனாலும், தம்முடைய உணர்ச்சியினைத் தடுத்து, அப்புறப்படுத்தி விடுவதில் வெற்றியே பெறுகிறார் அவர். புற நிலையாக நின்று பாடுவது என்பது இதுதான்.

நம் செல்வம்?

"தமிழ் மொழியிலே மறுமை இன்பத்தை அடைய வழிகாட்டும் மெய்ஞ்ஞான நூல்கள்மட்டும் இருந்தாற் போதாது; இம்மை யின்பம் பெறுதற்கேற்ற விஞ்ஞான நூல்களும் வேண்டும் என்று பாரதியார் ஆசைப்பட்டார்; அப்பணியிலே தலைப்படும்படி அறிவறிந்த தமிழ் மக்களை வேண்டினார்......... அவர்க்கு முன்னிருந்த அறிஞர்களும் மதுரம் நிறைந்த தமிழின் அருமையை மனமாரப் புகழ்ந்து வாயார வாழ்த்தி யுள்ளார்கள். 'என்றுமுள தென்தமிழ்' என்று தமிழின் வாசி அறிந்து ஆசி கூறினார் கம்பர். இத்தகைய இனிமை வாய்ந்த மொழியை – மூவாச் சாவா மொழியைப் பிறப்புரிமையாகப் பெற்ற பெருமை என்றும் தமிழருக்கு உண்டு. ஆயினும், தம் பெருமை தாமுணராத் தன்மையராய்த் தமிழர் இன்று தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள்."

- பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள்.

எது வீண்?

திரு. ஆர். இருசு, B.A. (Hons)

"மெழுகுவர்த்தி எரியும்போது வீணுவது ஒன்றும் இல்லை" என்று அறிவியல் துறைவல்லார் கூறுவர். அதாவது வீணுகின்ற பொருள் உலகில் எதுவுமே இல்லை என்பது அவர்கள் துணிபு. பெரும் தொழிற்சாலைகளில் புகைபோக்கி மூலமும், சாய்க்கடைகள் மூலமும் செல்கின்றவைகள் பயன்படாப் பொருள்கள்; அவை எல்லாம் வீண் என்று எண்ணி வந்தோம். ஆனுல் அறிவியல் வல்லார் இதனை மாற்றி மேற்கூறிய உண்மையை நிலை நாட்டினர். இதனையும் உணராது புகை போக்கி முதலியவைகள் மூலம் பொருள்களை வீணுக்கினுல் அவர்கள் உண்மையை உணராது செய்கின்றனர் என்பதே அதற்குப் பொருள்.

ஒரு தொழிற்சாலையில், பயனற்றது என்று எரியப்படும் பொருள், மற்ற தொரு தொழிற்சாலையில் மூலப் பொருளாகப் (Raw material) பயன்படும். மக்களினத்துள்ளும் அப்படியே. பயன்படாத மனிதன் என்ற நிலையே இல்லை. ஆனுல் பயன்படுத்துகின்றவர்களைப் பொருத்தே, மனிதனே யாயினும், பொருளே யாயினும் பயனின் பெருமை உயர்கின்றது. எடுத்துக்காட்டாகப் 'பைகார்பனேட்' என்ற இரசாயனப் பொருள் பல் வகையான வேறுவித உயர்ந்த மதிப்புள்ள இரசாயனப் பொருள்களைச் செய்தற்குப் பயன்படுகிறது. இப்படிப் பயன்படுத்தப்பட்ட பைகார்பனேட் அத் தொழிற்சாலையாரால் வேண்டாதது என ஒதுக்கப்படுகிறது. ஆனுல் இதே பொருள் தோல்களைப் பதனிடுதற்கும், அவைகட்குச் சாயம் ஏற்றுதற்கும் பயன்படுகிறது. முன்னையவர் வேண்டாம் என ஒதுக்கிய பொருள் பின்னையவர்க்குப் பயன்பட்டது.

இப்படிப் பயன்படுத்தப்படாது வீணுக்குதற்கு வேறு காரணமும் உண்டு. ஒருவரால் வேண்டாம் என ஒதுக்கப்பட்ட பொருளைப் பயன்படுத்துவோர் அருகில் இல்லாமையும் இதற்குக் காரணம் ஆகும். கடல் நீரைக்கொண்டு குளோரின், எரிசோடா (caustic soda) முதலிய பொருள்களைப் பெறுகிறோம். இப்படிக் கடல் நீரிலிருந்து இவைகளைப் பிரிக்கும்போது நீர் வாயு(hydrogen) வெளியாகிறது. நீர் வாயுவினைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் பலப் பல. ஆனுல் குளோரின், எரி சோடா முதலியவைகளைப் பிரித் தெடுக்கும் தொழிற்சாலையின் அருகில் நீர்வாயுவினைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் அமைந்திராத காரணத்தால் நீர் வாயு வீணுக்கப்படுகிறது.

பெரும் தொழிற்சாலைகளில் உபயோகப்படுத்தப்பட்ட கழிவு எண்ணெய்கள், அமிலங்கள், தண்ணீர் முதலியனவற்றைக் கொண்டு பயன் பல பெறலாம். இதனை

எல்லோரும் அறிவர். ஆனாலும் அதனைப் பயன்படுத்துவது இல்லை. இப் பொருள்களைக் கொண்டு வேறு பொருள்களைச் செய்ய முற்பட்டால் செலவு மிகுதியாகுமே யன்றிப் பயன் மிகவும் குறைவாகும் என்ற அவர்களுடைய தவறான எண்ணம்தான் இதற்குக் காரணம். உண்மையை நன்கு ஆராயாததால் இத்தகைய முடிவுக்கு அவர்களால் வர முடிந்தது.

டி. டி. ட்டி. செய்வதற்கு மாேேனாகு ளோரோ பென்சின் என்பது மூலப் பொருளாகும். மாேேனாகுளோரா பென்சின் என்பதில் பெருமளவு டி. டி ட்டி. என்பதனைச் செய்யப் பயன்பட்டு விடுகிறது. சிறிது பாகம் பயன்படாது என வெளியே தள்ளப் படுகிறது. டி.டி.ட்டி. யானது மிகுதியாகச் செய்யப்பட்ட பொழுது விலை மிகவும் குறைந்துவிட்டது. அப்போது செலவினை ஈடுசெய்வதற்குக் கழிவுப் பொருளைப் பயன்படுத்த வேண்டிவந்தது. இந்த நிலையானது வேண்டாததுஎன வெளியே சாய்க்கடையில் விடப்பட்ட பொருளைக்கொண்டு மேலும் மானோகுளோரோ பென்சின் பெறுதற்கு வேண்டிய வழியினைக் கண்டுபிடிக்கும்படிச் செய்தது. இந்தக் கண்டுபிடிப்பின் பயனாய் டி.டி.ட்டி. விலை வீழ்ச்சியை ஈடுசெய்ய முடிந்தது. இந் நிகழ்ச்சி இன்னொரு உண்மையினையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. அதாவது எந்த ஒரு தொழிற்சாலையில் பொருள் பயன்படுத்தப்பட்டு உதவாதது எனச் சாய்க்கடையில் தள்ளப்படுகிறதோ, அந்தத் தொழிற்சாலையில் உண்டாக்கப்படும் பொருள்கள் இருக்க வேண்டிய விலையைவிட மிகுதியாக இருக்கிறது என்பது வெளிப்படுகிறது.

வேண்டப்படாதது என்ற பொருள், வியத்தகு அளவில் மிகுதியான பயன்தருவதும் உண்டு. எடுத்துக் காட்டாக வெள்ளிச் சுரங்கத்தைக் காணலாம். வெள்ளிச் சுரங்கத்தில் கனிப் பொருள்களை வெட்டி, அக் கனியிலிருந்து வெள்ளியைப் பிரித்த பிறகு, வேண்டப்படாதது எனத் தள்ளப்பட்டக் கழிவுப் பொருள் வெள்ளியைவிட மிகுதியான பொருள் வருவாயைத் தருதற்கு ஏற்றதாக பிலிம்கள் செய்யப்பயன் படுகின்றன.

பல தொழிற்சாலைகளில் எரிக்கப்படுகின்ற பொருள்களால் புகையானது வெளியே செல்கின்றது. அப் புகையானது கார்பன் டையாக்சைடு என்பதாகும். உலகில் எரிக்கப்படும் பொருளில் மூன்றில் ஒரு பங்கு பொருள் எரிக்கப்படாமல் வீணாக்கப்படுகின்றது. அதாவது புகையாக, கார்பன் டையாக்சைடாக வெளியே சென்றுவிடுகிறது. ஆனால் கதிரவனின் ஆற்றல்கொண்டு, இப்படி வீணாகப் போகும் கார்பன் டையாக்சைடு வாயுவினைக் கரியாகவும், உயிரியமாகவும் (oxygen) பிரித்துப் பயன்படுத்துதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இப்படி இந்த முயற்சியில் நாம் வெற்றி பெற்றுவிட்டால், விறகு, கரி இன்றி நாம் படும் அல்லலும், அப்படிக் கரியும், விறகும் கிடைத்தாலும் 'கலப்பட' வாணிபர்களால் நாம் படும் அல்லலும் நீங்கி மகிழ்வாக வாழ வழியுண்டாகும்.

நாம் எல்லாம் வீண் என எண்ணி வீணாக்கும் பொருளால் நமக்கு ஏற்படும் பயன் பலப்பல. ஆனால் தக்க முறை வேண்டும். இப்படி வீண் எனக் கழிவு நீராகச் சாய்க்கடையில் விடுவதாலும், புகையாகப் புகைபோக்கி மூலம் வெளிவிடுவதாலும், சுற்றியுள்ள நீரும் காற்றும் கெடுக்கப்பட்டுப் பல நோய்கட்கு ஏதுவாகின்றன.

இதிலிருந்து நாம் அறியும் உண்மை ஒன்று உண்டு. பயன்படாது எனவோ, பயன்பட மாட்டான் எனவோ ஒரு பொருளை அல்லது ஒரு மனிதனை நல்லவழியில் பயன்படுத்தப் பின்னடைவோமானால் அப்பொருளால், அம் மனிதனால் ஏற்பட இருக்கும் நன்மையை இழப்பதோடு, தீமையினையும் பெறுகிறோம். ஆகையால் எதையும் பயன்படாதது என்று தள்ளிவிடாது பயன்படுத்தப் புகுகின்ற அறிவே சிறந்த அறிவு.

இயற்கைக் கூத்து!

திரு. நா. தேசிகன்

நிறமுடைய பூவினிலே நேர்மணமுஞ்
சுவைநறவுஞ் சேர்த்து வண்டைத்
திறமுடனே அழைத்தூட்டிக் கருக்கொள்ளச்
செய்கின்றாய் வண்டுந் தங்கள்
முறமனைய அடையினிலே முதிர்சுவையாம்
தேனுக்கிக் காத்துக் கையில்;
திறமுடையார் உழைப்போரின் செல்வத்தைக்
களவாடல் விளக்கஞ் செய்தாய்!

நிலத்தினிலே வளமாகி நேர்கின்ற
பயன்யாவும் ஊட்டி மக்கள்
நலத்தினுக்கே வாழ்கின்ற நல்லறிஞர்
உளமென்ன நின்று தீயர்
தலத்தினிலே செய்கொடுமை தாங்குகின்ற
நயங்காட்ட மானும் பொல்லா
விலங்கினையும் அரவினையும் விளையாட்டாய்ப்
படைத்திட்டாய் மகிழப் போலும்!

முழுமதியும் மின்மினியும் வியனுலகில்
படைத்திட்டாய் அறிஞர் நாப்பண்
பழுதுடைய கூட்டத்தின் பகடியினை
விளக்கிடவோ நின்று தாங்கும்
விழுதுடைய ஆலிடையே நாணலையுங்
கண்டிட்டேன் கொள்கை யற்றே
வழுவுடைய செயல்புரிந்து மானமற்று
வாழ்வாரை நினைக்கச் செய்தாய்!

மழையினையுந் தென்றலையும் படைத்தகையால்
வெம்மையுடன் வாடை தன்னை
விழைந்ததுவோ நின்னுள்ளம் விட்டிலையும்
ஏன்படைத்தாய் பயிர ழிக்க
குழையுடைய மரத்தினிடைக் கொடிக்கள்ளி
ஏன்படைத்தாய் தழைந்த காட்டில்
கழையிடையே நெருப்பிருத்திக் காடழித்து
மகிழ்கின்றாய் கொடியர் போல!

விண்ணிடையே மழைபொழிய அழகுசெய
முகில்வைத்தாய் கொடிய மின்னைக்
கண்பறிக்க ஏன்வைத்தாய் கவின்செய்யுஞ்
சோலையிலே அரவை யொப்பப்
பண்ணிடையே மகிழ்கின்ற அசுணத்தின்
செவிக்கேனோ பறையும் இந்த
மண்ணிடையே உயிரெல்லாம் ஒன்றையொன்று
கொன்றுண்ணல் மாட்சி தானோ?

மலையிடையே சிறுதுளிகள் அருவியெனப்
புறப்பட்டே யாற்றில் கூடி
அலையுடைய கடல்நோக்கி யோடுவதைக்
கண்டிட்டேன் மங்கை நல்லாள்
தலைவனுடன் கொண்டிட்ட பெருங்காதல்
காத்திடவே தானுஞ் சென்று
நிலையுடனே வாழ்கின்ற செயல்நினைந்தேன்
இத்துணையும் இயற்கைக் கூத்தே!

திரு. என். தியாகராசன்

பிறர்முகம் மலரப்
பிறங்கொளி திகழத்
திறமிக மலரும்
திருமகள் இல்லம்



திரு. பி. ரங்கநாதன்

அருளாளர் உளக்கனிவால்

அடிவயிறு குளிருமிங்கே............



திரு. முகமது அபுபக்கர்

............அருளில்லா உளத்தெரியால்

அடிவயிறு நிறைவதிங்கே



இந்திய அரசாங்கம்

செப்டெம்பர் 19-ம் தேதியன்று விஞ்ஞான, தொழிலியல்
ஆராய்ச்சிக் கழகத்தின் கூட்டம்
திரு. நேருவின் தலைமையில் நடைபெற்றது.

விஞ்ஞானப் பொய்

"பொய்யாமொழி"

தற்கால விஞ்ஞானக் கருத்துக்களும், விஞ்ஞான அறிவும் ஐரோப்பாவில் எழுந்த மறுமலர்ச்சி(Renaisance)யின் விளைவுகள். மறுமலர்ச்சி என்று கூறப்படுவது பண்டைக் காலத்தில் கிரேக்க அறிஞர்கள் அளித்த அறிவுச் செல்வம் வெளிவராது மங்கிக் கிடந்ததை மீண்டும் வெளிக்குக் கொண்டு வந்ததே. கிரேக்க நாகரிகம் மறைந்தது போலவே, அவர்களின் அறிவுக் களஞ்சியங்களான பல அறிய நூல்கள், பல அறிஞர்களின் கருத்துக்கள் மறைந்தன. எனினும், கிரேக்க வல்லரசு மற்ற வல்லரசுகளால் மறைந்தபோது, பின் வந்த வல்லரசுகள் கிரேக்கரின் அறிவுக் களஞ்சியத்தைக் கொண்டுபோயின. பலவாறு சிதறிக் கிடந்த கிரேக்க அறிஞர்களின் நூல்களை வெளிக் கொணர்ந்த பெருமை கிறித்துவப் பாதிரிமார்களைச் சேரும். அவர்கள் இடைவிடாது உழைத்து அரபு நாட்டினரிட மிருந்தும்—அவர்களது மத விரோதிகளாயினும்—பலப் பல நூல்களைச் சேகரித்தனர். அவற்றில் முக்கியமானவை கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டிலின் நூல்களாகும். தற்கால விஞ்ஞானக் கருத்துக்கள் அரிஸ்டாட்டிலின் கருத்துக்களினின்றும் திருந்திய கருத்துக்கள் என்றே சொல்லலாம். அவரது கருத்துக்கள் பல துறைகளை அடக்குகின்றன. ஒரு குறிப்பிட்ட துறையில் அவரது கருத்துக்களை மாத்திரம் நாம் இங்கே எடுத்துக்கொள்வோம். குறிப்பாக நிலத்தில் விழுகின்ற பொருள்களின் வேகம் ஏன் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது என்பதற்கு அரிஸ்டாட்டில் கூறும் காரணம் பின் வருமாறு: ஒரு பொருள் இயங்குவதற்குக் காரணம், அப் பொருளுடன் இருக்கும் பொருளைப் பொறுத்தது. அப் பொருளுடன் இணைந் திருக்கும் பொருளின் இணைப்பு அதிகமாக இருந்தால், அப் பொருளின் இயக்கமும் அதிகமாக இருக்கும். ஒரு பொருள் கீழே விழுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப் பொருள் காற்றுடன் இணைந்துகொண்டே இருக்கிறது. அப் பொருள் கீழே வரவர அதிகமான அளவு காற்றுடன் இணைந்து கொண்டே இருக்கிறது. ஆகவே கீழே வரவர அதன் வேகமும் அதிகமா யிருக்கிறது. இதே காரணத்தை யொட்டியே அதிக பளுவாயிருக்கின்ற ஒரு பொருளும், பளு சற்றுக் குறைந் திருக்கின்ற பொருளும் ஒரே சமயத்தில் கீழே விழ ஆரம்பித்தால், அதிக பளுவுள்ள பொருள் சீக்கிரத்தில் கீழே விழுகின்றது என்பது அரிஸ்டாட்டிலின் கொள்கை. அதிக பளுவுள்ள பொருளில் இருக்கின்ற 'பொருளி'ன் அளவு — இயக்கத்திற்குக் காரணமான பொருளின் அளவு—அதிகமாதலால், அது அதிவேகமாகக் கீழே விழுகின்றது.

மேலே கண்ட கொள்கையின்படி 100 பவுண்டு எடையுள்ள ஒரு குண்டு, ஒரு பவுண்டு எடையுள்ள ஒரு குண்டு கீழே விழுகின்ற வேகத்தைப் போல், நூறு மடங்கு வேகத்தில் விழும் என்றுகிறது. ஆனல், உண்மை அப்படி அல்ல. இரண்டு குண்டுகளும் ஒரே வேகத்தில்தான் கீழே விழும். இந்தக் கொள்கையை நிலைநிறுத்த மிகச் சிக்கல் நிறைந்த கருவிகள் வேண்

டிய தில்லை. மிக எளிதில் செய்துபார்த்து விடலாம். ஆனல் இவ்வளவு எளிய ஒரு சோதனையை அரிஸ்டாட்டில் கூறிய காலத்திருந்து கிட்டத்தட்ட 1500 ஆண்டுகள் ஒருவரும் செய்து சரிபார்த்துக் கொள்ள வில்லை. அரிஸ்டாட்டிலின் கொள்கையின் விளக்கம் மக்களின் மனத்தில் அவ்வளவு சிறந்த நம்பிக்கையுடன் இடம் பெற்று விட்டது.

அரிஸ்டாட்டிலின் இந்தக் கொள்கை சரியில்லை என்று கூறியவர் இத்தாலிய நாட்டுக் கணிதப் பேராசிரியர் கலிலியோ கலீலி (Galileo Galilei). இவரது கொள்கை—கீழே விழுகின்ற ஒரு பொருளின் வேகம் கீழே வரவர அதிகமாகிறது; விழுகின்ற நேரம் அதிகமாக அதிகமாக விழுகின்ற வேகமும் அதிகமாகின்றது.'' மேலே கண்ட கலிலியோவின் கொள்கையில் விழுகின்ற பொருள்களின் எடையைப் பற்றிய எத்தகைய குறிப்பும் இல்லை. ஆனல் அரிஸ்டாட்டிலின் கொள்கையின்படி விழுகின்ற பொருளின் ''பொருளு''க்கு முக்கியமும், நேரத்தைப் பற்றிய குறிப்புங் கூட இல்லாமையும் கவனிக்கத் தக்கன. கலிலியோவின் கொள்கை சரி என்று நிறுவ வேண்டுமெனின் ஏதாவது ஒரு உயர்ந்த இடத்தில் இருந்துகொண்டு இரண்டு பொருள்களை ஒரே சமயத்தில் கீழே விடவேண்டும்.மேலும் இந்த இரண்டு பொருள்களும் ஒரே எடை உள்ளனவாக இருத்தல் கூடாது. இவ் விரண்டு பொருள்களும் ஒரே சமயத்தில் தரையைத் தொட்டால் கலிலியோவின் கொள்கை சரியானது என்று கொள்ளலாம்.

கலிலியோவின் சீடர் ஒருவர், கலிலியோவின் வாழ்க்கையை எழுதி இருக்கிறார். தனது ஆசிரியரைச் சற்று அதிகமாகவே புகழ்வது மாணவரின் உரிமை அல்லவா! அம் முறையை ஒட்டி அம் மாணவர், தனது ஆசிரியர் கலிலியோவின் வாழ்க்கைக் குறிப்பில், கலிலியோ பைசா நகரத்தி லுள்ள சாய்ந்த கோபுரத்தின் உச்சியிலிருந்து வேறு வேறு எடையுள்ள இரண்டு பொருள்களைக் கீழே விட்டுத் தனது கொள்கையைச் சரிபார்த்துக் கொண்டார், என்ற கருத்து இருப்பதாக ஆதாரமற்ற ஒரு கதை நிலவுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு, மேலும் சில விவரங்களைச் சில சரித்திர ஆசிரியர்கள் ஒட்டவைத்து விட்டனர். 1918 ஆம் ஆண்டில் வெளியான ஒரு நூலில் எவ்வாறு கலிலியோ ஒரு கையில் நூறு பவுண்டு பீரங்கிக் குண்டு ஒன்றையும், மற்றொரு கையில் ஒரு பவுண்டு குண்டு ஒன்றையும் தாங்கி, பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரத்தின் படிகளில் ஏறிச் சென்றார் என்று விவரிக்கப்பட் டிருக்கிறது. 1923 ஆம் ஆண்டில் ஐவர் பி ஹார்ட் (Ivor. B. Hart) என்ற விஞ்ஞான வரலாற்று ஆசிரியர் மேலே கண்ட சோதனையை ''விஞ்ஞானத்தின் வரலாற்றிலேயே மிகப் பெருமை வாய்ந்த சாதனைகளில் ஒன்று'' என்று புகழ்ந்திருக்கிறார். அவரது கூற்று மேலும் பின்வருமாறு:

''பைசா நகரத்தில் உள்ள சாய்ந்த கோபுரத்தில் நடந்த சோதனை யாவரும் அறிந்ததே. அந்தச் சோதனையைப் பார்ப்பதற்காக ஆட்களைச் சேர்ப்பதற்குக் கலிலியோ எடுத்துக்கொண்ட முயற்சி விரிக்கில் பெருகும். ஆட்களைச் சேகரித்த முயற்சி உண்மையிலேயே இரங்கத் தக்கதாகும். அவர்கள் வேண்டா வெறுப்பாகவே வந்தவர்களாக இருக்கவேண்டும். இந்த வம்புக்கார இளைஞன் மெதுவாக அந்தக் கோபுரத்தின் படிகளில் ஏறும் பொழுது, எத்தகைய கோபப் பேச்சுக்கள் நடந்திருக்க வேண்டும். வேறு வேறு எடையுள்ள இரு பொருள்களை ஒரே சமயத்தில் விடுவதற்கு ஒரு அடையாளம் காண்பிக்கும் பொழுது, அவர்கள் விரும்பாத ஒரு செயல் நடக்கப் போவதைப்பற்றி ஒரு 'கசுபிசு' ஏற்பட் டிருக்கும் என்பதில் ஐயமில்லை......... தடால்! ஒரே சமயத்தில் அந்த இரண்டு பொருள்களும் தரையை

அடைந்தன. உலக வரலாற்றிலேயே அது ஒரு மிகமுக்கியமான நேரம்.''

1941 ஆம் ஆண்டில்கூட டாக்டர் சிங்கர் (Dr. Singer) தனது 'விஞ்ஞானத்தின் வரலாறு' என்ற நூலில் இந்த நிகழ்ச்சியைச் ''சோதனைகளிலெல்லாம் மிகப் புகழ் வாய்ந்தது'' என்று கூறுகிறார். மேலும் இது கி. பி. 1591 ஆம் ஆண்டில் நடந்ததாகவும் கூறுகிறார்.

ஆனால் உண்மை வேறுவிதமாக இருக்கிறது. அந்தச் சோதனையைக் கண்ணாரக் கண்டதாகக் குறிப்பிடப்பட்ட அந்தப் பெரிய கூட்டத்தி லிருந்த ஒருவராவது அந்தச் சோதனை நடந்ததைக் கூறியதாகத் தெரியவில்லை. மேலும் கலிலியோவின் நூல்களிலும்கூட இதற்கு ஆதாரம் காணவில்லை. ஆனால் கலிலியோ தனது சிறுவயது முதல் இந்தச் சோதனையைச் செய்து பார்த்ததாக எழுதி இருக்கிறார். ஆனால் சோதனையின் முடிவு அவர் கூறிய முடிவல்ல. அவர் செய்து பார்த்த அளவில் அரிஸ்டாட்டிலின் கொள்கையே சரியானது என்ற முடிவுக்கு வரவேண்டி இருக்கிறது.

ஆனால் இதே சோதனையை சைமன் ஸ்டெவின் (Simon Stevin) என்ற விஞ்ஞானி செய்து பார்த்தார். அவர் 30 அடி உயரத்திலிருந்து மாத்திரம் ஈயக் குண்டுகளை கீழே விட்டார். அப்பொழுதும் அரிஸ்டாட்டிலின் கொள்கைக்கே வெற்றி! ஆனால் அரிஸ்ட்டாட்டிலைப் பின்பற்றுகின்றவர்கள், இந்த உயரம் போதாது இன்னும் அதிக உயரத்திலிருந்து பொருள்களை விடவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தனர். அவர்களது எண்ணம் அரிஸ்டாட்டிலின் கொள்கை இன்னும் வலிவுறும் என்பது. கலிலியோவும் இதே கொள்கை கொண்டிருந்தார். கோபுரத்தின் உச்சியிலிருந்து பொருள்களை விட்டால் போதாது. இதைப் போன்று இரண்டு மடங்கு உயரத்திலிருந்து பொருள்களை விட்டால் தனது கொள்கை வெற்றியுறும் என்பது அவரது கொள்கை. இதைவிட அதிசயம் என்னவெனில் அரிஸ்ட்டாட்டிலின் கொள்கை சரிதான் என்பதை நிறுவ கொரேஸியோ (Coresio) என்பவர்தான் அந்தச் சாய்ந்த கோபுரத்தி லிருந்து பொருள்களை கீழே விட்டவர். அவர் கண்டது; எடை அதிகமுள்ள பொருள் சீக்கிரம் கீழே வந்தது, எடை குறைவானது சிறிது நேரம் கழித்து விழுந்தது. ஆக அரிஸ்ட்டாட்டிலின் கொள்கையே சரியானது!

மேற்கூறிய நிகழ்ச்சிகள் நடந்திருக்கக் கலிலியோ மாத்திரம் — சோதனையின் மூலம் நிறுவ முடியாமற் போனாலும்— தான் கொண்ட கொள்கை சரி என்று வாதாடினார். இவரது கொள்கையை வேறுவிதமான சோதனைகளால் நிரூபிக்க முடிந்தது. கலிலியோவின் காலத்தில் கீழே விழுகின்ற பொருளின் மேல் காற்றின் எதிர்ப்பு (air resistamce) இருப்பதைப் பற்றிய அறிவு இல்லாததால், சோதனைகள் சரியான முடிவைக் காண்பிக்க முடியவில்லை. கலிலியோவுக்குப் பின் வந்த சர். ஐசக் நியூட்டன் (Sir Issac Newton) அவரது காசும், இறகும் விழும் சோதனை (Guinea and feather experiment) மூலம் கலிலியோவின் கொள்கையை நிறுவ முடிந்தது.

கலிலியோ மிகத் திறமை வாய்ந்த கணிதப் பேராசிரியர், விஞ்ஞானி; மேலும் எந்தக் கருத்தையும் சோதனையின் மூலமே ஏற்றுக் கொள்பவர். இத்தகைய சிறப்பு வாய்ந்தவர் கலிலியோ என்ற நினைப்பில் சிறிதளவு பொய்யை அவரது பெயருடன் இணைத்து விஞ்ஞான வரலாற்றில் உலவ விட்டனர். இது எப்படியோ வழி வழியாக வந்து கொண்டே யிருக்கிறது. விஞ்ஞானப் பாடப் புத்தகத்தில் நாம் காண்பது பைசா நகரின் சாய்ந்த கோபுரத்தின் படம் ஒரு புறமும், பக்கத்தில் கலிலியோவின் படமும். அந்தச் சாய்ந்த கோபுரத்தின் உச்சியில் கலிலியோ நின்று கொண்டு இரண்டு குண்டுகளைக் கையிலேந்திக் கொண்டிருக்கின்ற ''போட்டா'' வைக் காண்பித்தால் இந்த ''விஞ்ஞான உண்மையை'' நான் நம்பத் தயார். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. கலிலியோ பைசாப் பல்கலைக் கழகத் (Univirsty of Pisa) தில் கணிதப் பேராசிரியராக இருந்தார்!

அடைக்கலச் செல்லி பெருகுது. வெள்ளைக்குக் கடற்கரும்பு பெருகினயா?

பூனைஞ்ஞ — கருங்காய்

தமிழருக்குப் புரியாத தமிழ்

கூரைக்கோட்டுக்குப் பெருகிக் கட்டுறயா? வெள்ளோடம். உறுட்டுவான்

திரு. அருள் செல்வநாயகம்

நாற்புறமும் கடலாற் சூழப்பட்ட ஈழத்தின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் பண்டுதொட்டு இன்றுவரையும் வாழ்ந்து வருகிறார்கள். ஈழத்திலே வதியும் சிங்கள மக்களின் பண்பாட்டினுக்குப் புறம்பான பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களாகத் தமிழ் மக்கள், தமிழர் பண்பாட்டைக் காத்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

கிழக்கு இலங்கை, செல்வம் கொழிக்கப் பெற்ற கமக்காரரின் நாடாகும். ஈழத்தினுக்கே பெருமை கொடுக்கும் மகாவலி கங்கை, கிழக்கு இலங்கையை வளம்படுத்திக் கடலிற் கலப்பதனால், பரந்துபட்ட வயல் வெளிகளைக் கொண்டதாக இந்நாடு திகழ்கின்றது; மகாவலி கங்கைமட்டுமன்று, இன்னும் பல நதிகள் பாய்ந்து இந்நாட்டை வளம் படுத்துவதனால் குறைவற்ற நெல் மணிகளைக் கொண்டதாகத் திகழ்கிறது.

வளம் பெருகிய பண்புடைய கிழக்கு நாட்டிலே வாழ்பவர்க ளெல்லாரும் உழவையே வாழ்வின் நோக்கமாகக் கொண்டு வாழ்கிறார்கள். பரந்துபட்ட வயல் வெளிகள் இருக்கின்றன; அவைகளைச் செம்மைப்படுத்த நல்ல நதிகள் இருக்கின்றன; பண்படுத்தக் கால்நடைகள் இருக்கின்றன. இன்னு மென்ன! இயற்கைக் கொடைகளைப் பயன்படுத்தி உழுதுண்டு வாழ்வதிலே பெருமை கொண்டவர்களின் தாயகமாகும் கிழக்கு இலங்கை.

கிழக்கில் வாழ்பவர்கள் எல்லாரும் உழவர்களே. அனைவரும் உழுதுண்டு வாழ்வதிலே இன்பம் கண்டவர்களே. மெய் வருந்தி உழைப்பதில் ஆனந்தம் கண்டவர்களே. இயற்கை அன்னை குறைவின்றி வழங்குகின்றாள். அதனைக் கிழக்கு இலங்கை மக்கள், மனம்போற் பயன்படுத்தி, உழுவதிலே பெருமை கண்டு வாழ்கிறார்கள்.

ஈழத்திலே மன்னவர்கள் செங்கோல் செலுத்திய காலையில், ஈழநாட்டிற்குத் தேவையான நெல்மணிகளை யெல்லாம் வழங்கியது கிழக்கு இலங்கைதான். ஆதலினால் கமத்தை இன்னும் வளம்படுத்தும் பொருட்டு அரசர்கள் குளங்களை வெட்டுவித்து மக்களை ஊக்குவித்தார்கள்.

''உழவன் மகன் உழவன்'' என்ற முறையிலே பெருகி வாழ்பவர்கள்தான் இன்றைய கிழக்கு இலங்கைத் தமிழர்கள். மூன்று மாதங்களாக ஓயாது உழைத்துப் பயன் பெற்று, அதனை ஒன்பது மாதங்களாக உண்பவர்கள் இவர்கள். கடும் உழைப்பும் போதிய ஓய்வும் கொண்டவர்கள். 'மனம்போல் மாங்கலியம்' என்ற வகையிலே குடும்ப வாழ்க்கை நடத்துகிறார்கள்.

உழவர்களின் வேலை மிகவும் கடினமானதுதான். பூமாதேவியை நம்பித்தான் அவர்கள் வாழ்கிறார்கள். பூமாதேவியை மனங் குளிரச் செய்து, கூடிய பலனைப் பெறத்தான் எல்லா உழவர்களும் விரும்பு

வார்கள். யாராவது பூமாதேவியின் கோபத்தைப் பெற விரும்புவார்களா? விரும்பவே மாட்டார்கள். ஆதலினுற்றுன் உழவர்கள் எத்தனையோ தடவைகளில் பூமாதேவியை வணங்குகிருர்கள். பூமி மனம் குளிர வேண்டும்; கூடிய பலன் கிடைக்கவேண்டும். இதுதான் அவர்கள் விருப்பம். அவர்களது நம்பிக்கை சிதைவுருது பூமாதேவி மனம் போற் கொடுப்பாள். பூமாதேவியின் அருளினுற்றுன் உழவர்கள் வாழ்கிருர்க ளென்ருலும் மிகையாகாது.

கூடிய பயனைப் பெற்ற உழவர்கள் மனைவி மக்களுடன் ஆனந்தமாக வாழ்கிருர்கள்; உண்டு உறங்கி உல்லாசமாக வாழ்கிருர்கள். இந்த உழவர்கள் கூடிய பலனைப் பெறும்போது, அதாவது சூடு போட்டு வைக்கோல் வேறு, நெல் வேருகப் பிரித்தெடுக்கும் வேளையில், ஒரு புது மொழியை உருவாக்குகிருர்கள். இந்த மொழியை அவர்கள் சூடுபோடும் வேளையில் உபயோகிப்பார்கள். அப்படி இந்தப் புது மொழியான களவெட்டி மொழியைப் பயன் படுத்தாவிட்டால், பூதங்கள் நெல்லை உறுத்திப் பதராக்கிவிடு மென்று சொல்கிருர்கள். ஆதலினுற்றுன் இவர்கள் பொலி காணும் வேளையில் புதுமையான களவெட்டி மொழியைக் கையாள்கிருர்கள்.

பொதுவாகக் கிழக்கு இலங்கை மக்களின் பேச்சுத் தமிழ், ஏனைய தமிழ் மக்களின் தமிழைக் காட்டிலும் வேறுபட்டிருக்கும். அதாவது இவர்கள் பேச்சுத் தமிழில் கா அசையைச் சேர்த்து வழங்குகிருர்கள். என்ன என்பதை **என்னகா** என்றும், ஓம் என்பதை **ஓங்கா** என்றும், வழங்குகிருர்கள். இந்தக் கா அசை இலக்கணத்தினுக்குக்கூட அமைந்த தாகும். சங்ககால மக்கள் கூட உபயோகித்தார்கள். இவ்வாருன பழைய பேச்சு வழக்கை இன்னும் கிழக்கில் காண முடிவது பெரும் பேறே யாகும். ஆதலினுற்றுன் விபுலாநந்த நாவலர் அவர்களும்

''ஆடவர் தோளிலுங் கா
அரிவையர் நாவிலுங் கா''

என்று அழகாகக் கூறினுர்கள்.

கா அசையை அழகாகக் கொண்ட பேச்சுத் தமிழைத் தமிழர்கள் சூடு போடும் போது உபயோகிக்க மாட்டார்கள். அந்தப் பேச்சுத் தமிழை உபயோகித்தால் பயன் குறைந்துவிடு மென்று சொல்கிருர்கள். அவர்களின் நம்பிக்கை அது! வீட்டு மொழியை விதைப்பு, அறுவடைக் காலங்களில் உபயோகித்தாலும், சூடு போடும் இரவு வேளைகளில் உபயோகிக்க மாட்டார்கள்.

'தாயே பொலி பொலி' என்று அவர்கள் களவெட்டியில் மாடுகளின் பின்னுல் வரும் போது புது மொழியையே உருவாக்கி விடுகிருர்கள். இந்த மொழி எல்லாக் கமக்காரர்களுக்கும் தெரியும். பேசத் தெரியாத குழந்தை பேசுபவரின் சொற்களைக் கேட்டுப் பேசப் பழகுகிறதல்லவா? அது போல் களவெட்டி மொழி தெரியாத புதுக் கமக்காரர்களும் இரண்டொரு நாளில் தேர்ச்சி பெற்றுவிடுவார்கள்.

களவெட்டி மொழி அவ்வளவு கடினமானதன்று. அதாவது சூடுபோடும் நேரத்தில் அவர்களுக்கு உபயோகமாகும் பொருட்களுக்கு வேறு பெயர்கள் இட்டிருக்கிருர்கள். அவ்வேறு பெயர்களைத் துணையாகக் கொண்டு பேசுவார்கள்.

நடைமுறை மொழிக்கும் இந்தக் களவெட்டி மொழிக்கும் மிகவும் வேறுபாடு உண்டு. முழுதும் வேறுபட்டதாகவே இருக்கும். களவெட்டியிலே உருவாகும் மொழியானமையால், களவெட்டிக்குத் தேவையான பொருட்களுக்கே களவெட்டி மொழியில் பெயர் கொடுத்துள்ளார்கள். அந்த வகையிலே இனி நாம் புது மொழியைப் பார்ப்போம்.

கயிறு. இது களவெட்டியிலே மிகவும் இன்றியமையாதது. இதனைச் சூடு போடும் போது கயிறு என்று சொல்லமாட்டார்கள்; **நெடுமுழவன்** என்று சொல்வார்கள்.

இவ்வகையிலே தாம்பூலத்தினுக்கு உப யோகப்படும் புகையிலையைப் **புகஞ்சான்** எனவும் பாக்கைக் **கருங்காய்** எனவும், வெற்றிலையை, **அழகல் காஞ்சான்** என வும், சுண்ணும்பை **வெள்ளை** எனவும் சொல்வார்கள்.

இவை சில சொற்கள். அதாவது பெயர்ச் சொற்கள். இந்தப் பெயர்ச் சொற்கள் வினைச் சொற்களுடன்தானே இழுபட வேண்டும்? இல்லாவிடில் வசனமாகாதே. ஆகவே பலவினைச் சொற்களுக்கு ஒரு சொல்லினையே கமக்காரர்கள் கொடுத்து விட்டார்கள். சாப்பிடுதல், கொடுத்தல், கொடு, வா, வருதல், போ, போதல்,சொல், சொல்லுதல், குடி, குடித்தல், தா, தருதல் ஆகியவைகள் எல்லாவற்றினுக்கும் **பெருகு** என்பார்கள். இந்தப் பெருகு என்ற வினைச் சொல் எவ்வகையான பெயர்ச் சொல்லுடன் சேர்த்துச் சொல்லப் படுகிறதோ. அதற்கேற்ப அர்த்தத்தைப் புரிந்துகொள்வார்கள். இதே போல் **'கட்டு'** என்று ஒரு வினைச் சொல்லும் **அள்ளு** என்னும் கருத்தி லிருக்கிறது. கள வெட்டியில் உபயோகப்படும், அதாவது அளக்கவோ, நெல்லைக் கொட்டி வைக் கவோ உபயோகப்படுபவைகளுக்குக் கமக் காரர் கொடுத்த, களவெட்டிப் பெயர் மிக வும்நன்ருக இருக்கிறது.

மரக்காலைக் **கணக்கன்** என்பார்கள். மரக்கால் என்பது ஒரு முகத் தல் அளவை. அளந்து அளந்து, நெல்லைக் கொட்டிக் கணக் கெடுக்க உதவுவதனுல் கணக்கன் என்று பொருத்தமாகவே பெயர் சூட்டிவிட்டார்கள்.

கடகம் என்பது கிழக்கு இலங்கையில் பயன்படும் ஒரு வகைப் பெட்டி. பிரம் பினுல் பின்னப்பட்ட பெட்டி. இப் பெட்டியில் 5 அல்லது 6 மரக்கால் நெல் போடலாம். இந்தக் கடகம் சிறிய தென் றும், பெரிய தென்றும் வழங்கப்படுகிறது. சிறிய கடகத்தைக் **குஞ்சுவாயன்** என் றும், கடகத்தைப் **பெருவாயன்** என்றும் சொல்வார்கள்.

நெல்மணியைப் பெறும்போதுதானே இந்தப் புது மொழியை உருவாக்கினுர் கள்? ஆகவே வாரி வாரிக் கிடைக்கும் நெல்லைப் **பொலி** என்பார்கள். அதாவது உழவர்கள் மாடுகளின் பின்னுல் வரும் போது பொலி பொலி என்றுதான் பாடு கிருர்கள். அவர்கள் பாடல்கள் அழகானவை. வகைக்கு இதோ ஒரு பாட்டு:

போரேறப் பொலிவளரத் தாயே
பொலி

பூமியிலுள் ளோர் ,ஈடேற
ஈடேறக் கண்பாரும் தாயே பொலி
இரக்க முள்ள மாதாவே.

இவ்வாருக நூற்றுக் கணக்கிலே அவர் களின் பொலிப் பாடல்கள் இருக்கின்றன. அதாவது எல்லாப் பாடல்களிலும் தாயே பொலி பொலி என்று சொல்லத் தவறமாட் டார்கள். தாயே என்று பூமாதேவியைக் குறித்து அதிகமான நெல்லைக் கொடு கொடு என்றுதான் அவர்கள் பாடல்கள் செல்கின்றன. இவை உழவன் கண்ட உன்னதமான பாடல்க ளாகும்.

உழவர்களுக்கு அதிகமாகப் பயன்படு வது கம்பாகும். அதுமட்டு மன்று. மாடு கதிரை மிதித்த பின்னர், வைக்கோலே வேருக்கவும் ஒரு கம்பை உபயோகிக்கிருர் கள். இதனை வேலைக்காரன் கம்பு என் பார்கள். ஆனுல் களவெட்டி மொழியில் இப்படிச் சொல்லமாட்டார்கள். கம்பை, **விசுக்குவாள்** என்றும், வேலைக்காரன் கம்பை **வேலையாழன்** என்றும் சொல் வார்கள்.

ஒவ்வோர் இரவும் அவர்கள் சூடு போடும்போது, ரொட்டி செய்து படைத்துச் சூடு போடுவது வழக்க மாகும். இந்த ரொட்டியை **வலிக்கான்** என்று அழகாகச் சொல்வார்கள். அதாவது மாவினுல் செய்த இது சாப்பிடும்போது வலிமையாக இருப்பதனுல், வலிக்கான் என்று பெயர் வைத்தார்கள் போலும்.

உழவர்களுக்குப் பல ஆயுதங்கள் களவெட்டியிலே தேவைப்படும். அவ் வாயுதங்களுக்கும் அழகான பெயர் கொடுத்து விட்டார்கள். மண்வெட்டியை, **வெட்டுவாய** னென்றும், கத்தியைக் **கொல்லன்** என்றும் சொல்வார்கள்.

தேங்காய் அவர்களுக்கு இன்றியமையாதது. அதுபோல் சோறு, அரிசி எல்லாம் தேவையானவைகளே யாகும். களவெட்டியிலும் சோறு தேவைப்படு மன்றோ! ஆகவே சோற்றை **வெள்ளை** யென்றும் அரிசியைக் **குறுமணி** என்றும், தேங்காயை **வெள்ளோடம்** என்றும் சொல்லிக் கொள்வார்கள்.

நித்திரைதானே மனித வாழ்வின் ஓர் அங்கமாகும். சூடு போட்டுக்கொண்டிருக்கும்போதே நித்திரை வந்து விடுமே! இந் நித்திரையை **மின்னி** என்று அழகாகச் சொல்வார்கள்.

மாடுதான் உழவர்களுக்கு இன்றி யமையாதது. இந்த மாட்டின் சாணத்தைக் **கோல்** என்பார்கள்.

இன்னும் வண்டி, வீடு என்பன இவர்களது பேச்சுக்களில் அடிக்கடி இடம்பெற வேண்டுமன்றோ! ஆகவே, அவைகளுக்கும் அருமையான பெயர்கள் கொடுத்துள்ளார்கள்; வண்டியை **உருட்டுவான்** என்பார்கள். பொருத்தமான பெயர்தான். உருண்டுகொண்டு செல்வதனால் இப் பெயர் கொடுத்தார்கள் போலும்!

வீடு. இதில்தான் அவர்கள் வாழ்கிறார்கள். வீட்டிலிருந்துதான் அவர்கள் சாப்பிடுகிறார்கள்; இன்னும் தேவையான சாமான்களை எல்லாம் வீட்டுத் தலைவி அதாவது கமக்காரனின் மனையாள் அவனுக்கு அனுப்பி வைப்பாள். அந்த அருமையான வீட்டைக் **குதிரைக் கொட்டில்** என்றும் **கூரைக்கோடு** என்றும் சொல்வார்கள்.

இதுவரை உழவர்களுக்கு இன்றியமையாத பல பொருட்களுக்கு அவர்கள் இட்ட பெயர்களைப் பார்த்தோம். இன்னும் சில பொருட்களுக்குத் தேவையை நோக்கிப் பெயர் கொடுத்துள்ளார்கள். அந்த வகையிலே மீனைக் **கடற் கரும்பு** என்றும், சாராயத்தை **அரக்கு** என்றும், பெண்ணை **அடைக்கலச் செல்லி** என்றும், குடத்தைக் **குயவன்** என்றும், மாட்டை **வாரிக்காலி** என்றும், தண்ணீரைக் **கலங்கல்** என்றும், வைக்கோலை **விரிஞ்சான்** என்றும், சூட்டைப் **போரை** என்றும் சொல்வார்கள்.

இதுவரை நான் சொன்ன புதுமொழிச் சொற்கள் உழவர்களுக்குக் களவெட்டியில் இன்றியமையாதன வாகும். இவை தவிர இன்னும் பல பெயர்கள் உண்டு.

ஒருவாறாக இதுகாறும் களவெட்டி மொழிச் சொற்களைப் பார்த்தோம். இனி இச் சொற்களைக் கொண்டு எப்படிப் பேசுவ தென்பதையும் அறிய வேண்டும் அல்லவா? சொல் வழக்கைப் பார்த்தால் வசன வழக்கையும் பார்க்கவேண்டும் அல்லவா?

'வீட்டுக்குப் போவதில்லையா?' என்பதைக் களவெட்டி மொழியில் கேட்பதானால் '**கூரைக்கோட்டுக்குப் பெருகிக் கட்டுறயா?**' என்பார்கள். இதில் வீடு என்பதை வீட்டுக்குரிய சொல்லான **கூரைக் கோடு** என்பது குறிக்கிறது. போவதில்லையா என்பதைக் **பெருகிக்கட்டு** என்று குறிக்கிறது. அதாவது பெருகு என்று சொல்லும் களவெட்டிப் மொழியுடன் சந்தர்ப்பத்தினுக் கேற்றாற்போல் கட்டு என்ற சொல்லையும் சேர்த்து உபயோகிப்பார்கள்.

சொற்கள் சொற்பமானவை. ஆகவே பேச்சு நடையில் அவைகள் அடிக்கடி வந்துகொண் டிருக்கவே செய்யும். ஆதலினால் இம் மொழியினைச் சிறந்த அர்த்தத்துடன் உழவர்களால் தான் கையாள முடியும்.

வருவதற்கும், வாவென்பதற்கும், வந்து விட்டாயா என்பதற்கும் பெருகு என்ற சொல்தான் உள்ளது. இந்தப் 'பெருகு'என்ற சொல்லைப் பேச்சு வழக்கில் உபயோகிப்பதற்குத் தக்கதாகப் பொருள் செய்வார்கள். பொதுவாக வா என்றால் பெருகு என்றுதான் அர்த்தம். ஆனால் அவனைக் கூப்பிட வேண்டுமானால் வந்து

பெருகு என்பார்கள். வந்துவிட்டாயா என்பதைப் **பெருகிற்ருயா** என்பார்கள்.

அடைக்கலச் செல்லி பெருகுது என்ருல் பெண் வருகிருள் என்று பொருள். **அடைக்கலச் செல்லி பெருகிற்ரு** என்ருல் பெண் வந்துவிட்டாளா என்று பொருள். **அடைக்கலச் செல்லி பெருகிற்று** என்ருல் பெண் வந்துவிட்டாள் என்று பொருள். இவ்வாருகத்தான் களவெட்டி மொழியிலுள்ள ஒரே வினையடியான பெருகைப் பல வகையிலும் கமக்காரர்கள் பயன்படுத்திக்கொள் கிருர்கள்.

சோற்றுக்கு மீன் வாங்கி வந்தாயா? என்பது வேலைக்காரச் சிறுவனிடம் உழவர்கள் சாதாரணமாகக் கேட்கும் கேள்வி. ஆனல் களவெட்டி மொழியில், **வெள்ளைக்குக் கடற் கரும்பு பெருகினையா,** என்று கேட்பார்கள்.

புது மனிதர்கள் யாரேனும் சூடு போடுவதைப் பார்க்கச் சென்ருல், இம் மொழியைக் கண்டு வியப்புறுவார்கள்.

ஏன், இவ்வாருக உழவர்கள் ஒரு புது மொழியை ஆக்கிச் சூடுபோடு மிடத்தில் கைக்கொள்கிருர்க ளென்ருல், கூடிய பலனுக்கென்றே முன்னமே சொல்லி யிருக்கிறேன். ஆமாம்; கூடிய பலன்தான். அதற்காக அவர்கள் களவெட்டிமொழியை ஆக்கவில்லை. களவெட்டிகளிலே பூதகணங்கள் உலாவுமாம். அப் பூதகணங்கள் சூடுபோடும் வேளைகளில் நெல்லின் சாரத்தை யெல்லாம் உறிஞ்சிக் குப்பையாக்கிவிடுமாம்; அதாவது பதராக்கிவிடுமாம். வீட்டு மொழியைப் பேசினல் பூதகணங்கள் களவெட்டியே தஞ்சமென்று உட்கார்ந்து விடுமாம். ஆதலினுல்தான் இந்தப் பூதங்கள் வந்து நெல்லைக் குடித்துப் பதராக்காமல் இருப்பதற்காகக் கமக்காரர்கள் களவெட்டி மொழியை ஆக்கினுர்கள்.

ஏதோ ஒரு நம்பிக்கை; பூதம் நெல்லைக் குடித்துவிடுமென்ற நம்பிக்கை. அதனுல் தான் அவர்கள் இந்த மொழியை ஆக்கினுர்கள். இந்தக் களவெட்டி மொழி பூதத்துக்கு விளங்காது என்பது அவர்கள் எண்ணமன்று! பாடுபட்டதன் பலன் கூடிவரும் நேரத்தில், அந்தப் பலன் பதராக மாறிவிட்டால் எத்துணை வேதனை அவர்களுக்கேற்படும்! உழுது உண்பதிலே பெருமை கண்டவர்கள் அவர்கள். வயல் வெளிகள் வழங்கும் நெல் மணிகளைக் கொண்டு தங்களையும், மற்றவர்களையும் பசியிலிருந்து காப்பதுடன், பிற நாட்டாருக்கும் கொடுத்து உதவுகிருர்கள்.

கமக்காரன் களவெட்டி மொழியை ஆக்கினுன்; என்ருே ஒரு காலத்தில் ஆக்கினுன்; பல தலைமுறைகளுக்கு முன்னதாக ஆக்கினுன். அவன் என்று கமம் செய்ய ஆரம்பித்தானே அன்றே ஆக்கவில்லை; பலதடவைகள் கமம் செய்து பயனை எடுத்த போது, பயன் குறைவாக இருந்தமையினுல், இக்குறைவு பூதங்களினுல் ஏற்பட்ட தென்று நினைத்தான். அதனுல்தான் பூதங்களை ஏமாற்றவும், அவைகள் நெல் மணியைக் குடித்துப் பதராக்காமல் இருக்கவும் கமக்காரர்கள் களவெட்டி மொழியை ஆக்கினுர்கள், ஆக்கியதை இன்றுவரை நடைமுறையில் கையாண்டு வருகிருர்கள்.

ஈழத்திலே தமிழும், சிங்களமும், ஆங்கிலமும்தான் வழங்குகின்றன. தமிழர்கள் தமிழையே பேசுகிருர்கள். அத் தூய தமிழிலிருந்து ஒரு மறைமுக மொழியை நெல்மணியைப் பெறுவதற்காக ஆக்கினுர்கள்.

பண்டைத் தமிழர்கள் எதையும் காரணங் கருதாமல் செய்யவில்லை. அவர்கள் ஒவ்வொரு செயலையும் தகுந்த காரணத்துடன்தான் செய்துகொண்டு வந்தார்கள். அவர்கள் ஆக்கிய அத்தனைக்கும் காரணங்க ளுண்டு. அதுபோல் தான் களவெட்டி மொழிக்கும் தமிழர்கள் கண்ட காரணத்தைப் பார்த்தோம்.

நெல் இல்லாவிடில் நாம் வாழ முடியாது. அத்தகைய நெல்லை நமக்குத் தரும் கமக்காரன் எத்தனை வேதனைகளை அனுபவித்துப் புது மொழியின் துணைகொண்டு நமக்கு உதவுகிருன்! கிழக்கிலே ஒரு சிரஞ்சீவியின் இடத்தைப் பெற்ற கமக்காரனும், அவன் களவெட்டி மொழியும் என்றென்றும் சிரஞ்சீவியாகவே இருப்பர்.



குற்றவாளி

திரு. அ. இராமகிருஷ்ணன்,
B. A., D. S. S.

பண்டைய நாட்களில் இக்காலத்தைப் போலக் குற்றவாளிகள், செய்த குற்றம், குற்றத்தின் கொடுமை, வயது, வாழ்க்கை வசதி, ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் பல வகையினராகப் பிரிக்கப்பட வில்லை. குழந்தைகள், வயது வந்தோர், முதன் முறையாகக் குற்றம் செய்தவர்கள், குற்றம் செய்வதே தொழிலாகக் கொண்டவர்கள் ஆகிய எல்லாக் குற்றவாளிகளையும் எவ்வித வேறுபாடுமின்றி ஆடுமாடுகளைப் போன்று ஒன்ருகவே ஒரே இடத்தில் அடைத்து வந்தனர். இம் முறையினுல் முதன் முறை அஞ்சி அஞ்சிக் குற்றம் செய்த ஒருவன் சிறைச்சாலையை விட்டு வெளிவரும் போது நல்ல கைதேர்ந்த குற்றவாளியாக, கள்ளனுக வெளிவருகிருன்.

குற்றம் செய்த ஒருவனை விசாரித்து, குற்றவாளி அல்லன் என்று விடுதலை செய்துவிட்டாலும், தண்டம்(fine) செலுத்தும்படி உத்திரவிட்டாலும், ''இனிமேல் நல்லவனாக நடந்துகொள்'' என்று எச்சரிக்கைசெய்து வெளியில் விட்டாலும் அல்லது சிறைத் தண்டனையே தந்தாலும் நாம் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும் தண்டனை உண்டு என்று தெளிவாகத் தெரிகிறது.

சிறைத் தண்டனை :

ஒருவனைச் சிறையில் தள்ளினால் அவன் சுதந்திர மிழந்தவனாகிறான். அதுமட்டுமன்று; தன் நண்பர்கள், உறவினர்கள் ஆகியவரின் தொடர்பையும் இழக்கிறான். சுதந்திர மின்மையும், அன்பர்களின் தொடர்பின்மையுமே குற்றம் செய்த ஒருவனுக்குப் பெரும் தண்டனையாகிறது. ''மக்கள் தாங்கள் செய்த குற்றத்திற்குத் தண்டனையாகச் சிறை செல்கிறார்களே தவிர, தண்டனைக்காகச் சிறை செல்வதில்லை.'' என்று ஓர் அறிஞர் கூறியது முற்றிலும் பொருத்த முடையதாகும்.

குற்றம் செய்த ஒருவனை நன்மகனாக்கும் பணியில் இறங்கும்போது, அவனது வயது, பண்பு, சூழ்நிலைகள், அவனது கல்விக்கான வாய்ப்புகள் ஆகியவைகளை மனதிற்கொள்ளல் வேண்டும். மேலும் அவன் நல்ல முறையில் வளர்க்கப்பட்டிருக்கிறானா என்பதையும் நோக்குதல் வேண்டும். எப்படியாயினும் நல்ல முறையொன்றைக் கையாண்டு, குறிப்பிட்ட குற்றவாளியைத் திருத்தி, அவனை நல்ல பண்புமிக்க மனிதனாகவும், உழைப்பின் உயர்வை உணர்ந்த குடிமகனாகவும் ஆக்குதலே குறிக்கோளாக இருக்க வேண்டும்.

குற்றவாளியை–குறிப்பாக முதன் முறையாகக் குற்றம் செய்தவனைத் திருத்தும் பணியில் இறங்குபவர்கள் ஒன்றை நன்றாக மனதிற் கொள்ளல் வேண்டும். அதாவது அவனைத் திருத்தும் பணியில் எல்லா முறைகளையும் கையாண்ட பின்பும் அவன் திருந்தாவிடின் கடைசி ஆயுதமாகச் சிறைத் தண்டனையை உபயோகிக்க வேண்டும். நல்ல முறையில் நிர்வகிக்கப்படும் சிறைகளிலும் கூடச் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பது உண்மை. சிறைத் தண்டனையின் காலம் பெருகப் பெருகக் குற்றவாளியின் மனத் துன்பமும் அதிகமாவதைக் காணலாம். ஏனெனில் சிறை என்பது, குறிப்பாகக் கொள்ளை, கொலை, களவு முதலியவைகளில் கைதேர்ந்தவர்களையும், ஏமாற்று, ஒழுக்கக் கேடு ஆகிய குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்களையும் தன்னகத்தே கொண்ட இல்லமாகும். புதுக் குற்றவாளிகளைப் பழைய குற்றவாளிகளிடம் பழக அனுமதிப்பது மிக ஆபத்தானதாகும். கைதேர்ந்த குற்றவாளிகளுடன் பழகும் வாய்ப்பு ஏற்படுகிற புதிய குற்றவாளியின் உள்ளப் பண்பு மாறுவதைக் காணலாம். அவன் சிறை புகுந்த சில நாட்களில் அங்குத் தன்னைவிடச் சிறந்த அறிவாளிகள் (திருட்டுத் தொழிலில் கைதேர்ந்தவர்கள்) இருக்கிறார்கள்என்பதை அறிந்துகொண்டு அத்தொழிலின் நுட்பங்களை அவர்களிட மிருந்து கற்றுக் கொள்கிறான். மேலும் எங்தெந்த வகையில் தந்திரமாகக் குற்றம் செய்து மற்றவர்களிடம் அகப்படாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்பதையும் அறிந்துகொள்கிறான். இதைவிட இன்னும் ஆபத்தானது என்னவெனின் தன்னுடைய கெட்ட நடத்தையின் விளைவுகளை மனதைவிட்டே அகற்றிவிட்டுத் தான் செய்ததுதான் சிறந்தது என்றும் கற்றுக் கொள்கிறான்.

சிறைவாழ்க்கையால் மனிதன் தனக்கு இயற்கையாக அமைந்திருக்கும் நல்ல பண்புகளை இழக்கிறான். சிறைக் குற்றவாளி வெளிவரும் பொழுது உலகத்தை வெறுப் புணர்ச்சியுடன் நோக்குகிறான்.

அவன் தானுக இயங்கும் இயந்திரமாக மாறுகிருன். அவனுக வேண்டு மென்று குற்றம் செய்ய வேண்டுவ தில்லே. ஆனுல் அவன் செய்வ தெல்லாம் மனிதப் பண் புக்கு மாறுபட்டதாகவே மற்ருேருக்குத் தோன்றும். மேலும் மக்கள் செய்யும் காரி யங்க ளெல்லாம் அவனுக்குத் தப்பாகத் தோன்றும். சிந்திக்கும் வாய்ப்பு அவனுக்கு அளிக்கப்படுவ தில்லே. சொன்னதைச் செய்யும் இயந்திரமாகி, வேலேசெய்து பிழைக்கவேண்டு மென்ற எண்ணத்தை மறந்தவனுகிக் குடும்பத்தைக் காப்பாற்ரு மல் முடிவில் பொறுப்பற்றவ னுகின்ருன். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவன் இயந் திர மனிதன் (Robot) ஆய்விடுகின்ருன் என்றே கூறலாம். ஆகக் குற்றவாளிகளேத் திருத்துவதற்காக ஏற்பட்ட சிறைச்சாலே இன்று குற்றத்தை வளர்க்கும் சாலேயாகக் காட்சி யளிக்கிறது.

மேலே கூறியவற்றி லிருந்து, சிறைத் தண்டனே இறுதி ஆயுதமாக உபயோகிக் கப்பட வேண்டும்; அதுதான் சிறந்தது; நல்ல முடிவைத் தரத் தக்கது என்பதும் தெளிவாகிறது. அப்படியே சிறைத் தண் டனே இன்றியமையாததாக அமையினும் நீண்டகாலச் சிறைவாசம் தடுக்கப்பட வேண்டும். சமூகத்திற்குத் திரும்பி வரும் மனிதன் நல்ல முறையில் வாழவேண்டு மெனின் அவனுக் குகந்த வேலேயைத் தேடித்தருவது அரசாங்கத்தின் கடமை யாகும். பொதுமக்களும் இதில் அக்கரை கொண்டு சிறைத் தண்டனே பெற்றுச் சிறைவாசம் முடிந்து திரும்பி வருபவனே மனிதன் என்ற முறையில் நடத்தி அவனுக்கு முடிந்த அளவு உதவிசெய்ய வேண்டும்.

திருத்து முறை :

ஒரு குற்றவாளியைத் ''திருத்தப் பள் ளிக்கு'' அனுப்புகிருே மெனின், அங்குக் கொடுக்கப்படும் சிறந்த பயிற்சி அவனேத் திருத்தி மேலும் மேலும் குற்றம் செய்வதி னின்றும் அவனேத் தடுப்பதற்கே யாகும். 'திருத்தும் முறை', குற்றவாளியின் வயது, அவன் செய்த குற்றத்தின் கடுமை, ஆண் அல்லது பெண், முந்திய வாழ்க்கை வசதி ஆகியவைகளே அடிப்படையாகக் கொண் டிருத்தல் வேண்டும்.

ஒரு குழந்தையை அல்லது ஒரு இளே ஞனே வயது வந்தவர்களே நடத்துவதுபோல் நடத்துதல் கூடாது. குற்றவாளி சிறு வய தினனுயிருப்பின் அதாவது இளங் குற்ற வாளியாயின் அதிகக் கவனம் செலுத்தி, வேண்டியவைகளே உடனே செய்வது இன் றியமையாத தாகும். வயது வந்தோர்களில் கூட—ஆபத்து நிறைந்த குற்றவாளி, தெரி யாமல் அல்லது எப்பொழுதோ ஒருமுறை குற்றம் செய்பவன், குற்றம் செய்தலேயே தொழிலாகக் கொண்டவன் அல்லது யாருக்கும் அடங்காத போக்கிரி என்று பல வகைகளாகப் பிரிக்கலாம். இப்படிப் பல வகைப்பட்ட குற்றவாளிகளேத் தனித் தனியாக அல்லது வகை வகையாகப் பிரித்துத் தகுந்த முறைகளேக் கையாண்டு அவர்களேத் திருத்துதல் வேண்டும். பெண் களுக்கெனத் தனி முறை வேண்டு மென் பது சொல்லாமலே விளங்கும்.

ஏ, பி, சி பிரிவுகள்:

ஏ. பி. சி என்ற பிரிவுகளேக் கேட்டமாத் திரத்திலேயே ''ஏன் ஏழைக்கும் பணக் காரனுக்கும் சிறையில்கூட வேறுபாடு காட்டுகிறீர்கள் ? ஏழைக் கொரு நீதி, பணக்காரனுக் கொரு நீதியா ? ஏழைக் கொரு சட்டம், பணக்காரனுக் கொரு சட்டமா?'' எனச் சரமாரியாகக் கேள்வி களேக் கேட்கின்றனர். ஆனுல் உண்மை யில் இப் பிரிவுகள் ஏழை பணக்காரன் என்ற வேறுபாட்டை ஒழித்துச் சமத்துவம் கொண்டு வருவதற்கு மனிதப் பண்பின் அடிப்படையில் எழுந்ததாகும். கூலி வேலேசெய்து பிழைக்கும் ஒருவன், சிறை

யில் கொடுக்கும் கடுமையான தண்டனை யைத் தாங்கும் உரம் பெற்றவனாக இருக் கிறான். கடுமையான வேலையும், சாதாரண உணவும் அவனுக்குப் பழக்கமானவை. ஆனால் படித்த ஒருவனுக்கு, உடலுழைப்பு அறியாத ஒருவனுக்கு 'சி' பிரிவைச் சேர்ந்த தண்டனை கொடுக்கப்படுமே யானால் சில நாட்களில் அவனது உடல் நலம் குறைவதைக் காணலாம். ஏன், அவனது உள நிலையே பாதிக்கப்படுவ தைக் காணலாம். சிறைத் தண்டனையின் குறிக்கோள் இது அன்று. ஆகவே இவ் வகைப் பிரிவுகள் மனிதப் பண்பிற்கும், வாழ்க்கைத் தரத்திற்கும் ஒத்திருக்கின் றன என்பது தெள்ளெனத் தெரிகிறது.

குற்றவாளிகள் பல வகை:

அவரவர் செய்த குற்றத்திற் கேற்பக் குற்றவாளிகளைப் பல வகைக்ளாகப் பிரிக் கலாம். இவ் வகைப் பிரிவுகள் குற்ற வாளிகளைத் திருத்தும் பணியிலே ஈடுபடும் மக்களுக்குப் பெரிதும் பயன் தருவன வாகும்.

(1) எப்பொழுதாவது அல்லது அறியாது குற்றம் செய்பவன் (casual or occasional criminal). பொதுவாக இவ் வகையைச் சேர்ந்தவன் முதன் முறையாகக் குற்றம் செய்தவனா யிருப்பான். அதுவும் சூழ்நிலை காரணமாகவோ அல்லது உணர்ச்சியின் உச்ச நிலையிலோ ஒரே ஒரு குற்றம் செய்த வனாவான். இந்நிலையில் இருக்கும் ஒரு சிலர் நிரந்தரக் குற்றவாளிகளானாலும் பெரும் பான்மையோர் திருத்தப்படும் பட் டியலில் விழுகிறார்கள்.

(2) நிரந்தரக் குற்றவாளி அல்லது குற் றம் செய்வதே தொழிலாகக் கொணடவன் (habitual or professional criminal). இவ் வகையைச் சேர்ந்த குற்றவாளிகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, திருத்தத்திற்குப் பணிபவர்கள்; இரண்டு, திருத்தவே முடியாதவர்கள். மேற்கூறிய இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் திருத் தப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஊழியர் களுக்குச் சிறந்த பரிசோதனைப் பொருள் களாய் அமைகிறார்கள். சிலசமயம் இவ் வகைக் குற்றவாளிகள் உள்ளக் கோளாறு உடையவர்களோ என்று எண்ணவும் தோன்றும்.

(3) மூன்றாம் வகையைச் சேர்ந்தவர்கள் 'உள்ளக் கோளாறு உடையவர்கள்' (mentally deficient) என்று கூறலாம். மனக் கோளாறு காரணமாகச் செய்த குற்றத் தையே திருப்பித் திருப்பிச் செய்யும் ஒரு வனை இவ் வகையைச் சேர்ந்தவன் என்று கூறலாம். தேர்ந்த உளநூல் வல்லுநர்கள் தந்துள்ள புள்ளி விவரங்களை ஆராயும் போது அனேகம் பேர் உள்ளக் கோளாறு உடையவர்கள் என்று தெரிகிறது. இத் தகைய குற்றவாளிகளைத் தனியாகப் பிரித்து அவர்களுக்கென அமைந்த விடுதி களில் விடுத்துத் தகுந்த சிகிச்சைசெய்து திருத்த வேண்டும்.

(4) பயித்தியக்காரர்கள் (insane) குற்றவாளி பயித்தியம் என்றவுடனே அவ னைச் சிறைக் கனுப்பாது அவர்களுக்கென அமைந்த மருத்துவ விடுதிக்கு அனுப்பித் தகுந்த பாதுகாப்புடன் மருத்துவம் செய் தல் வேண்டும். மேலும் சிறை வாசத்தின் காரணமாகச் சிறைத் தண்டனை பெற்ற குற்றவாளிகள், பயித்தியக்காரர்களாக ஆகிறார்கள் என்பது குறிப்பிடவேண்டிய தொன்றாகும். இவ்விதக் குற்றவாளிகளை விசாரிக்கும்போது அதிக கவனம் எடுத் துக்கொள்ளவேண்டு மென்பது தெளிவு.

(5) கடைசியாக "அரசியல் குற்றவாளி" யைக் காண்போம். சில நாடுகள் "அரசி யல் குற்றவாளிகள் மிகவும் ஆபத்தானவர் கள்" என்று கருதுகின்றன. ஆனால் வேறு சில நாடுகளில் அரசியல் குற்றவாளியைப் பற்றி நல்ல கருத்து நிலவி வருகிறது. அதாவது தாங்கள் ஏதோ ஒன்றை நாட்டு

முன்னேற்றம் என்ற எண்ணங்கொண்டு, நாட்டில் நிலவி வரும் நிலையை எங்ஙன மேனும் மாற்ற வேண்டுமென்று மன எழுச்சியுடன் செயல் முறையில் இறங்குபவர்களுக்கு ''அரசியல் குற்றவாளி'' என்று பெயரிட்டிருக்கின்றனர். இன்றைய அரசியல் கைதி நாளை நாட்டை ஆளும் மந்திரியாகலாம் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்று! முன்னாள் மந்திரி இன்று அரசியல் கைதியாகவு மிருக்கலாம்! எதிர்பாரா விதமாகச் சாதாரணக் குற்றம் எங்கே ஆரம்பமாகிறது, எங்கே முடிகிறது என்று யாரும் வரையறுத்துக் கூறவில்லை. மேலும், சில சமயங்களில் குற்றத்தின் பின்னணி அல்லது குறிக்கோள் இன்னதென்று அறிய முடியாத காரணத்தால் அரசியல் குற்றத்திற்கும், சாதாரணக் குற்றத்திற்கும் வேறுபாடு காண்பது அரிதாகிறது. ஒவ்வொரு நாட்டிலும் இவ்வகையான குற்றவாளிகளைக் காணலாம். பெரும்பாலும் இவர்கள் படித்தவர்கள். தங்கள் பெயர் நாடெங்கும் பரவவேண்டு மென்ற விருப்ப முடையவர்கள். இவர்களை மற்றக் குற்றவாளிகளிடமிருந்து பிரித்துச் சாதாரண வாழ்க்கையில் இவர்களது நிலைமை, படிப்பு ஆகியவைகளுக்கு உகந்தாற்போல் நடத்த வேண்டும்.

மேலே கூறப்பட்ட பலவகையான பிரிவுகள் திருத்தப் பணியிலே ஈடுபட்டிருப்போருக்குப் பேருதவியாகத் திகழ்கின்றன. எந்தக் குற்றவாளியாயினும் மேற்கூறிய பிரிவுகள் ஒன்றினுள் அடங்கி விடுகிறான்.

திட்டம்:

அரசாங்கம் இதில் முக்கிய பங்கு கொண்டு சிறந்த, பரந்த திட்டம் தீட்டுவது இன்றியமையாத தாகும். குற்றவாளிகளைத் திருத்தப் பயன்படும் ஒவ்வொரு முறையும் நம் நாட்டு முன்னேற்றத்தின், நம் நாகரிகத்தின் ஒவ்வொரு அளவு கோலாகத் திகழ்கிறது என்பதை மனதில் கொள்ளல் வேண்டும்.

பிற்போக்கான ஒரு நாட்டின் திருத்து முறைகளை ஊன்றிக் கவனிப்போ மாயின், அதில் எவ்வளவோ குற்றம் குறைகளைக் காணலாம். சில இடங்களில் குழந்தைகளுக்கென ஒரு தனிமுறை இல்லாமல் இருக்கலாம்; அல்லது குற்றவாளிகளின் வகைகள் நல்ல முறையில் பகுக்கப்படாமலிருக்கலாம். இதைப்போன்ற குற்றங்கள் இருந்தால் நாம் நல்ல முடிவுகளை எதிர்பார்க்க முடியாது. இதைவிட இன்னும் கீழானது என்னவெனின் ஒவ்வொரு நாடும் தான் கடைப்பிடிக்கும் முறைதான் சிறந்தது என்று எண்ணி இறுமாப்படைவதாகும். இவ்வித மனப்பான்மை யானை தன் தலைமீதே மண்ணைச் சொரிந்துகொண்டது போலாகும்.

குற்றவாளிகளைத் திருத்துவது, ஒருசிக்கலான நுணுக்கங்கள் நிறைந்த பிரச்சினை என்பதை நன்குக உணரவேண்டும். மேலும் இது இதோடு நின்றுவிடுவது அல்ல. இது ஒரு வளரும் அறிவியல். ஆண்டுதோறும் புதுப் புது முறைகள் புகுத்தப்படுகின்றன. புதிய முறைகளின் வெற்றி பழைய முறைகளை மறையச் செய்கின்றது. இவ்வளவு உயர்ந்த, சிறந்த, சிக்கலான பிரச்சினையைக் கையாள நல்ல பயிற்சிபெற்ற ஊழியர்கள் தேவை. இப் பணியில் ஆர்வம் உண்டாகுமாறு அரசினர் இதில் ஈடுபடுவோரை ஊக்குவித்து, இப் பணி மற்றவரை ஈர்க்கும் அளவுக்கு வசதிகள் செய்து தந்து, இப் பிரச்சினையை நல்ல முறையில் விடுவிக்க ஆவன செய்தல் வேண்டும்.

போரிடும் மீன்கள்

டார்வின் சொன்னார். உயிரினங்களுக்குள் நடக்கும் போராட்டமும் கூர்தலுக்கு (Evolution) ஒரு காரணம் என்று. போர் ஏன் நிகழ்கிறது? வாழும் ஆசை எல்லா உயிரினங்களுக்கும் இருப்பதனால் தானே. வாழும் ஆசை மட்டும் இருந்தால் போதுமா? வாழ வசதி வேண்டுமல்லவா. வாழ விரும்பும் உயிரினங்களோ எண்ணிலடங்கா. ஆனால் வாழ்வுக்கு வேண்டிய வசதியோ குறைவு. இந்த குறைந்த வசதியைக் கொண்டு நிறைந்த உயிரினங்கள் வாழ முடியா. ஓரளவு உயிரினங்கள்தான் வாழ முடியும். மீதி யெல்லாம் இறந்துபட வேண்டும். இந்த நிலையில்தான் உயிரினங்கள் தங்களுக்குள்ளும் சுற்றுப் புறத்தோடும் போராட்டம் நிகழ்த்துகின்றன. இப்போராட்டம் வாழ்க்கைப் போராட்டம். இதில் வெற்றி பெறுபவை யெல்லாம் வாழும்; தோல்வியடைவ தெல்லாம் இறந்துபடும். இது இயற்கையின் நியதி. இத்தகைய வாழ்க்கைப் போராட்டத்தைத் தவிர வேறு சில போராட்டங்களும் உயிரினங்களுக்குள் நிகழ்கின்றன. இப்போராட்டங்களும் மறைமுகமாக வாழ்க்கைப் போராட்டத்தையே குறிக்கும்.

வாழ்க்கைப் போராட்டம்:

வாழ்க்கைப் போராட்டம் இரண்டு வகைப்படும். ஒன்று உயிரினங்கள் தங்களுக்குள் இட்டுக் கொள்ளும் சண்டை; மற்றொன்று உயிரினங்கள் சுற்றுப்புறத்தோடு இட்டுக்கொள்ளும் சண்டை. இவ்வகைப் போராட்டம் மீன் இனத்திலும் காணலாம். மீன் இனங்களெல்லாம் நீரில் வாழ்வன. அவைகளின் உடலமைப்பு நீரில் வாழ்வதற்காகவே அமைந்தது. உலகிலுள்ள எல்லா நீர் நிலைகளும் ஒரே தட்ப வெட்ப நிலையிலில்லை. துருவப்பகுதியில் அதிகமாகக் குளிர்ந்தும், பூமத்திய ரேகைப் பகுதியில் அதிக வெப்பமாகவும் இவைகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் இடைப்பட்ட வெப்பநிலையும் காணப்படும். இதுவன்றி ஒரே இடத்தில் குளிர்காலத்திலும் கோடை காலத்திலும் வெப்பநிலை மாறுபடுகிறது. இத்தகைய மாறுபாடுகளுக் கெல்லாம் மீனின் உடல்நிலை இடங் கொடுக்க வேண்டும் இல்லையேல் மீன்

திரு. போ. ரா. கிருஷ்ணமூர்த்தி, M.A., L.T.

கள் வாழமுடியாது. குளிரை வென்ற மீன்கள் குளிர்ப் பிரதேசங்களில் வாழ்கின்றன; வெப்பத்தை வென்ற மீன்கள் வெப்பப் பிரதேசத்தில் வாழ்கின்றன. குளிர்ப் பிரதேசத்திலும் வெப்பப் பிரதேசத்லும் வாழ இயலாது தோற்றவைக ளெல்லாம் அழிந்து போயின. அத்தோடு ஒரு இடத்தில் ஒருவகை உணவு கிடைக்கும். இன்னொரு இடத்தில் இன்னொரு வகை உணவு கிடைக்கும். ஆகையால் ஒரு இடத்தில் வாழும் மீன் அந்த இடத்தில் கிடைக்கும் உணவை உண்ணும் பழக்கத்தைக் கைக் கொள்ள வேண்டும். இல்லையேல் அந்த மீன் அவ்விடத்தில் வாழத் தகுதியற்றதாகிவிடும். இவ் வகையில் மீன்களுக்கு மட்டுமன்றி ஏனைய உயிரினங்களுக்கும் சுற்றுப் புறத்திற்கும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஒரே இடத்தில் பலவகைப்பட்ட மீன்களும் வாழலாம். ஆனால் அங்கு கிடைப்பதோ ஒரே வகையான உணவு. இந்த உணவு அவைகளுக்குப் பொது. அதனால் இந்த உணவுக்காக அந்த மீன் இனங்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றன. வெற்றி பெற்றவை உணவைப் பகிர்ந்து கொள்கின்றன. தோல்வி யுற்றவை இறந்துபடுகின்றன. இதுமட்டுமல்லாமல் பெரிய மீன்கள் சிறிய மீன்களை உண்ணுவது போன்ற காட்டுமிராண்டித் தனமான வாழ்க்கைப் போராட்டத்தையும் காண்கின்றோம். உணவாகும் சிறிய மீன்களுக்கும் அவைகளை உண்ணும் பெரிய மீன்களுக்கும் வெளிப்படையாகப் போர் நிகழ்வதில்லை யென்றாலும் வாழ்க்கைப் போராட்டத்தில் சிறிய மீன்கள் தோல்வியடைந்து பெரிய மீன்களுக்கு இறையாகின்றன. இத்தகைய நிலை வெறுக்கத் தகுந்தது என்றாலும் இந்நிலை இல்லையென்றால் மீனினத்தின் பெருக்கம் காலப்போக்கில் அளவு கடந்து நீர் நிலைகளெல்லாம் ஒரே மீன் மயமாக இருக்கும். பின் இயற்கையின் சமநிலை (Nature's balance) என்ன ஆவது?

வேறு போராட்டங்கள்:

இதில் காதல் போராட்டமும், விளையாட்டுப் போராட்டமும் சேரும்.

காதல் போராட்டம்:

சால்மன் (Salmon) மீன் வளரும் பருவத்தில் கடலில் வாழும். முட்டையிடும் பருவத்தில் நதிமுகத் துவாரத்தில் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து நதியில் நீரோட்டத்தை எதிர்த்துச் செல்லும். இவ்வாறு ஒரு ஆண் மீன் ஒரு பெண்மீனை அழைத்துச் செல்லும் பொழுது இன்னொரு ஆண் மீன் குறுக்கிட்டால் அதை வெகுதூரம் வரை துரத்திச் சென்று மீண்டும் திரும்பி பெண் மீனோடு சேர்ந்து கொள்ளும். நதியில் ஆழமற்ற பகுதியில் முட்டையிடத் தகுதியான இடத்தைப் பெண் மீன் தேர்ந்தெடுக்கும். அந்த இடத்தில் ஆண்மீன் தனது துடுப்பால் ஒரு பள்ளத்தை உண்டாக்கும். பள்ளத்தில் ஆணும் பெண்ணும் உடற்கலப்புக் கொள்ளும். முட்டையிடுவது குஞ்சு பொறிப்பது எல்லாம் அந்தப் பள்ளத்தில்தான். குஞ்சு பொறிக்கும் வரையில் பெண்மீன் பள்ளத்திலேயே இருக்கும். ஆண் மீன் பள்ளத்தைச் சுற்றிச் சுற்றி காவல் புரியும். வேறு மீன் அப்பக்கமாக வந்தால் ஆண்மீன் அதை விரட்டிக் கொண்டே வெகு தூரத்தில் விட்டுவிட்டு மீண்டும் திரும்பி வந்து பள்ளத்தைச் சுற்றிக் காவல் புரியும். என்னே காதலியின் மேலுள்ள அன்பும் அதற்காக ஆண்மீன் மேற்கொள்ளும் போராட்டமும்!

விளையாட்டுப் போராட்டம்

பிள்ளைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும். திடீரென்று அவர்களுக்குள் சண்டை வந்துவிடும். ஒருவன் மண்ணை வாரி அடுத்தவன் கண்ணில் வீசி விட்டு ஓடிவிடுவான். மற்றவன் கல்லை விட்டெறிவான், முடிவில் எல்லோரும் அழுதுகொண்டு வீடு திரும்புவார்கள். இவர்களுடைய போராட்டத்தில் கள்ளம்

கபடு இல்லை. போராட்டத்திற்குக் காரணம் இருக்காது. இத்தகைய போராட்டம் சிலவகை மீன்களிடத்தில் காணப்படுகிறது. அதுவும் அவ் வினங்களி லுள்ள ஆண் மீன்களுக்குள் மட்டும்தான். சண்டையிட அவைகளுக்குள் காரணம் எதுவும் இருக்காது. ஒரு மீன் மற்ற மீனைப் பார்த்தவுடன் சண்டை நிகழும். ஒன்று வெற்றி பெறும்; மற்றொன்று தோல்வியுறும். சண்டையில் சிறிது காயமும் ஏற்படும். ஆனால் வெற்றிபெற்ற மீன் தோல்வியுற்ற மீனைக் கொல்கிற அளவுக்குச் செல்வதில்லை.

பெரியாப்தல்மோடான் (Periophthalmodon) என்று ஒருவகை மீன் உண்டு. இவ் வினத்தில் பெண் மீன்கள் சண்டையிட்டுக் கொள்வ தில்லை. ஆண் மீனும் பெண் மீனும் கூடிக் குலாவும். ஆனால் ஒரு ஆண்மீன் மற்றொரு ஆண்மீனைக் கண்டுவிட்டால் போதும்; உடனே சண்டைதான். போரிடும் பொழுது ஒவ்வொன்றும் அதன் முதுகுத் துடுப்பைப் பாய்மரக் கப்பலில் உள்ள பாயைப்போல் விரிக்கும். உடலின் முன் பாகத்தையும் வால் துடுப்பையும் உயர்த்திக் கொள்ளும். பின் ஒவ்வொன்றும் மற்றதை நோக்கிச் செல்லும். போரில் ஒன்றை யொன்று பற்களினால் கடித்துக்கொண்டு போரிடுகின்றன. இத்தகைய போராட்டம் அரை நிமிடத்தில் இருந்து ஐந்து நிமிடங்கள்வரை நீளலாம். களைப்படைந்தவுடன் போரை நிறுத்திக் கொண்டு இரண்டும் தன் தன் வேலையை நோக்கிச் செல்லும்.

டெர்மோஜெனிஸ் (Dermogenys) என்றொரு வகை மீன் சயாமில் உண்டு. நதி, நீரோடை, கால்வாய், ஏரி, குளம் இவைகளில் வாழ்கின்றன. இதன் எடை ஒரு அவுன்ஸ். கொசுக்களின் கூட்டுப் புழுக்களை உண்டு வாழ்கின்றன. இவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்ப தில்லை. பாலுண்ணி இனத்தைப் போலக் குஞ்சுகளை ஈனுகின்றன.

பந்தயக் குதிரைகளை எவ்வாறு ஓட்டத்திற் கென்றே வளர்க்கிறார்களோ அவ்வாறே சயாம் மக்கள் டெர்மோஜெனிஸைப் போரிடுவதற்காகவே வளர்க்கிறார்கள். டெர்மோஜெனிஸ் பிரபல மடைந்ததற்குக் காரணம் அதன் உன்னதமான போரிடும் தன்மையே. ஒரு ஆண் டெர்மோஜெனிஸ் மற்றொரு ஆண் டெர்மோஜெனிஸைக் கண்டுவிட்டால், உடனே போர்தான். ஆகையால் மீன்காட்சி சாலையில் ஆண் டெர்மோஜெனிஸ் ஒவ்வொன்றும் கண்ணாடித் தொட்டியி லுள்ள தனித்தனி அறைகளில் வைக்கப்பட் டிருக்கும். தொட்டியின் ஒரே அறையில் இரண்டு ஆண் மீன்களை விட்டுவைத்தால் அவைகள் ஒன்றை யொன்று நெருங்கித் தாடைகளால் பற்றிக் கொள்ளும். பின் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து போரிடும். சில சமயங்களில் ஒன்று மற்றதின் செவுள்களைப் (gills) பற்றிக் கொள்ளும். இதனால் இரண்டாவது மீன் சுவாசிக்கக் கஷ்டப்படும். மல்லுச் சண்டையில் சில பிடிகள் தான் பிடிக்கலாம். சில பிடிகளுக்குக் கட்டுப்பாடு உண்டு. தவறு நிகழ்ந்தால் யுத்தம் நிறுத்தப்படும். ஆனால் இம் மீன்களுக்குள் நடக்கும் சண்டையில் எல்லாவகைப் பிடிகளும் அங்கீகரிக்கப் பட்டவை. தவறுகளையும் தடைசெய்ய முடியாது. இவைகள் இவ்வாறு சண்டையிட்டாலும், இவைகளுக்குள் கடுமையான காயங்கள் எதுவும் ஏற்படுவ தில்லை. போர் தொடர்ந்து நிகழ்ந்தாலும் நிகழும். அல்லது விட்டு விட்டும் நிகழும். இந்தப் போரில் ஏதாவது ஒரு மீன் களைப்படைந்து விட்டால் போர் நின்றுவிடும். சில சமயங்களில் இரண்டுமே களைப்படைந்து மேலும் போர் செய்ய முடியாது என்ற நிலை வந்தால் போரை நிறுத்திக் கொண்டு இரண்டும் பிரிந்து செல்லும்.

இதைவிட உன்னதமான போர் முறையைப் பெட்டா (Betta) என்ற மீன் இனத்தில் காணலாம். இதுவும் சயாமில் காணப்

படு மீன். பெட்டாவையும், டெர்மோ ஜெனிஸையும் போரிடும் திறமையினுல் சயாம் போர்வீரர்கள் (Siamese Fighters) என்று அழைக்கிறுர்கள். பெட்டாவின் போர் அழகான போர்; மனத்தைக் கவரக் கூடியது; உணர்ச்சிகரமானது. போர் நீண்டநேரம் நிகழும். சென்ற ஒரு நூற்ருண்டு காலமாக அவைகளின் உடலமைப்புக்காகவும், அழகுக்காகவும், போரிடும் தன்மைக் காகவும் சயாம் மக்கள் இவைகளை வளர்க்கின்றனர். பெட்டா மூன்றிலிருந்து ஐந்து அங்குல நீளமுடையது. பெரிதானதும் இதன் நிறம் பச்சை அல்லது சாம்பல் நிறமாக இருக்கும். இதன் உடலின் பக்கவாட்டில் மூன்று கருப்புக் கோடுகள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று கண்ணின் மேல் பாகத்தி லிருந்து ஆரம்பித்து முதுகுப் புறத்திற்குச் சிறிது கீழ்ப்புறமாகவே சென்று வால் துடுப்பின் ஆரம்பம் வரையில் செல்லுகிறது. மற்ெறன்று பக்கவாட்டின் நடுக்கோட்டின் முன்புறத்தி லிருந்து வால் துடுப்பு வரையிலும் செல்லுகிறது. மூன்ருவது, கண்ணின் கீழ்ப்பாகத்தில் ஆரம்பித்து நடுக்கோட்டுக்குச் சற்றுக் கீழ்ப் புறமாகவேசென்று வால் துடுப்பின் அடிப்பாகம்வரை செல்கிறது.

பெட்டா நீர்நிலைகளின் அடித் தளத்தில் காணப்படும். அங்குள்ள நீர்த் தாவரங்களின் இடையில் மறைந்து காணப்படும். ஓய்வு நேரத்தில் பெட்டாவை நீர்த் தாவரங்களின் இடையி லிருந்தே கண்டு பிடிப்பது கடினமா யிருக்கும். இதற்குக் காரணம் அதன் நிறமும், ஓய்வு நேரத்தில் அசையாம லிருப்பதுமே யாகும். இன்ெனரு ஆண் பெட்டா அவ் வழியில் வந்தால் உடனே இருப்பிடத்தை விட்டுப் பாய்ந்து வெளிவரும். புதிய ஆண் மீனைத் துரத்த, பெட்டாவின் போர் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது. குதிரைப் பந்தயத்தில் ஓடுவது குதிரை. ஆனுல், பந்தயம் கட்டுவது மனிதர்கள். அதுபோல் பெட்டாவின் போரிலும் சயாம் மக்கள் பந்தயம் கட்டி விளையாடுகிறுர்கள். இப் பந்தயத்தில் இரண்டு பேர் தனித்தனியாக மீன்களை வளர்ப்பார்கள். அவ் விருவரின் மீன்களையும் போருக்கு விட ஏற்பாடு செய்வார்கள். அவ் விருவருக்கும் கட்சிகள் சேரும். ஒரு கட்சி, ''எங்கள் மீன்தான் வெற்றிபெறும், மாருக எங்கள் மீன் தோற்றுவிட்டால் இவ்வளவு பணம் தருகிறேம்,'' என்று பந்தயம் கட்டும். பந்தயம் ஆரம்பமாகும்.

இரு கட்சிகளும் தங்கள் தங்கள் மீன்களைத் தனித் தனிக் கண்ணுடிப் பாத்திரத்தில் கொண்டு வருவார்கள். இரு பாத்திரங்களையும் அருகருகே வைப்பார்கள். ஒரு பாத்திரத்தி லுள்ள மீன் அடுத்த பாத்திரத்தி லுள்ள மீனைப் பார்த்தவுடன் ஒவ்வொரு மீனின் உடலும் கோபத்தினுல் மின்னும்; போரிடுவதற்கு இரண்டும் துடித்துக் கொண்டிருக்கும். இத்துடிப்பு எப்படி இருக்கிறதென்ருல் நெடுங் காலமாகப் போரில்லாத ஒரு நாட்டில் போர் முரசு கேட்டவுடன் அந் நாட்டு வீர மறவர்கள் தங்கள் தோள்களின் தினவு தீரப் போர் வந்திருக்கிற தென்று கூறி ஆர்ப்பரித்துக்கொண்டு செல்வார்களாம் பண்டைய தமிழ் நாட்டில். அத்தகைய தினவைக் கொண்டிருப்பதைப்போல் இந்த மீன்கள் துடித்துக் கொண்டிருக்கும். உடனே இரண்டு மீன்களையும் ஒரு பாத்திரத்திற்கு மாற்றுவார்கள். மாற்றப்படும் நேரத்தில் இரண்டு மீன்களுக்கும் கோபம் சிறிது மட்டுப்படும். இரண்டு மீன்களும் ஒரே பாத்திரத்தில் மாற்றப்பட்டவுடன் அவைகளுக்குக் கோபம் மீண்டு மதிகரிக்கும். அப்பொழுது அவைகளின் நிறமும் பளிச்சென்று பகட்டாகத் தோன்றும்; துடுப்புகள் விரியும்; பின் ஒன்றை யொன்று நெருங்கும். இவைகள் சண்டை போடும்போது பெரும்பாலும் எதிரெதிராக இருந்து சண்டை செய்வதில்லை. இரண்டின் தலைகளும் ஒரே திசையை நோக்கி இருக்கும். அவைகளின் உடல் சிறிது முன்னும் பின்னுமாக ஒன்ருே டொன்று உராய்ந்துகொண் டிருக்

கும். சில சமயங்களில் ஒரு மீன் சிறிது பின் வாங்கி விரைவாக வந்து மற்ற மீனைத்தாக்கும். ஒரு சில சமயங்களில் எதிரெதிராகவும் இருந்து போரிடும். டெர்மோஜெனிஸ், போன்று, பெட்டா தாடைகளினுல் இறுகப் பற்றிக் கொண்டு போர் செய்வதில்லை. பெட்டா வின் தாடைகளில் மிகச் சிறிய பற்கள் இருக்கின்றன. அந்தப் பற்களினுல் ஒன்றை யொன்று கடித்துப் போரிடும். இத்தகைய போர் சிறிது கொடூரமாகவும் தோன்றும். ஆனுல் அத்தகைய கொடூரம் பார்வைக்குத்தான். உண்மையில் எத்தகைய கொடூரமான நிகழ்ச்சியும் இப் போர் நிகழ்ச்சியில் காண முடியாது. ஊமைக் காயங்கள்தான் ஏற்படும். சில சமயங்களில் செவுள்களின் (gills) சிற்சில பகுதியும், உடலில் காணப்படும் செதிள் களும் (Scales) பிய்க்கப்படும். அவ்வளவு தான். மனிதர்களுக்குள் சண்டை நிகழ்ந் தால் எவனுவது ஒருவன் மண்டை உடை பட்டோ, கை ஒடிந்தோ மருத்துவ நிலை யத்திற்குச் செல்லும் அவல நிலை ஏற் படும். அத்தகைய அவல நிலை பெட்டா வின் போர் முறையில் நிகழ்வதில்லை.

சில சமயங்களில் ஒரு மீன் மற்ற மீனின் செவுள் மூடியை (operculum) கவ்விக் கொள்ளும். இதனுல் அடுத்த மீன் சுவா சிப்பதற்குத் துன்புறும். ஆனுல் இத் தகைய நிலை சிறிது நேரத்திற்குத்தான். பின் முதல் மீன் இரக்கம் மேலிட்டதைப் போல அடுத்த மீனின் செவுள் மூடியை விட்டுவிடும். இதை உற்று நோக்குங் கால் வள்ளுவர் கூறிய

"அறத்திற்கே அன்பு சார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்ற குறளின் பொருள் விளங்கும்.

போரிடும் பொழுது ஏதாவது ஒருமீன் களைத்துவிட்டால், அடுத்த மீன் போர் செய்வதை நிறுத்திக் கொள்ளும். இத்த கைய போர்முறையைக் கண்டவுடன் கம்பராமாயணத்தில் இராம இராவணப் போராட்டத்தில் கீழ்வரும் பகுதிதான் நினைவுக்கு வருகிறது.

"ஆளை யாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனையின்று போய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கின னுகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்"

போரின் முடிவில் ஒன்று மற்றென் றுக்கு அடிமையாவது மில்லை. வெற்றி பெற்ற மீனுல் கிழித் தெறியப்படுவது மில்லை. போரினுல் ஏற்பட்ட நஷ்ட மெல்லாம் சிறிய காயங்கள்தான். அந்த காயங்க ளெல்லாம் ஓரிரண்டு நாட்களில் குணமடைந்துவிடும். துடுப்புகள் போரில் சிறிது ஊனமுற் றிருந்தாலும் அவைகளும் விரைவில் முன்போ லாகிவிடும். ஆகை யால் போர் முடிந்த சில நாட்களில், மீன் முன்போல் அழகாயும் புதிதாயும் காணப் படும். சிற்சில சமயங்களில் காயங்கள் அழுகி மீனுக்கு வியாதியை உண்டாக்கும்.

ஆகையால் பெட்டாவின் போரில் அழகு உண்டு; உண்மையான போர்முறை உண்டு; அற்புதமுண்டு; பார்ப்பவர்களுக்கு எல்லையில்லா மகிழ்ச்சியும் உண்டு.

பெட்டாவிடம் இன்னெரு உன்னத மான குணமுண்டு. பெண் மீன் முட்டை யிடும்பொழுது, அதற்கு ஆண் மீன் காவ லாக இருக்கும். குஞ்சுகள் பொரித்த வுடன் பெண் மீன் குஞ்சுகளைத் தின்ன ஓடிவரும். இந்தச் சமயத்தில் ஆண் மீன் கள் பெண் மீன்களோடு போராடிக் குஞ்சு களைக் காப்பாற்றுகின்றன.

இம் மீன்களுக்குள் நடக்கும் போர்முறை யைக் கண்டாவது இன்றைய மக்கள் தங் களைத் திருத்திக் கொள்வார்களா? மீன் களின் போரில் அன்பையும் கண்டோம்; கொடும்போர்க் கருவிகளைக்கொண்டு போர் செய்யாமையையும் கண்டோம். ஏன், இக் கால மக்கள் போர் போர் என்று கூறிக் கொண்டு போர் முறைகளை மறந்து மக் களை மட்டுமல்லாமல் மற்ற உயிரினங் களையும் அழிக்கிருர்கள்? அந்தோ! அவலம்!! அவலம்!!!

—★—

அட்டைப் படம்:

'காற்று வீடுகள்'

'அச்சாணி'

1948 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் பஃபலோ வானவூர்தி நிலையத்தில் ஒரு வியத்தகு செயல் நடந்தது. ஒரு பெரிய பலூன் ஒன்றினுள் காற்றைப் புகுத்தினர். பலூனும் விரிந்து பரந்து பெரியதாயிற்று. அங்கிருந்த எல்லோரும் அது பறக்கும் என எண்ணினர். ஆனால் பறக்கவில்லை. மாருக அது ஒரு பெரிய வீடு போலா யிற்று. இத்தகைய வீடுகள் பல மேல் நாடுகளில் உண்டு. ஆனால் மக்கள் அவை களைப் பற்றி அறியவில்லை. காரணம் அவைகள் எல்லாம் மக்கள் புழக்கம் இல் லாத சேய்மையான இடங்களிலே உள்ளன. அவைகள் எல்லாம் 'ராடார்' நிலையங் களாகப் பயன்படுகின்றன. இத்தகைய காற்று வீட்டிற்கு வேண்டப்படுவது அடி சிதைக்கப்பட்ட ஒரு பலூனே யாகும். சிதைக்கப்பட்ட அடி வட்டமான அமைப்பு டையதாகும். அதனை ஒரு வீட்டின் மாடி யிலோ அல்லது அதற்கென தனியே கட் டப்பட்ட கட்டிடத்தின் மீதோ பொருத்து தல் வேண்டும். சிறிது அளவு உயரம் உடைய சுவர் இருந்தாலே போதும். அதில் பாலூனைப் பொருத்திக் கட்டி காற் றினைச் செலுத்தினால் வீடு போன்று இருக் கும். வாரைகள் இல்லை; தூண்கள் இல்லை. தச்சர்கள் வேண்டாம்! ஆனால் வீடு கட்டப்படும் வியப்புதான்.

அரையணா கொடுத்துப் பலூனை வாங்கு கிறோம். அதனுள் காற்றை நுழைக் கிறோம். பலூன் பறக்கிறது. அப்படி இப் பலூன் பறந்து விடாதா என்ற ஐயம் எழு வது இயல்பேயாம். வெளியே வீசும் காற்றினைவிட உள்ளே இருக்கும் காற்று லேசாக அதாவது அழுத்தம் குறைந்ததாக இருக்கிறது. ஆகையால் நாம் வாங்கும் பலூன் உயரே எழும்பிவிடுகிறது. எந்தக் காற்று மிகுதியான அழுத்தம் உடையதாக உள்ளதோ அது ஆற்றல் உடையதாக இருக்கும். பலூனுக்குள் இருக்கிற காற் றின் அழுத்தத்தை, வெளியே சுற்றுப்புறத் தில் உள்ள காற்றின் அழுத்தத்தைவிட கொஞ்சம் மிகுதியாக்கினால், பலூன் இருந்த இடத்திலேயே இருக்கும். இது தான் காற்று வீடு காற்றோடு செல்லாமல் ஒரே இடத்தில் இருப்பதற்குரிய அடிப் படை.

அடுத்து நாம் வாங்கும் பலூனில் காற்று அடித்த ஓரிரு மணிகட்குள் காற்று வெளியே போய் விடுகிறதே அதனைப் போன்று இந்தக் காற்று வீட்டில் போகாதா என்றால் போவது உண்டு. ஆகையால் தான் இந்த வீட்டின் காற்று அழுத்தத்தை ஒரே நிலையில் வைத்திருக்க வேறு ஒரு சாதனத்தைக் கையாண்டுள்ளனர். அடுத் துச் சுற்றுப்புறக் காற்றின், அழுத்தமும் ஒரே மாதிரியாக இருப்பது இல்லை. சில சமயங்களில் மிகுதியாகவும் இருக்கும். அப்படித் திடீரென்று மாற்றம் ஏற்பட்டா லும் இச்சாதனம் காற்று வீட்டின் உட் புறக் காற்று அழுத்தத்தை அதற்கேற்றாற் போன்று மிகுதிப் படுத்தும். இப்படிச் செய்து பார்க்கையில் வெளிப்புறக் காற் றின் வேகம் மணிக்கு 200 கல்தொலைவு

வேகத்தில் அடித்தாலும் காற்று வீட்டிற்கு ஊறு விளையாது எனக் கணக்கிட்டுள்ளனர்.

இத்தகைய வீடுகளில் குடியிருந்தால் நிலநடுக்கத்தாலோ தீயாலோ அச்சம் இல்லை. தீயும் நிலநடுக்கமும் இத்தகைய வீடுகளின் மூலம் அல்லல் விளைக்க முடியாது. காற்று வீட்டின் கூரைகள் அவ்வளவு இலேசானவை. காற்றின் அழுத்தம் மிகுதியாக இருந்தால் மூச்சுத்திணறல் ஏற்படும். ஆனால் வெளிப்புற அழுத்தத்திற்கும் வீட்டின் உட்புற அழுத்தத்திற்கும் வீட்டின் வேறுபாடு மிகமிகக் குறைவாக இருப்பதால் இத்தகைய திணறல் ஏற்படுவது இல்லை.

இத்தகைய வீடுகளில் கவனிக்க வேண்டிய இன்னொரு குறையும் உண்டு. வீட்டின் ஒருபுறம் வேகமாக அடிக்கும் காற்று அவ்வளவு வேகமாக அதற்கு எதிர்ப்புறம் இருப்பது இல்லை. ஆகையால் ஒரு பக்கம் வெளிப்புற அழுத்தம் குறைகிறது. அப்போது அதிக அழுத்தம் பெறும் பக்கம் உள் நோக்கி அழுந்த எதிர்ப் பக்கம் வெளி நோக்கி இழுக்கக் கிழிந்து காற்றுவீடு காணாது போய்விடும். இத்தகைய குறையைப் போக்க வீட்டின் உட்புறம் எல்லாப் பாகங்களிலும் வெளிப்புற அழுத்தத்திற்கு ஏற்றாற்போல் அழுத்தம் இருக்கும்படி செய்ய வேண்டும். இதற்கென ஒரு தனி முறையும் வகுக்கப்பட்டுச் செயல்படுகின்றது.

இப்படியெல்லாம் கட்டப்படும் இக்காற்று வீடுகளை ஆக்குவதற்கு நன்கு வளையக் கூடியதும், பெருக்கம் சுருக்கம் ஏற்படக் கூடியதும், உறுதியானதும் தட்பவெப்பங்களால் தாக்கக் கூடாததுமான ஒரு பொருளைத் தேட வேண்டும். இப்படிப் பார்த்த போது ஃபைபர் கிளாச், நிலான், ஃபார்ட்டிசான், டக்கரான் என்பவைகள் தக்கனவாக உள்ளன. ஆயினும் மேலும் இது பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய காற்று வீடுகள் பரவலானால் சினிமா, விளையாட்டு, நீந்துதல் ஆகியவைகள் காற்று வீட்டிற்குள் நிகழும். மழை பெய்தாலும் விளையாட்டு நடைபெறும்; வெய்யிலடித்தாலும் சந்தைகளும், சர்க்கசும் நடைபெறும். இந்த வீடுகளைச் சாதாரணமாகக் கட்டப்படும் வீடுகட்காகும் செலவை விட மிக மிகக் குறைவான தொகையில் கட்டமுடியும். நம் இந்திய நாட்டில் இத்தகைய வீடுகள் இல்லவேயில்லை. மேல் நாட்டில் உண்டு. இவ்வீட்டினைப்பற்றிய படமே நம் இதழின் அட்டைப் படத்தில் தோற்றமளிப்பது.

—※—

○ கட்டுரை எழுதுவோருக்கு ○

கலைக்கதிரில் வெளியிடுதற்காகக் கட்டுரைகள் அனுப்பும் நேயர்கள், தங்கள் கட்டுரைக்கு ஆதாரமாகவோ மூலமாகவோ உள்ள நூல்களையும் கட்டுரைகளையும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

—கலைக்கதிர் ஆசிரியர்.

வினாக்களும் விடைகளும்

கோடை, குளிர் காலங்கள் பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தைப் பொருத்தவையா?

பூமி செல்லும் பாதையின் மையத்தில் இல்லாமல், சூரியன் சற்று மையம் விலகியபடி யிருப்பதால் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம் பருவத்திற்குப் பருவம் மாறுபடுகிறது. ஆனுல் நம் பூமியில் நிகழும் பருவ மாற்றத்திற்கு இந்த தூர மாறுபாட்டைவிட பூமியின் சாய்வு முக்கிய காரணமாகிறது.

நாம் பூமியின் வடபகுதியில் வாழ்கிறோம். ஜூன், ஜூலை மாத வாக்கில் பூமி சூரியனிலிருந்து அதிகமான தூரம் விலகி இருக்கிறது. இருப்பினும் வடபகுதி சூரியனை நோக்கிச் சாய்ந்திருப்பதால் வெயிலும் வெப்பமும் நேராகத் தாக்க, நமக்கு அது கோடை காலமாகிறது. பூமியின் தென் பகுதி மறுபக்கம் சாய்ந்திருப்பதால் அப் பகுதியில் சாய்ந்து விழும் வெயில் உறைப்பதாக இல்லை; அது அவர்களுக்குக் குளிர் காலம்.

ஆறுமாதங்கள் கழித்து டிசம்பர் சமயத்தில் பூமி சூரியனுக்கு அருகாக வரும் சமயம் வடபகுதி சூரியனுக்கு மறுபுறமாகவும், தென் துருவப் பகுதி சூரியனை நோக்கியும் சாய்ந்திருப்பதால் நமக்குக் குளிராகவும், தென்பகுதியி லிருப்போருக்குக் கோடையாயும் இருக்கும்.

துணிகளில் பட்ட கறைகளைப் போக்குவதற்கான முறைகள் யாவை?

தெரிந்தும் தெரியாமலும் பலவிதங்களில் கறைகள் எற்படுகின்றன. சில எளிதில் நீங்கிவிடுகின்றன; மற்றும் சில நீங்காமல் நிற்கின்றன.

எண்ணெய் சம்பந்தமான தார் போன்ற கறைகள் மண்ணெண்ணெய், பெட்ரோல் முதலிய எண்ணெய்களில் மட்டும் கரைந்து மறையக் கூடியவை. நீர் சம்பந்தமான கறைகளானுல், பட்டவுடன் காலந் தாழ்த்தாமல் தண்ணீர் விட்டு அலசி விட்டால், அநேகமாக நீங்கிவிடுகிறது. எஞ்சி நிற்கும் சுவடு சலவை செய்யும் போது மறைந்து விடுகிறது. பிராணிகள் தரும் கம்பளி, நல்ல பட்டு ஆகியவை எளிதில் கறையைப் பற்றிக் கொள்ளும். தாவர நார்ப் பொருளாலான பருத்தி, அசல் லினன் போன்றவை கறையை எளிதில் ஏற்பதில்லை. இதனுல் உல்லன், சில்க் துணிகளி லுள்ள கறைகளைவிடப் பருத்தி, லினன் ஆடைகளி லுள்ள கறைகளைப் போக்குவது சுலபம்.

கறை படிந்து நேரமாகிவிட்டால், காற்றுப்பட்டு அழியாத தன்மை சிலவற்றுக்கு உண்டாகிவிடும். இங்கி, காப்பி, போன்ற கறைகள் இப்படிப் பட்டவை.

இத்தகையவற்றை நீக்க நாமக்கட்டி போன்ற மருந்துக் கட்டிகள் தற்போது சில இடங்களில் விற்கப்படுகின்றனவாம். கறைபட்ட இடத்தை நனைத்து ஒரு நல்ல துணி மீது விரித்து, முதலில் ஒரு வகை மருந்துக் கட்டியால் தேய்க்க வேண்டும். அடியிலுள்ள துணிக்கு இந்தக் கறை பரவும். பரவுதல் நிற்கும் வரை தேய்த்து, பின் அலசிவிட்டு இன்னெரு வகைக்கட்டியால் துடைத்தால் கறை மறைந்துவிடுகிறதாம். பின் துணியை நீரில் அலசிவிடலாம். முதல் வகைக் கட்டியில் பொட்டாஸிய க்வாட் ராக்ஸலேட், (pot-quadroxlate) இன்னும் ட்ரை-யீதேனுலமீன் (tri-ethanolamine) என்ற மருந்தும், மற்ற வகையில் சோடிய பைசல்பைட்டும் கலந்திருக்கிறதாம்.

சிகரெட் புகைந்து கொண்டிருக்கும் போது வெளியாகும் புகை நீலநிற மாயும், வாயுக்குள் இழுத்து வெளி விடும் புகை வெண்மையாயும் இருப் பதன் காரணம் என்ன?

புகையில் நுண்ணிய கரித்துகள்கள் அடங்கியுள்ளன. துகள்கள் அதிநுண்மை யானவையானல் அவற்றின் மீது விழுந்து தெரியும் ஒளியின் நிறம் துகள்களின் அள வைப் பொருத்திருக்கும்.

புகைந்து கொண்டிருக்கும் சிகரெட்டி லிருந்து கிளம்பும் கரித்துகள்கள் அதி நுண்மையானவை. இதில் ஒளி படும் போது, ஒளியின் ஒரு பகுதியான நீலநிறக் கதிர்கள் மட்டும் எளிதில் சிதறி நம் கண் ணில் படுகின்றன. புகை நீலமாகத் தெரி கிறது.

புகையை வாய்க்குள் இழுத்து வெளி விடும் போது, துகள்தள் பல ஒன்று பட்டுச் சற்றுப் பெரிதாகிவிடுவதால் புகை அடர்ந்து வெண்மையாகத் தெரிகிறது.

நீரில் சிறிதளவு பால் கலந்தால் நீலங் கலந்து தெரிவதும் இதனலே. புகையில் பெரிய கரித்துணுக்குகள் நிறைந்திருந் தால் ரயில் புகையைப் போல் கருமை யாகவே காணும்.

—✻—

நாடக மருத்துவம்

"உயிர்க்குறுதி பயக்கும் மருந்தினை உண்ண விரும்பாத ஒரு மகனுக்குச் சர்க்கரையினுள் அம்மருந்தினைப் பொதிந்து வைத்து உதவுகின்ற அன்புடை யாளன்போல, உயிர்க்குறுதி பயக்கும் உண்மையினை நவரசங்களுட் செறித்துவைத்து உதவும் நீர்மையது நாடகம். நாடகக்கவி தன்னை ஓர் வைத்தியன் என அறிதல் வேண்டும். நோயாளியிடத்துப் பொருளினைப் பெறுதல் கருதிப் பொருந்தாப் பண்டத்தை மருந்தெனக் கொடுக்கும் வைத்தியன் உளனுயின் அவனுல் விளையும் கேட்டுக்கு ஓர் அளவில்லை. காமக் கனலை மூட்டுதற்கு எண்ணிச் சிற்றின்பச் சரிதைகளை நாடகமாக்கியுதவும் போலி நாடகக் கவிகளால் நாட்டுக்கு விளைகின்ற கேடு மேற்குறித்த போலி வைத்தியனுல் விளைகின்ற கேட்டினைப் பார்க்கிலும் பல்லாயிர மடங்கு பெரிது."

— விபுலாநந்த அடிகளார்.

நூல் அரங்கு

டணாயக்கன்கோட்டை. ஆசிரியர்: *E. பாலகிருஷ்ண நாயுடு, B. A., B. L., கிடைக்கும் இடம்: 'நவ இந்தியா' வெளியீடு, பூ மே டு அஞ்சல், கோவை. விலை ரூ. 4–0–0.*

'டணாயக்கன் கோட்டை' எனும் இப் பெருநூல், ஒரு வரலாறு தழுவிய புதினம். இது, மைசூரில் சீரங்கப் பட்டினத்தைத் தலைநகராகக கொண்டு 18 ஆம் நூற்றாண்டிலே ஆட்சி செய்த ஃஅய்தர் அலி, திப்பு சுல்தான் ஆகியவரின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளது. இதில், மேற்குறிப்பிட்ட மன்னர் இருவரைப் பற்றிப் பள்ளியிலும் கல்லூரியிலும் படித்திராத பல வரலாற்று நிகழ்ச்சிகளை, ஆசிரியர் அரிதின் முயன்று பெற்றுச் சேர்த்துள்ளதைக் காணலாம்.

சொற்களில் சில திரிந்து பொருளற்ற சொற்களாக விளங்குதல் போல், இந்நூலின் தலைப்பும் பொருள் புரியாத ஒன்றாகக் காணப்படுகிறது. இதன் உண்மைச் சொல் நூலினிடையே கொடுக்கப்பட்டுள்ளது, ''தண்ட நாயக்கன் கோட்டை என்றும் தன நாயக்கன் கோட்டை என்றும் வழங்கப்பட்ட பெயரானது ஆங்கிலேயர் வாயால் டணாயக்கன் கோட்டை எனச் சொல்லப்பட்டு மாற்றம் அடைந்துள்ளது'' என்பதே அவ்வரிகள்.

இக்கோட்டை கி. பி. 14 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், ஃஒய்சள மன்னன் மூன்றாம் வெள்ளாளனின் சேனைத்தலைவனும் பெருமாள் தண்ட நாயக்கன் என்பானால், கட்டப்பட்டது. கோவை உள்ளிட்ட வடகொங்கு நாட்டைப் பல தலைமுறைகளாக ஆண்ட அரசர்களுக்குத் தலைநகரமாய் விளங்கியிருக்கின்றது. இது, பவானி நதியின் வடபக்கத்திலும், மொய்யாற்றின் தென்பக்கத்திலுமாக, இரண்டு நதிகளும் கூடும் [illegible]வாய்' என்ற கிராமத்திலிருந்து மேற்[illegible]லு மைல் தொலைவில் அமைந்திருந்தது. ஃஅய்தர் அலி, திப்பு சுல்தான் ஆட்சிக் காலத்தில் முதன்மையான இடம் பெற்று விளங்கியது. எனவே இக்கோட்டையின் பெயரே இந்நூலின் பெயராய் அமைந்தது பொருத்தமே.

கதைப் பாத்திரங்களின் வாயிலாக, அக்கால மன்னர், மக்கள் ஆகியோரின் வாழ்க்கையினை நுழைத்துத் திறம்பட எழுதியுள்ளார் ஆசிரியர். கதை அமைப்புச் சிறப்பாக வுள்ளது. இப்புதினம், படிப்போரின் உள்ளத்தை ஈர்ப்பதாய், பரபரப் நிகழ்ச்சிகளையும் நெருக்கடியான நிலமைகளையும், விரைந்து செல்லும் நடையும் கொண்டு இலங்குகிறது. பல கற்பனை நிகழ்ச்சிகள் ஒன்று சேர்க்கப்பட்டெழுதப் பட்ட போதிலும், வரலாற்றுக் குறிபபுக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டதென்பதை ஆசிரியர் இடையிடையே நினைவுறுத்துகிறார்.

இப்புதினத்தில், அக்காலப் பலமொழிகளையும் நாட்டுப் பாடல்களையும் கண்டின்புறலாம். புதிய உவமைகளின் நயம் கண்டு மகிழலாம், அக்காலத்திய புலிப்பொறி போன்ற பொறிகளைக் கண்டு வியக்கலாம்; வீரம்மாவைப் பற்றிப் படிக்கும் போதெல்லாம் வீரத்தைப் பெறலாம்; டணாயக்கன் கோட்டையைச் சேர்ந்த பாலராசா, தேவராசா, பசுவம்மா ஆகியவரைப் பற்றிய நிகழ்ச்சிகளால், நன்றி பாராட்டும் பண்பையும் சிறந்த நாட்டுப் பற்றையும் பெற்று உயர்வெய்தலாம். இலட்சுமி அம்மணி தோன்றும்போதெல்லாம் ஸ்ரீ ரங்கா, ஸ்ரீ ரங்கா எனக் கூறிக்கொண்டே பக்தியை யூட்டுகிறார்.

ஆனால், அதே நேரத்தில் கொலையாளி ஒற்றைக்கண் யாசின்கான், மதுவிரும்பி கரீம் சாயபு (திப்புவின் தம்பி), திவான் மீர்சடக், ஆகியோர் தோன்றும்போதெல்லாம், அவர்கள் இன்னும் ஒழியாதுள்ளனரே யென்ற சீற்றம் கலந்த வருத்தம் வந்து சேர்கிறது. இத்தகைய விருப்பு வெறுப்பைப் பார்த்திரங்கள் பால் கொள்ள வைபபது ஆசிரியரின் எழுத்துத் திறமையே யாகும். அதோடு இதில் மது விலக்கையும் நுழைத்து எழுதியுள்ளமையும் ஆசிரியரின் திறமையைக் காட்டி நிற்கிறது. திருக்குறள், திருக்குரான், பிரபந்தம் ஆகிய நீதி நூல்களின் கருத்துக்களை ஆங்காங்கே கலந்து செல்வது, ஆசிரியரின் அந்நூல்களில் உள்ள பயிற்சியினை எடுத்துக் காட்டுகிறது,

இப்புதினத்தில், வீரம், அவலம், நகை, அழுகை போன்ற சுவைகள் நிறைந்துள்ளன. வரலாறு தழுவிய புதினங்கள் அதிகமில்லை தமிழில், என்ற குறை இருந்துவரும் இக்காலத்தே ஆசிரியர் E. பாலகிருஷ்ண நாயுடு அவர்கள் இப்புதினத்தைத் தமிழுலகிற்குத் தந்தது போற்றத் தக்கது. இப் புதினத்தை வெளியிடுவதிலே வெற்றி பெற்ற ஆசிரியரிடமிருந்து இதைப் போன்ற வேறு புதினங்களை எதிர்பார்ப்பதில் வியப்பில்லை.

இது செய்தி

புதுத் தில்லி, அக். 1

மக்கள் விரும்பும் நூல்களுக்கு ஆதரவளிக்கும் திட்டத்தின்படி மததியக் கல்வித் துறையினர் மொழிவாரி நூல்களுக்கு ரூ. 500 வீதம் 40 பரிசுகள் வழங்கியுள்ளனர்.

தமிழ் மொழியில் திரு. பி. ஆர். கிருஷ்ண மூர்த்தியின் ''கிருமிகளின் திருவிளையாடல்'', திரு. எஸ். சீனிவாசனின் ''எல்லோரும் ஓர் நிறை'', அ. மு. பரமசிவானந்தத்தின் ''கூடி வாழ்'' ஆகிய நூல்கள் பரிசு பெற்றவை.

ஆஸ்லோ, அக். 4

கடுமையான குளிர் நிலையை மனிதனுடைய உடல் இயற்கையில் எவ்வளவு தூரம் தாங்க இயலுமென்பதைச் சோதிக்க நார்வீசிய இளைஞர் ஐவர் பனிமலைப் பகுதிகளில், ஆதிவாசிகள்போல் சுற்றித்திரிந்து கண்டறிய முற்பட்டிருக்கின்றனர்.

லண்டன், அக். 5

குழந்தை பிறப்பதற்கு முன்பே ஆணு, பெண்ணு என்பதைக் கண்டுபிடிக்கும் முறையை இஸ்ரேலில் சில மருத்துவர்கள் கண்டிபிடித்திருப்பதாக ஆங்கிலச் செய்தித் தாள் ஒன்று அறிவிக்கிறது.

சென்னை, அக். 6

பல்கலைக் கழகக் கூட்டத்தில் பயிற்சி மொழி தாய் மொழியாகவே இருத்தல் வேண்டும் எனச் சிறந்த கல்வியாளரும், காங்கிரஸ் பொதுச் செயலாளருமான திரு. நாராயண் குறிப்பிட்டார்.

பிஷாவர், அக். 7

உலகிலேயே அதிகம் நாட்கள் உயிரோடு வாழ்ந்த முதுபெரும் கிழவர் பாகிஸ்தானில் நேற்றுக் காலமானுர். அவரது வயது 180. அவரது தந்தையார் 200-வது வயதில் காலமானுராம்.

பவானி, அக். 8

முன் காலத்திய நாணயங்கள் எனக் கருதப்படும் தங்கக் காசுகள்கொண்ட புதையல் ஒன்றை விளையாடிக்கொண் டிருந்த குழந்தை யொன்று கோபியை அடுத்த கணக்கன்பாளையம் கிராமத்தில் கண்டெடுத்தது.

சான்பிரான்சிஸ்கோ, அக். 9

தனிப்பட்ட உலோகக் கலவையாலான கடிகாரக் கம்பிச் சுருளை ஒரு மனிதனின் இதயத்தில் 6 மாதங்களுக்கு முன்பு பொருத்தியதாகவும் அவர் தற்போது நலமே வாழ்ந்து வருவதாகவும் இங்கு ஒரு மருத்துவக் குழு தெரிவித்தது.

பிரிஸ்பேன், அக். 11

புதியதான ஒரு போர்க் கருவியை தயாரிக்கும் முயற்சியில் ஆஸ்திரேலியா ஈடுபட்டிருப்பதாக அமைச்சர் திரு ஹோவார்ட் குறிப்பிட்டார். அந்த ஆயுதம் ஒரு கண்டத்திலிருந்து மற்ருெரு கண்டத்திற்குப் பாயும் சக்தியுடையது என்றும், போர் ஏற்படாது தடுப்பதற்கே இவ்வாயுதம் பயன்படுத்தப்படும் என்றும் அவர் கூறினுர்.

மதுரை, அக். 13

தமிழ் நாடு எனப் பெயரிட வேண்டும் என்றும், காந்திய வழியில் அரசினர் நடக்க வேணடும் என்றும் உண்ணுவிரதம் நோற்ற உத்தமர் சங்கரலிங்க நாடார் 77 நாட்களுக்குப்பின்னர் இன்று காலமானுர்.

மாஸ்கோ. அக். 15

எரிமலையிலிருந்து கிடைக்கும் சக்தியைப் பயன் படுத்தி மின்சார சக்தியை ஏற்படுத்த சோவியத் நாட்டினர் முயன்று வருகின்றனர். எரிமலைக்கு அடியில் குமுறும் கொடிய வெப்பம் வாய்ந்த நீராவியைக் குழாய் மூலமாகக் கொண்டுவரப் போகின்றனர். இந்தக் குழாய் பூமிக் கடியில் 600 அடி ஆழத்தில் புதைககப்படும். மற்ற வழிகளில் கிடைக்கும் மின்சாரத்தைவிட குறைந்த விலையில் இந்த மின்சாரத்தைப் பெற வாய்ப்புக் கிடைக்கும்.

டால்டன்கஞ்சு, அக். 18

இதுவரை பாரத நாட்டில் ஐந்நூருயிரம் பேர்களிடமிருந்து அரைக் கோடி ஏக்கரா நிலம் நிலக் கொடையாகக் கிடைத்திருக்கிறதென்று விஞேபா அடிகளின் செயலாளர் இன்று தெரிவித்தார்.

செங்கற்பட்டு, அக். 18

பிரிட்டனின் முன்னுள் முதலமைச்சர் ஆட்லி பெரும் புதூர் வட்டம் மேலப்பபடப்பைக் கிராமத்தில் இரண்டு வார்த்தைகள் தமிழில் பேசினுர். ''ரொம்ப சந்[illegible]ஷம்.''!

சென்னை, அக். 22

காலம் சென்ற தியாகி சங்கரலிங்க நாடாருக்கு அஞ்சலிசெய்து திலகர் கட்டத்தில் சர்வ கட்சிக் கூட்டம் நடைபெற்றது. சென்னை மாநிலம் என்பதைத் தமிழ் நாடு எனப் பெயரிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேறிற்று.

பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை

டாக்டர்
மு. வ.

13

திருமுருகாற்றுப்படையின் தொடக்கத்தில் இயற்கை வருணனை இருப்பது போலவே, அதன் முடிவிலும் இயற்கை ஓவியம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இயற்கையொடு தொடங்கி அதனுள் முடிவுறுகின்றது முருகாற்றுப்படை. இருபது வரிகளுக்கு மேலாக உள்ள சொல்லோவியத்தில் அருவியின் எழிலோவியம் அருமைபெறத் தீட்டப்பட்டுள்ளது.* ஆங்கிலம் பயின்றோர் டென்னிசன் என்னும் கவிஞரின் நீரோடை (The Brook) என்னும் கவிதை இசையான் நிறைந்தது என்பர்; இயற்கை எழிலார்ந்த தாள ஒழுங்கு டென்னிசன் தேனிசையிலே கேட்கும் என்பர். பெருமலை இழிதரும் அருவியின் ஓவியத்திலே இயற்கை யன்னையின் ஓலக்கக் காட்சியை விளக்குகின்ற நக்கீரனாரின் திறம் ஒப்பு நோக்கி மகிழுதற்கு உரியது.

மலைவீழ் அருவியிலே மனந்தோயப் பெற்ற நக்கீரர்க்கு, பெருவளம்பெற்ற காவிரியின் காட்சியும் இனித்தது. மலையிலிருந்து புறப்பட்டு நாடெல்லாம் வளமாக்கி இறுதியில் கடற்கரையை வருத்தும் அப்பேராற்றின் நீண்ட வரலாற்றை ஒரு சில தொடர்களிலே சுட்டிக் காட்டுகிறார் ஒரு பாடலில்.

மலைமிசைத் தொடுத்த மலிந்துசெலல் நீத்தம்
தலைநாள் மாமலர் தண்டுறை தயங்கக்
கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாறு

(அகம். 126)

[தொடுத்த : தொடர்புற்ற — மலிந்துசெலல் நீத்தம் : பெருகி ஓடும் வெள்ளம்—தலைநாள் மாமலர் : முன்னாளில் மலர்ந்த சிறந்த மலர்கள் — தயங்க : விளங்க — மெலிக்கும் : கரைக்கும், அரிக்கும்]

தன் பெயருக்கு ஏற்பக் காக்களினூடு விரிந்து பரந்து வருவது காவிரி; அச் சோலைகளின் நறுமலரைத் தன் மேனியெல்லாம் இட்டு மறைத்துத் துறைதொறும் குளிர்ச்சி யூட்டி நடக்கும் காவிரி நங்கையின் சொல்லோவியம் இது. நாடெல்லாம் வளமாக்கி—வயலாக்கி—வந்தபின்னரும் கடற்கரையினை அரிக்கும் அளவுக்கு நீர்ப்பெருக்கு நிறைந்ததாகவே அந்நாளில் காவிரி விளங்கியிருக்கிறது.

இயற்கை அரங்கிலே கணந்தோறும் நிகழும் இயக்கங்களை மிகக் கூர்ந்து கவனித்தவர் நக்கீரர்.

.... ஈங்கை
நற்றளிர் நயவர நுடங்கும்
முற்றா வேனில்

(நற். 86)

என்று [illegible]குறிப்பிடும் இயக்கச் சொல்லோவியத்தில் **நயவர நடுங்கும்** (காண்போருக்கு விருப்பமூட்டும் வகையில் நடுங்குகின்ற என்னும் தொடர் எழில்பெற அமைந்துள்ளது.

* முருகு. 295-316

ஈங்கையின் நல்ல தளிரைக் காண்போர் அதன் அசைவிலே உள்ளம் பறிகொடுப்பர் என்று சொல்லும் நக்கீரர், அதன் அசைவிலே தம்மை இழந்த ஒரு செயலையே நினைவூட்டிக் கொள்கிறார்.

வேகத்தாலும் முழக்கத்தாலும் விலங்குகளை அஞ்சி நடுங்கச் செய்யும் அருவியின் அசைவு, மலை உச்சியில் அசைந்தாடும் வெள்ளைத் துகிலின் அசைவுபோல் உள்ளதாக ஓர் இடத்தில் பாடுகின்றார். +

இற்றி மரத்தின் நெடிய விழுது அசைகின்றதை ஒரு பாடலிலே காணுகின்றோம். ஆடுகின்ற இற்றி விழுதின் கீழே உள்ளது ஒரு கரும்பாறை; அதனைத் தொட்டாற்போல் தொங்குகிறது இற்றியின் விழுது. இவ்விழுதினைக் காற்று அசைத்து விடுகின்றது. காற்றினால் அசையும் இற்றியின் விழுது, கரிய யானையின் அசையும் துதிக்கைபோல் காணப்படுகின்றதாம். □

நெடுநல்வாடையில் வரும் நள்ளிரவுக் காட்சி ஒன்று இங்கே கருதத் தக்கது. வாடைக் காற்றினால் அசைக்கப்படும் விளக்குச் சுடரின் அசைவினை இங்கே காணலாம். வாடைக் காற்று விட்டு விட்டு வீசுகின்றது; அது படுந்தொறும் படுந்தொறும் சுடர் ஆடுகின்றது; வாடை மோத மோதச் சுடர் தெற்கு நோக்கிப் படிந்து படிந்து வணங்கி எழுகின்றது. வாடையின் இயக்கத்துக்கு ஏற்பத் தன் இயக்கத்தையும் அமைத்துக் கொள்ளும் சுடர் இடையிடையே பேரொளி கான்று ஒளிர்கின்றதாம். காற்றிடையே அமைந்த சுடரின் நடனத்தைக் கண்டவர்க்கு நக்கீரனாரின் சொல்லோவியம் நல்விருந்தாக இருக்கும்.

வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கித்
தெற்கேர்பு இறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கின் பருஉச்சுடர் அழல

(நெடுநல். 173–175)

[வடந்தைத் தண்வளி : வடக்கேயிருந்து வீசும் குளிர்ந்த காற்று — நுடங்கி : அசைந்து — தெற்கு ஏர்பு இறைஞ்சிய : தென்திசை நோக்கிச் சாய்ந்த — தலைய : தலையினை உடைய வாய் — பாண்டில் விளக்கு : விளக்கு — பருஉச் சுடர் : பெரிய சுடர் — அழல : எரிய]

\+ பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு.........
நாக நறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்ப.........
இழுமென இழிதரும் அருவி — திருமுருகு. ...க, 216

□ *குறுங்கால் இற்றிப் புன்தலை நெடுவீழ்*
இரும்பிணர்த் துறுகல் தீண்டி வழிபொரப்
பெருங்கை யானை நிவப்பின் தூங்கும் — அகம். 57

மழைக் காலத்தில் மரங்களின் இலை நுனிகளிலே ஒட்டியும் ஒட்டாமலும் தொங்கிச் சொட்டுச் சொட்டாய் விழும் காட்சியை மிக ஈடுபட்டுக் கவனித்திருக்கிறார் நக்கீரர். அந்த இயக்கத்தை—மெல்லிய நுண்ணிய இயக்கத்தை—அழகாகக் கலைநலம் பொலிய ஓர் இடத்தில் அமைத்துள்ளார். ○

நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று நெஞ்சுரனொடு பேசியவராக மட்டும் நம் நினைவிலே நிலவும் நக்கீரர், சங்க இலக்கியப் பின்னணியில் நோக்குமிடத்து இயற்கையில் தோய்ந்து, ஆங்கு நிகழும் பல்வேறு இயக்கங்களிலே கலந்து, கலையிலே செழித்த கவிதைச் செல்வராகவே தோன்றுகிறார்.

பரணர்: × மருத நிலக் காட்சிகளில் அளவிறந்த ஈடுபாடும் நுண்ணிய திட்பம் செறிந்த தெளிவும் உடையவர் பரணர். எனினும், அவருடைய பரந்த பாவன்மையுள் முகில் தவழும் மலைச் சிகரம் முதல் அலைமோதும் கடற்கரை வரையில் பரந்துபட்டு விளங்கும் எல்லாக் காட்சிகளும் அடங்கியே உள்ளன.

பரணரின் சொல்லோவியங்களுள் ஒன்றில் ஓர் எருமையின் பெருமித நடையைக் காணுகின்றோம். கழுநீர் மலரும் தாமரைப் பூவும் மேய்ந்த அந்த எருமை களம் புகும் போர்வீரர் போலப் பெருமிதமாக நடையிட்டு, குளத்தின் அருகிருக்கும் வெண்மணற் குவியலில் துயில் மேற்கொள்கின்றது. ≠

நான்கு சொல்லோவியங்களில் தாமரையும், ● மூன்றில் ஆம்பலும், < அழகுபட வருணிக்கப்படுகின்றன. மிகச் சிறிய மலர்களான முள்ளி, ÷ மருது, □ வேம்பு★ ஆகியவற்றையும் பரணர் எழில் சிறக்கப் பாடியுள்ளார். நாரை :: முதலான பறவைகளும், வாளை ✓ முதலிய மீன்களும் அவருடைய சொல்லோவியங்களில் இடம்பெறுகின்றன.

○ நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க — நெடுநல். 27-28

× பரணரால் பாடப்பெற்ற பாடல்களில் இன்று நமக்குக் கிடைப்பவை 85 பாடல்கள். விவரம் வருமாறு; அகம்: 6, 62, 76, 116, 122, 125, 135, 142, 148, 152, 162, 178, 181, 186, 196, 198, 208, 212, 222, 226, 236, 246, 258, 262, 266, 276, 322, 326, 356, 367, 372, 376, 386, 396; குறுந்: 19, 24, 36, 60, 73, 89, 120. 128, 165, 199, 258, 292, 298, 328, 393, 399; நற்: 6, 100, 201, 247, 260, 265, 270, 280, 300, 310, 350, 356; பதிற்: 41–50; புறம்: 4, 63, 141, 142, 144, 145, 336, 341, 343, 348, 352, 354, 369

≠ கழுநீர் மேய்ந்த கருந்தாள் எருமை
பழனத் தாமரைப் பனிமலர் முனைஇத்
தண்டுசேர் மள்ளரின் இயலி அயலது
குன்றுசேர் வெண்மணல் துஞ்சும் — நற். 260

கம். 6, 186; நற்: 300, 310
ற். 100, 280, 300
÷ அகம். 236; □ நற். 350; ★ குறுந். 24
:: அகம். 276; குறுந். 128; நற். 350, 356
✓ அகம். 6, 142, 152, 376; நற். 310

தென்திசைக் கடலில் மீன் உண்டு. மாலைக் காலத்தில் குஞ்சுகளைக் காணும் விருப்புடன் இமயம் நோக்கிப் பறக்கும் அன்னத்தை அவர் பாடலில் காணலாம். △ இடையே காவிரியில் நீர் பெருக்கெடுத் தோடும் வெள்ளத்தையும் காணலாம். ±

பரணரின் இயற்கை ஓவியங்களில் இயக்கமே கவிஞரின் கருத்தைக் கவர்ந்துள்ளது என்பதை உணரலாம். கருங்கால் எருமை கழுநீரும் தாமரையும் மேய்ந்து போர்க்கள வீரன்போலப் பெருமித நடையுடன் இயங்குகின்றது. ∞ இது முன்னே கண்டோம். நீர்த்துறையில் ஒரு வாளை மீன் நீர்பிறழப் புரள்கின்றது. அதன் இயக்கத்தால் யானைக் காதுபோல் விளங்கும் தாமரை இலை அசைந்து ஆடுகின்றது; நீர் பருகும் துறையில் இறங்கிய மகளிர் அஞ்சி ஓடுகின்றனர்:

விளக்கின் அன்ன சுடர்விடு தாமரைக்
களிற்றுச்செவி அன்ன பாசடை தயங்க
உண்துறை மகளிர் இரியக் குண்டுநீர்
வாளை பிறழும்

(நற். 310)

[சுடர்விடு : ஒளிவிடுகின்ற — பாசடை : பச்சை இலை — தயங்க : அசைய — உண்துறை : நீர் பருகும் துறை — இரிய : (அஞ்சி) ஓட — குண்டு நீர் : நீர் மிகுந்த (ஆழமான) பொய்கை]

தாமரையின் இலை அசைவது மற்றொரு பாடலிலும் இங்கு வந்ததுபோலவே காணப்படுகின்றது. நீர்ப் பெருக்கின்மேல் நீண்ட காம்போடு உயர்ந்து விளங்குகின்றது தாமரை இலை. நீர் நிலையே துளங்கும்படி காற்று அடிக்கின்றது. அப்போது தாமரை இலையும் அசைகின்றது. காற்றால் அலைக்கப்படும் தாமரை இலை, பெரிய களிற்றின் காதுபோல் ஆடுகின்றது எனப் பாடுகிறார் பரணர். ∢

காற்றின் விரைந்த இயக்கத்தால் வளைந்து பணியும் ஆம்பல் மலர்த் தொகுதியின் காட்சி மிகக் கவர்ச்சியூட்டும் வகையில் ஒரு பாடலில் திகழ்கின்றது. காற்று எற்றுதலால் அசைந்து வளைந்து அருகே உயர்ந்து நிற்கும் தாமரையின் திருமுன்னே பணிகின்றன

△ நிலம்தாழ் மருங்கின் தென்கடல் மேய்ந்த
இலங்குமென் தூவிச் செங்கால் அன்னம்
பொன்படு நெடுங்கோட்டு இமயத்து உச்சி
வான்அர மகளிர்க்கு மேவல் ஆகும்
வளராப் பார்ப்பிற்கு அல்கிரை ஒய்யும்
அசைவில் நோன்பறை — நற். 356

± சிறைப்பிறந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்
அந்தண் காவிரி............ — [illegible]

∞ நற். 260

∢ தாமரை
நீர்மிசை நிவந்த நெடுந்தாள் அகல்இலை
இருங்கயம் துளங்கக் கால்உறு தோறும்
பெருங்களிற்றுச் செவியின் அலைக்கும் — அகம். 186

ஆம்பல் மலர்கள், இக் காட்சிக்குப் பிறிதொரு காட்சியினை உவமை யாக்கியுள்ளார் பரணர். அரசிளங் குமரியின் சினத்துக்கு ஆற்ருது, அவள் தோழியரின் கூட்டம் கைகுவித்துத் தலை தாழ்த்து வணங்குவதுபோல இருக்கின்றது ஆம்பல்கள் தாமரைக்குப் பணியும் கோலம்:

சுடர்த் தொடிக் கோமகள் சினந்தென அதனெதிர்
மடத்தகை ஆயம் கைதொழு தாஅங்கு
உறுகால் ஒற்ற ஒல்கி ஆம்பல்
தாமரைக்கு இறைஞ்சும்

(நற். 300)

[சுடர்த் தொடி : ஒளிவிடும் வளையல் – கோமகள் : இளவரசி – மடத்தகை ஆயம் : இளமை (த் தன்மை) யுடைய தோழியர் கூட்டம் – உறு கால் : மிகுந்த காற்று – ஒற்ற : மோதுதலால் – ஒல்கி : குவிந்து – இறைஞ்சும் : வணங்கும்]

மெல்லியலாரின் குழுவும் அவரினும் மெல்லிய மலரின் ஈட்டமும் பணிகின்ற இரு காட்சிகளையும் இணைத்து நோக்குங்கால், இங்கு நாம் கண்ட பாடலின் இனிமை மிகுகின்றது.

கருங் கிளைகளுடைய மாமரத்தின் புதுவதாகப் பூத்த மலர்கள், துளிகள் ஒன்றுடன் ஒன்று கலந்து சொரியும் மழைத் தூவல்போல் உதிர்ந்து பரவுவதை ஒரு பாடலில் காணலாம்.* நெல் அரியும் உழவர் தண்ணுமை என்னும் முழுவினை முழக்குகின்றனர். அவ் வொலிக்கு அஞ்சிய பறவைகள், தாம் தங்கியிருந்த மருத மரத்தை விட்டுப் பறக்கின்றன. அவை திடுமென எழுந்ததால் அசையும் மருத மரத்தின் கிளைகளி லிருந்து பூந்துணர்கள் உதிர்கின்றன.° இஃது ஒரு சொல்லோவியம்.

ஒரு நாரையின் இயக்கம் உவமையொடு வருகின்றது அகநானூற்றில். நீர் நிறைந்த பொய்கையை நாடி வருகின்றது நாரை; மீன் உணக் கிடைக்கும் அன்ருே? வளமான வாளைமீன் உண்ண விரும்புகின்றது அந்த நாரை; அதன் கண்ணில் ஒரு வாளை மீன் புலப்படுகின்றது. நாரை மெல்ல மெல்லக் காலெடுத்து வைத்து, ஓசை எழாமல் இயங்குகின்றது. ஒலி கேட்டு வாளை தப்பிவிடுதல் கூடாதே என்பது அதன் அச்சம். காலின் ஓசை எழாமல் இயங்கும் அந்த நாரையின் இயக்கம் எவ்வாறு இருக்கின்றது என்பதனைப் பரணர் ஓர் உவமைவாயிலாக விளக்குகின்ருர். காவல் மிக்க ஒரு வீட்டில் புகுகின்ற கள்வன் எவ்வாறு மெல்லென அடியெடுத்து வைத்து நடப்பான்! அவனைப்போலவே பக்குவமாக — தளர்நடை இடுகின்றது வாளைக்கு 'வீங்கிய', நாரை:

நீள்இரும் பொய்கை இரைவேட் டெழுந்த
[illegible]ளை வெண்போத்து உணீஇய நாரைதன்
அடிஅறி வுறுதல் அஞ்சிப் பைப்பயக்

கருங்கோட்டு மாஅத்து அலங்குசினைப் புதுப்பூ
மயங்குமழைத் துவலையின் தாஅம்

— அகம் 236

வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்
[illegible]மனைப் பல்புள் இரியக் கழனி
[illegible]வாங்குசினை மருதத் தூங்குதுணர் உதிரும்

தமிழ்நாடு ... காப்பக ... சென்னை-600

கடிஇலம் புகூஉம் கள்வன் போலச்
சாஅய் ஒதுங்கும்...............

(அகம். 276)

[நீள் இரும் : நீண்ட, பெரிய — இரை வேட்டு எழுந்த வாளை வெண்போத்து : இரையை விரும்பிப் புறப்பட்ட ஆண் வாளையை — உணீஇய : உண்பதற்காக — பைப்பய : பையப் பைய – கடிஇலம் : காவல் உடைய வீடு – சாஅய் ஒதுங்கும் : தளர்ந்து நடக்கும் (விறைப்பு இல்லாமல் நடக்கும்)]

சிறுமீன் இரைதேடிப் பெருவாளை புறப்பட, அதை இரையாகக் கொள்ளக் கருதிப் பின்னே நடக்கிறது நாரை! என்னே இயற்கைக் கூத்து!

இரு மீனின் பாய்ச்சலை இனிக் காணலாம். இருமீனின் துள்ளுதலால் வள்ளைக் கொடிகளெல்லாம் பின்னிக்கொண்டன; வளமிக்க இதழினையுடைய நெற்கதிரின் இறுகிய பிணிப்புத் தளர்ந்து விரிந்தது:

அந்தூம்பு வள்ளை அழற்கொடி மயக்கி
வண்தோட்டு நெல்லின் வாங்குபீள் விரியத்
துய்த்தலை முடங்கிருத் தெறிக்கும்

(அகம். 376)

[அம் தூம்பு : அழகிய துளையுடைய – வள்ளை அழற் கொடி (அழல் வள்ளைக்கொடி) மயக்கி: ஒளி பொருந்திய வள்ளைக் கொடிகள் பின்னுமாறு செய்து – வண்தோடு : வளமான இதழ்– வாங்கு பீள் : வளைந்த கதிர் – துய்த்தலை : துய்யினைத் தலையிலேயுடைய (பஞ்சின் நுனி போல் இருப்பது துய்) – முடங்கு இரு : வளைந்துள்ள இருமீன் - தெறிக்கும் : பாயும்.]

அகநானூற்றில் உள்ள மற்ெருரு பாடலில் முதிர்ந்து கனிந்த மாங்கனி நீர் நிறைந்துள்ள தடாகத்தில் வீழும் ஒலியைக் கேட்கலாம். 'துடும்' எனும் ஒலியுடன் வீழ்கின்றதாம் அக்கனி.*

இதுகாறும் கண்டவை மருதக் காட்சிகள். இவ்வண்ணமே குறிஞ்சிக் காட்சி களிலும் இயக்கத்தின் சிறப்பே பொலிவுறுதல் காண்போம்.

தண்மையும் மணமும் தங்கி நிலவும் மலைச்சாரல்; ஆங்கே ஓங்கி உயர்ந்துள்ளன மரங்கள். அம்மரங்களை வேரோடு பிடிங்கிச் சாய்த்துக் கெடுத்து விரைகின்றது ஒரு மத யானை. வண்டுகள் மொய்க்கும் அளவுக்கு மதநீர் பொழிகின்றது அந்த யானையிடம். அவ்வெறி கொண்ட யானை – நீண்டுயர்ந்த தந்தத்தை உடைய யானை – மாங்களைப் பெயர்த் தெடுத் தெறிந்து சினம் மிக்க புலியொடு முரணி அதனையும் குத்
புலியின் வெற்றிச் சிறப்பெலாம் வீணுகுமாறு அதனைத் தொலைத்த
செயல் – மதவெறி – அவ்வளவோடு நிற்கின்றதோ? இல்லை. சிறு
பெரிய புனத்துள் நுழைகின்றது! சிலம்பில் வளர்ந்த மரங்கள் பட்டபாடு

---

* *கொக்கின் உக்கு ஓழிந்த தீம்பழம் கொக்கின்*
கூம்புநிலை அன்ன முகைய ஆம்பல்
தூங்குநீர்க் குட்டத்துத் துடுமென வீழும் —அகம்.

புலியின் விறல்நிலே பட்டபாடு என்ன! மரங்களைச் சிதைத்துப் புலியைத் தொலேத்துச் சின்னஞ்சிறு தினே விளையும் புனத்துளே புகுகின்றது மதயானே! எனின், தினேப் புனத்தின் நிலே என்ன ஆகுமென்று சொல்லவும் வேண்டுமோ!

வண்டுபடு கடாஅத்து உயர்மருப்பு யானே
தண்கமழ் சிலம்பின் மரம்படத் தொலேச்சி
உறுபுலி உரறக் குத்தி விறல்கடிந்து
சிறுதினேப் பெரும்புனம் வவ்வும்

(அகம். 148)

[வண்டு படு கடாஅத்து உயர் மருப்பு யானே : வண்டு மொய்க்கும் மதநீரினேயும் நிமிர்ந்த தந்தத்தினேயும் உடைய யானே – தொலேச்சி : சிதைத்து – உறு புலி : முரணிய புலி – உரற : கதறும்படி – விறல் கடிந்து : வெற்றியை நீக்கி]

மலேயுச்சி யிலிருந்து வீழும் அருவி, களிற்றின் மீது எடுத்துச் செல்லும் வெற்றிக் கொடிபோல் காணப்படுவதாக ஒரு பாடலில் கூறுகிருர் பரணர்.≠ இவ்வுவமையுடன் நக்கீரரின் உவமை ஒப்பிட்டுணரத்தக்கது.△ பாறையை ஒட்டித் துயில்கின்றது ஒரு பெருங்களிறு. அப்பாறையில் ஊர்ந்து படரும் மாணேக் கொடிக்குக் களிறுக்கும் கற்பாறைக்கும் வேற்றுமை தெரியவில்லே. களிற்றின் மீதும் படர்கிறது மாணேக்கொடி.○

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் மலேப் பன்றியின் அன்ருட நிகழ்ச்சிச் சித்திரம் ஒன்று தீட்டப்பட் டுள்ளது. அவ்வோவியத்தில் எழிலும் முழுமையும் இயையப்பெற் றுள்ளன. மலேயிடை இலங்கும் சுனேயிலே நீர் அருந்துகின்றது அப்பன்றி; நீலமணியென ஒளிரும் அகன்ற இலேகளேயுடைய சேம்பின் கிழங்கைத் தின்னுகின்றது. பின்னர்த் தீனி தின்ற நிலேயில் ஒரு பெரும் பாறை மீது இறங்கி வருகின்றது. அப்பாறையை நோக்கின் துயில்கின்ற ஒரு பெரும் பிடிபோல் உள்ளது. அந்தப் பாறையில் மலரொடு பொலிந் திருக்கும் கூதளஞ் செடியினே உராய்ந்துகொண்டு போகிறது பன்றி; கூதள மலர்களின் பொன்னிறத் தாதுகள் கருநிறப் பன்றியின் மேனியிலே ஆங்காங்கே ஒட்டித் திகழ்கின்றன. பொன்னின் மாற்று உரைத்துப் பார்க்கும் கட்டளேக் கல்லே இக்காட்சி நினேவுறுத்துகின்றது. கடைசியாக அந்தப் பன்றி தினேக் கதிரை மேய்ந்து அமைதியாகத் தூங்குகின்றது.

வயிரத் தன்ன வைஏந்து மருப்பின்
வெதிர்வேர் அன்ன பரூஉமயிர்ப் பன்றி
பறைக்கண் அன்ன நிறைச்சுனே பருகி
நீலத் தன்ன அகல்இலேச் சேம்பின்

...ணி வெல்கொடி கடுப்பக் காண்வர
...றுவன இழிதரும் உயர்ந்துதோன்று அருவி — அகம். 162

...லின் நுடங்கி...... இழிதரும் அருவி —முருகு. 296 – 316
...ந் நூல் பக். 98 காண்க)

...கல் அயலது மாணே மாககொடி
...நசுகளிறு இவரும் —குறுந். 36

பிண்டம் அன்ன கொழுங்கிழங்கு மாந்திப்
பிடிமடிந் தன்ன கல்மிசை ஊழ்இழிபு
யாறுசேர்ந் தன்ன ஊறுநீர்ப் படாஅர்ப்
பைம்புதல் நளிசினைக் குருகுஇருந் தன்ன
வண்பிணி அவிழ்ந்த வெண்கூ தாளத்து
அலங்குலை அலரி தீண்டித் தாதுஉகப்
பொன்உரை கட்டளை கடுப்பக் காண்வரக்
கிளைஅமல் சிறுதினை விளைகுரல் மேய்ந்து
கண்இனிது படுக்கும்

(அகம். 178)

[வை : கூர்மையான – ஏந்து : நிமிர்ந்த – வெதிர் வேர் : மூங்கில் வேர் – பரூஉ : பருத்த – பறைக் கண் : பறை என்னும் முழவின் கண் (முரசின் நடுவே வட்டமாக உள்ள பகுதி) – நீலம் : நீல மணி – மாந்தி : உண்டு – பிடி மடிந்தன்ன : பெண் யானை செயலற்றுத் கிடந்ததைப் போல – ஊழ் இழிபு : முறையே (அதாவது எவ்வகையான முயற்சியும் இன்றி) இறங்கி – படாஅர் : புதர் – புதல் : புதர் – நளிசினை : செறிந்த கிளைகளில் – வண்பிணி அவிழ்ந்த வெண் கூதாளத்து : முகை மலர்ந்த வளமான வெண் கூதாளஞ் செடியின் – அலங்குகுலை அலரி : அசைகின்ற கொத்தாகவுள்ள மலர் – கடுப்ப : போல – காண்வர : அழகு தோன்ற – கிளை அமல் : கிளைத்தல் (செழித்து வளர்தல்) மிக்க – குரல் : கதிர் – இனிது கண்படுக்கும் : இனிமையாகத் தூங்கும்]

இந்தப் பதின்மூன்று வரிகளிலே ஒரு பன்றியின் ஓவியம் ஒன்பது உவமைகளுடன் தீட்டப் பட்டுள்ளது. அழகுக்கு அழகு செய்யும் திறம் இது.

நெய்தல் நிலத்துச் சொல்லோவியங்களிலும் இவ்வாறே செயலும் இயக்கமும் நிறைந்த காட்சிகளைக் காணலாம். இருமீன்களின் கூட்டம் ஒலி பெருக்கும் கடலினிடை இயங்கும் கப்பல் சிதையுறுமாறு தாக்குவதாக ஒரு பாடலில் பாடுகிறார்*. சின்னஞ் சிறு மலர்களை உடையது ஞாழல்; அதன் வேரிலே ஒரு நண்டு தன் வளையை அமைத்துள்ளது அந்த நண்டு வளை சிதைவுறுமாறு மோதித் தாக்குகிறது கடல்; முரசுபோல் முழங்கும் கடலின் இந்த அழிவுச் செயலைக் குறுந்தொகையில் காணலாம்:

சிறுவீ ஞாழல் வேரளைப் பள்ளி
அலவன் சிறுமனை சிதையப் புணரி
குணில்வாய் முரசின் இரங்கும்

(குறுந். 328

[வீ : மலர் – அலவன்:நண்டு – புணரி: அலைகள் - குணில்:குறுகிய தடி - இரங்கும்: ...

* இரங்குநீர்ப் பரப்பின் ... கானலம் பெருந்துறைத்
தனந்தரு நன்கலம் சிதையத் தாக்கும்
சிறுவெண் இறவு ...
— அகம் 152

211747